# தமிழருவி



தமிழ் மன்றம்

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி

கொழும்பு.

# இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி

# தமிழ் மன்றம்

## உத்தியோகத்தர்கள் 1974—1975

*காப்பாளர் :*

திரு. கே. எம். டி. பெரேரா, (கல்லூரி அதிபர்)
*B. Com. (Hons.), Certificate in Supervisory Training (O. T. C. A.) Japan, Dip. in Ed. (Administration) U. K.*

*உபகாப்பாளர்கள் :*

திரு. சி. மாணிக்கவாசகர் (விரிவுரையாளர்)
*B. Com. (Lond.) M. B. A. (Vidyodaya)*

திரு. பொ. சங்கரப்பிள்ளை (விரிவுரையாளர்)
*B. A. (Lond.), B. Com. (Lond.)*
*M. Sc. (Econ.), (Lond), A. M. Inst. T.*

*தலைவர் :*

செல்வன் வை. பொ. கணேசானந்தன்

*உப தலைவர் ;*

செல்வன் ந. பாஸ்கரன்

*செயலாளர் ;*

செல்வன் எஸ். ஜி. நிர்மலானந்தன்

*உப செயலாளர் ;*

செல்வன் எம். எஸ். எம். மஃரூப்

*இதழாசிரியர் :*

செல்வன் வீரகத்தி கதிரமலை

*பொருளாளர் :*

செல்வன் த. நியூட்டன் ஞானச்சந்திரன்

*இலக்கியச் செயலாளர் :*

செல்வன் க. கோபாலன்

*செயற்குழு உறுப்பினர்கள் :*

செல்வி சந்திரா முத்துக்குமாரசுவாமி
செல்வி பிரமிளா ஜோன்பிள்ளை
செல்வன் செ. ஜெயராஜசிங்கம்
செல்வன் எஸ். பத்மராஜா
செல்வன் மு. அ. ல. மு. சலீம்

*விவாதக்குழு :*

செல்வன் ந. இராஜேந்திரன் (தலைவர்)
செல்வன் எஸ். ஜி. நிர்மலானந்தன்
செல்வன் க. பொன்னுத்துரை
செல்வன் ரி. ஜோதிராஜ்

# தமிழருவி

## (THAMIL ARUVI)

ஐந்தாவது இதழ்

1974 1975

ஒளிசேர் தமிழை விழிபோற் காப்போம்

இதழாசிரியர் :

வீரகத்தி கதிரமலை

வெளியீடு:

தமிழ் மன்றம்:
இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி
கொழும்பு-10.

*Published by* :

THAMIL MANTRAM
Sri Lanka Technical College
COLOMBO-10

## கூட்டுறவுக் கைத்தொழில்கள்

சிறந்த தரமான பொருட்களைக் குறைந்த விலையில் வழங்குகின்றன.

யூனியன் உடைகள்
(சிறுவர்களுக்கும் வளர்ந்தோருக்கும்)

யூனியன் பீடி

யூனியன் நீல சவர்க்காரம்

யூனியன் நல்லெண்ணெய்

உற்பத்தியாளர்கள்

**பண்டத்தரிப்பு பரிஷ்**
**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

பண்டத்தரிப்பு

## Jeeva Bros. Industries
## ஜீவா பிரதர்ஸ் இன்டஸ்ரிஸ்

*Manufacturers of*

- JEEVA BAR SOAP
- JEEVA BLUE SOAP
- JEEVA CARBOLIC SOAP
- JEEVA SOAP
- STREIGHT SOAP
- STREIGHT CARBOLIC SOAP
- RALEIGH BICYCLE SOAP
- SPECIAL EAGLE BRAND SOAP

*Sole Distributors :-* **CARGILS (CEYLON) LTD.**

**USE ALWAYS JEEVA PRODUCTS**

இல. 18, சோண்டர்ஸ் பிளேஸ்
கொழும்பு-12

No. 18, Saunders Place
COLOMBO-12

எங்கள் தொழில்நுட்பக் கல்லூரி இன்றமிழ்
மன்றம் நிலைத்தென்றும் வாழியவே
எங்களின் எண்ணங்கள் திண்ணங்கள் வண்ணங்கள்
யாவும் வளர்த்தென்றும் வாழியவே
சங்கத் தமிழ்வழி தாங்கும் தொழில்மொழித்
தன்மை வளர்த்தென்றும் வாழியவே
எங்கும் புகழ்மொழி மேலெழ நாம்தொழ
எங்கள் தமிழ்மன்றம் வாழியவே.

*With the Best Compliments*

*of*

**Fatima Watch Works**

48, Main Street,

PANDATERUPPU

புடைவைத் திணிசுக்குத்
தலைநகரில் தலைசிறந்த

புடைவை மாளிகை

**அசோகன்ஸ்**

83, 2ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11

**ASOKAN'S**

83, Second Cross Street,

COLOMBO - 11.

இன்சுவைமிக்க ஆகாரத்துக்கும்
கனிவான உபசரிப்புக்கும்

புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்

**ஞானகிரி ஹோட்டல்**

**Gnanagiri Hotel**

சிறி சுமணதிஸ்ஸ மாவத்தை
கொழும்பு—12

Sri Sumanatissa Mawatta,

COLOMBO—12

*With the Best Compliments*

*of*

**"Bharat Studio"**

Photographers

82/1, Kasthuriar Street

JAFFNA

# சமர்ப்பணம்

கடுங் குளிரிலும் கொட்டும் பனியிலும்
தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடியிலும் சிக்கி
தேயிலைச் செடிக்கு ஊட்டமாகியும்
ரப்பர் மரத்துக்கு உரமாகியும்
நாட்டின் அச்சாணியாக உழைத்தும்
பசியாலும் பிணியாலும் துடிதுடித்து
மந்தை அடைப்பதுபோல 'லயத்துக்குள்' மாளும்
அவன்
தமிழனாக வேறு பிறந்துவிட்டதனால்
வாக்குரிமை இழந்து, குடியுரிமையின்றி
நாட்டையே செழிப்பாக்கிக் கொண்டிருப்பவன்
சந்தைப்பண்டம் போல நாடு கடத்தும்
அக்கிரமத்துக்கு இரையாகி
இயம்பமுடியா இன்னலுக்கும் கொடுமைக்குமாளாகி
'கள்ளத்தோணி' எனும் 'குறிசுட்டு' சாகும்
எம்மருமை மலையகத் தமிழ்ப் பாட்டாளிக்கு
பணிவுடனும் பிரார்த்தனையுடனும் சமர்ப்பிக்கின்றோம்.

*With the Best Compliments*

*of*

# Anglo – Ceylon – Trades Agency

**General Hardware Merchants**
**Importers & Estate Suppliers**

*Registered Suppliers to the Government of Sri Lanka and Its Municipalities.*

AND

DEALERS IN:

SHUTTERING DOORS, IRON GRILLS, GATES, G. I. WATER TANKS, DRUMS, G. I. & M. S. HOOK BOLTS & NUTS, IRON & RUBBER WHEEL-BARROWS ETC.

3, QUARRY ROAD. : COLOMBO – 12

Telephone No.: 32444 Telegrams: 'FARWIDE'

ஓம்

காண்போர் மயங்கும் கவர்ச்சிகரமான புடைவைகள்,
உங்களின் தேவைக்கென்றே தேர்ந்தெடுத்த ஜவுளி தரங்கள்
நவீன டிசைன்களில் றெடிமேட் ஆடைகள்

*

உங்கள் விருப்பமறிந்து செயல்படும் ஒரே நிறுவனம்

*

# கணேசன் ஸ்ரோர்ஸ்

63, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்

தொலைபேசி : 7169

## OUR PRINCIPAL CONGRATULATES......

*I am very pleased to send this message once again to the "Thamil Aruvi"—the official organ of the "Thamil Mantram" of the Sri Lanka Technical College.*

*At a time when printing costs are rising at an alarming rate, the courage shown by the members of the "Thamil Mantram" by attempting to continue the publication of this Magazine deserves special praise. It is an indication of their devotion.*

*I note with pleasure that this issue contains a number of articles which will be of use to its members and also to the general reader.*

*It is my fervant hope that the "Thamil Mantram" will continue to play a vital role in shaping the attitudes of the students of this College.*

*I wish the "Thamil Aruvi" every success which it amply deserves.*

K. M. D. Perera
*Principal*
Sri Lanka Technical College

Colombo-10.
25th March, 1975.

*With the Best Compliments of:*

# Rajasingam Industries

*Manufacturers of:*

**Galvanized Crank Bolts, Hook Bolts and Nuts, Washers, G. I. Tanks, Iron Gates, Wheel Barrows, Buckets Etc.**

**Office :**

23, QUARRY ROAD,

**COLOMBO–12**

*Telephone :* 35680



*With the Best Compliments*

*of*

ரி. எஸ். எஸ். போக்குவரத்துச் சேவை

பண்டத்தரிப்பு

# T. S. S. TRANSPORT SERVICE

PANDATERUPPU

*Prop :* T. S. Sinnarajah — உரிமையாளர் : ரி. எஸ். சின்னராசா

# எமது தமிழ்த்தந்தையின் ஆசி.....

16, அல்பிறெட் ஹவுஸ் தோட்டம்
கொழும்பு – 3
4-3-1975

மருதானை – இலங்கை தொழில் நுட்பக் கல்லூரித் தமிழ் மன்றத்தினர் ஆண்டுதோறும் வெளியிடும் 'தமிழருவி' இதழை இவ்வாண்டும் சிறப்புற வெளியிட இருப்பது குறித்துப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

மேற்படி கல்லூரியின் மாணவர்கள் இனவேட்கையும் மொழியுணர்வும் ஒருங்கே அமையப் பெற்றவர்கள். ஆண்டு தோறும் சிறப்புறத் தமிழுக்கு விழாவெடுக்கும் தகைமை சான்றவர்கள். அவர்களின் மொழியுணர்வுக்கும் தமிழ் அறிவுக்கும் 'தமிழருவி' இதழ் உரைகல்லாக விளங்குகிறது.

எம் தாய் மொழியின் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் உறுதிசெய்ய வேண்டிய தலையாய கடப்பாடு இளந்தமிழ் தலைமுறையினருக்கு உண்டு.

தமிழ் மொழியும் தமிழ் மக்களும் சோதனைகளை எதிர் நோக்கியிருக்கும் காலகட்டத்தில் தொழில் நுட்பக் கல்லூரித் தமிழ் இளைஞர்களின் பணி நம்பிக்கையூட்டுவதாகும். இந்தப் பணியின் பரப்பினை எடுத்தியம்பும் 'தமிழருவி' வாழ்க! மேன்மேலும் வளர்க!

**சா. ஜே. வே. செல்வநாயகம்**
**(தே. அ. பே. உ.)**

With the best Compliments

of

# KUGAN STUDIO

## POINT PEDRO

*Telephone :* 524

எல்லா வகையான அலுமினிய கறண்டி வகைகளை

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ள

விஜயம் செய்யுங்கள்

# Rafeekas Industries

206, OLD MOOR STREET

COLOMBO 12

# OUR REGISTRAR SPEAKS......

*Sri Lanka Technical College,*
*Maradana, Colombo* 10,
*February,* 1975.

*Whilst thanking the Sri Lanka Technical College Tamil Mantram for inviting me to send a message to the fifth annual issue of its Magazine the "Tamil Aruvi", I take this opportunity to commend the Office Bearers and others responsible for the continued publication of this valuable magazine despite the many obstacles confronting them at this juncture, such as, increases in prices and shortages of supplies. There is no doubt that the accomplishment of this formidable task is mainly due to their undiluted enthusiasm and untiring efforts.*

*The Tamil Mantram has, through this Magazine which is its official organ, presented its activities to the student population and also put forward several thought provoking contributions covering various topics of educative value, both by students as well as members of the Staff.*

*Judging from the uninterrupted publication of this interesting journal, I daresay that the "Tamil Aruvi" has won the warm approval of the students and I confidently feel that it will continue to render its useful service in the years to come.*

*I wish the Magazine all success.*

*M. S. M. Shafeek*
**Registrar**

மழமழப்பான சவரத்துடன் நாள்முழுவதும்
இளமைப் பொலிவுடன் உங்களைச்
சுறுசுறுப்புள்ளவராக வைத்திருப்பது

## 'குட்மோனிங்' சவர அலகுகள்

விநியோகஸ்தர்கள்

## மல்லர் அன்ட் பிப்ஸ்

(இலங்கை லிமிட்டெட்)

சார்ட்டட் வங்கி கட்டடம் :: கொழும்பு-1

தொலைபேசி: 22382

---

*Visit*

## NIROWZA HARDWARE STORES

For
- Hardware
- Sanitary ware
- P. V. C. Pipes & Fittings
- P. V. C. Conduit pipes & Fittings
- G. I. Pipes & Fittings
- C. I. Pipes & Fittings

AND
- Paints Etc.

NO. 585, OLD MOOR STREET
COLOMBO-12

# ஆசிரியர் நெஞ்சம்

வற்ருத தேன் தமிழருவியாகச் சலசலத்தோடிக்
கற்ருர் அகம் மகிழ்ச்சியில் திளைக்க
யாண்டும் நிலைத்து நின்று நிலவிட
மலர் ஐந்து கண்டு சிறப்பு எய்திட
எம்மை மலைத்திட்ட வன்சோதனை யனைத்தும்
நம்மை அலைத்திட்ட பல்லிடர் தனையும்
நனிஉளம் கொண்ட மன்ற அன்பர்தம்
கனிந்த அயரா துழைப்பால் புறங்கண்டு
பல்துறை அறிஞர்தம் இனிய கருவூலங்கள்
பாங்குடனே நுட்பதிட்பங்கள் முத்தாக மொழிந்திட
அருங்கலை பயிலும் நம்மவர்
கவின்மிகு எண்ணக் கோலங்கள்
கருத்துமிகு வண்ண ஜாலம் காட்டிட
எஞ்ஞான்றும் சிந்தைக்கு விருந்தாகும்
நெஞ்சையள்ளும் பல்கலைக் களஞ்சியமாகப் பரிமளித்து
மெல்லத் தமிழ்இனிச் சாகும் எனும்
இழிநிலை துடைத்திடும் செவ்வி தனில்
மேன்மைக் கலைகளின் வாடா மலராக
செந்தமிழ் சோலைக்கு நறுமணம் வீசிட
பல்சுவை மிளிரும் எம்மன்றத் தமிழருவிதனைப்
பருகிக் களித்திடுவோம் வாரீர்!

வீரகத்தி கதிரமலை

*With the Best Compliments*

*of*

# Rotary Printing Trades

34, MANIPAY ROAD

JAFFNA

*With Best Wishes*

*

*of*

*

# GENERAL TRADING AGENCY

**General Merchants & Commission Agents**

**125, Fourth Cross Street**
**COLOMBO 11**

*Telephone* : 29562
*Telegrams* : **'GENTRADES'**

# தலைவர் தகவுரை

எமது மன்றத்தின் பணி அனைவரும் அறிந்ததே. அவற்றுள் ஒன்று நாம் ஆண்டு தோறும் வெளியிடும் 'தமிழருவி'. இம் முறையும் வெளியிட்டு, உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது.

இம்மலரை வாசிக்கும் ஒவ்வொரு கணமும் நாம் சேற்றில் அமிழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்பது எம்மில் பலருக்குத் தெரியாமல் இருக்கின்றது.

தமிழுணர்ச்சியுள்ள, மானமுள்ள தமிழனுக்கு அது விளங்குகின்றது. ஆனால், மற்றையோருக்கு ஈழத்தமிழரின் இன்றைய நிலைமை விளங்கவில்லை அல்லது விளங்கவில்லைப் போல நடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நான் இன்று இருப்பது எங்கே என்பதை ஈழத்தமிழன் ஒவ்வொருவனும் புரிந்துகொள்ள வேண்டும். அவன் தன்னுடைய உண்மை நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். சுயநலத்துக்காக இனத்தை விற்றுப் பிழைத்தவன் இனியாவது அவற்றை விடுத்து, உண்மைத் தமிழனாக மாறவேண்டும். தூங்குவது போல நடித்துக் கொண்டிருந்தவன் இனியாவது தன்னுடைய போலித் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ள வேண்டும்.

ஏனெனில், இன்று பாதுகாப்பு முக்கியமாகிவிட்டது. சுவர் இருந்தாற்தானே சித்திரம் வரையலாம். தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் ஆழப் போய்க்கொண்டிருக்கின்றோம்.

வெள்ளம் வரமுன் அணைகட்ட வேண்டும் என்பதை மறந்து நாம் இருந்துவிட்டோம். இன்று வெள்ளம் தலைக்கு மேல் வர அதிக காலம் இல்லை.

அன்பு

**வை. பொ. கணேசானந்தன்**

★ இன்றைய திறமை நாளைய மெஷினில்
சிங்கர் தையல் மெஷின்

★ சிறந்த சேவைக்கும் மேலதிக லாபத்திற்கும்
சிங்கர் தையல் மெஷின்

★ SEW AND SAVE

மாதாந்த தவணைமுறையில் பெற்றுக்கொள்ளவும்
வசதியளிக்கப்பட்டுள்ளது.

**சிங்கர் தையல் மெஷின் கம்பனி**

பிரதான வீதி :: காங்கேசன்துறை

*With the Best Compliments of:*

**K. G. INDUSTRIES**

545, SRI SANGARAJAMAWATHA
**COLOMBO 10**

*Manufacturers of:*

BOX BOARD CARTONS, CORRUGATED BOARDS,
CORRUGATED CARTONS, PILOT BALL POINT PENS,
KAY JEE FOUNTAIN PENS,
AND
LITHO PRINTERS

*Telephone:* 21668
21669

# அடித்தளத்தின் ஆழம் — நாம் அடைய முயலும் இலட்சியம்

இற்றைக்கு எட்டு ஆண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டுத் தற்பொழுது தனது எட்டாவது ஆண்டில் வீர நடை போடுகின்றது எமது கன்னித் தமிழ்மன்றம். வேல் போல் உறுதி பூண்டு, ஆல்போல் விருட்சமாக எமது மன்றம் இன்னும் வளரவில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதுபோல் உறுதியான கொள்கையிலும், உற்சாகமான செயற்றிறனிலும் எம்மைவிடப் பணப்பலத்தாலும், ஆட்பலத்தாலும் வலிமைமிக்க மன்றங்களுக்கு நாம் சற்றும் சளைத்தவரல்லர் என்பதும் மறைக்க முடியாத உண்மையே.

இந்த உறுதியும், உற்சாகமும் தான் சிற்சில சமயங்களில் தடக்கி வீழ்வுற்ற போதும், எம்மைத் தொடர்ந்து இயங்க வைக்கிறது. தமிழுக்கும், அதன் கலைக்கும், அதன் பண்பாட்டுக்கும் எம்மைப் பணியாற்ற வைக்கிறது. தமிழ் மன்றங்களும், சங்கங்களும் ஏன் என்று வினவும் வீணர்களின் விதண்டாவாதங்களை அடக்கித் தமிழின் தொன்மையை, அதன் பெருமையை, இனிமையைப் பாரில் பறைசாற்ற வைக்கிறது. தம் தாயகத்திலிருந்து தற்காலிகமாகத் தலைநகரில் குடியேறியிருக்கும் நம் தமிழ் மக்களின் மத்தியில் மொழி உணர்வையும், இன உணர்வையும் விதைக்கவும், வளர்க்கவும் எம்மைத் தள்ளுகிறது.

இத்தகைய மேல்மட்ட நோக்குகளுடன் குறி தவறாமல் எமது மன்றம் முன்னைய ஆண்டுகளில் இயங்கி வந்தது. அதன் இயக்குநர்களுக்கெல்லாம் எமது நன்றிகளும் வாழ்த்துக்களும். இவ்வடிப்படையிலேயே தமிழுக்கு ஒரு பெரும் விழாவெடுத்து, தமிழின் பல்வேறு கலைகளையும் காத்தும் பரப்பியும் வந்தது. இதன்மூலம் வாழ்விழந்து போயிருந்த கலைகள் பல வாழ்வு பெற்றன. மங்கியிருந்த, மறைந்திருந்த கலைஞர்கள், புகழும் பெருமையும் பெற்றனர். வசதியற்று இருந்த பல புதிய கலைஞர்கள் வாய்ப்புப் பெற்றார்கள்.

ஆனாலும் முன்னைய ஆண்டுகளில் வெறும் கலைவிழாவாக அமைந்திருந்த தமிழ்விழா சென்ற ஆண்டு முத்தமிழ் விழாவாகப் பரிணமித்து, பலரினதும் குறிப்பாகப் பத்திரிகைகளினதும் பாராட்டுக்களைப் பெற்றது. இவ்வாண்டும் இயல்தமிழுக்கும் இசைத்தமிழுக்கும், நாடகத் தமிழுக்கும் பல அரிய சாதனைகளுடன் ஒரு பெரும் விழாவெடுத்து எமது இலட்சியப் பாதையில் வீறுநடை போடத்தான் போகிறோம். இத்துடன் நின்றுவிடாமல் மாணவர்களிடையே அறிவையும், பேச்சுத்திறனையும் பெருக வைக்கவும் பிற உயர்தர கல்விக்கூட மாணவர்களுடன் ஐக்கியத்தை உருவாக்கவும் பல்வேறு விவாதங்களை நடாத்துவதும், இலக்கியத்தில் நாட்டமும், அறிவும் பெறத் திங்களொருமுறை இலக்கிய அரங்குகளை மேடை ஏற்றுவதும், இடையிடையே பல்வேறு துறைகளிலும் பயின்ற, பயிற்சி பெற்ற அறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவாற்ற வைப்பதும், கல்விக் கடவுள் கலைமகளுக்கு விழாவெடுப்பதும், உழைப்பிற்கு மத்தியில் ஓய்வையும் அதனூடே ஒப்புரவையும் ஏற்படுத்தும் சுற்றுலா ஒன்றை ஆண்டுக்கொருமுறை மேற்கொள்வதும் எமது மன்றங்களின் வழமையான பணிகளாக அமைந்துவிட்டன.

இப்பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதுடன், அவற்றின் தரத்தினை உயர்த்தி, முடியுமானால் எம் பணிகளை மேலும் விரிவாக்குவோம் என்ற உறுதிப்பாட்டிலேயே நாமும் எமது செயற்குழுவும் பொறுப்புக்களை ஏற்றோம். இந்த உறுதிப்பாட்டில், நிச்சயமாக எம்மால் இயன்றதைச் செய்துள்ளோம் என்பதைப் பெருமையுடன் கூறிவைக்கக் கடமைப்பட்டுள்ளோம். விவாதப் போட்டிகளைப் பொறுத்த வரையில், கட்டுப்பத்தை வளாகத்துடனும், சட்டக்கல்லூரியுடனும் 'அறிவகம்' என்ற கழகத்துடனும் மட்டும் நடைபெற்று வந்த விவாதங்கள்

இவ்வருடம், மருத்துவக் கல்லூரி, கொட்டாஞ்சேனை கிறிஸ்தவ இளைஞர் கழகம் வரை விரிவடைந்து, எமது ஆட்சிக்கால முடிவிற்குள் வித்தியோதய, வித்தியாலங்கார வளாகங்களுடனும் கொழும்பு வளாகத்துடனும் விவாதங்களை நடாத்தித் தலைநகரில் உள்ள சகல உயர் கல்விக் கூடங்களுடனும் தொடர்பு ஏற் படுத்திய ஒரே மன்றம் என்ற சாதனையை நிலைநாட்டவுள்ளோம். பல்வேறு நேர வசதியீனங்களின் மத்தியிலும் பேச்சாளர் களை அழைப்பித்து இலக்கிய அரங்குகளை யும் நடாத்தினோம். எமது மாணவரின் ஒத்துழைப்பு இன்னும் அதிகமாக இருந் திருந்தால் இந் நிகழ்ச்சிகள் மேலும் பயனுள்ளவையாயிருக்கலாம். பலருக்குப் பயன் தருவதற்காகவாவது உங்களின் ஒத்துழைப்பை நல்குமாறு தற்போது அங்கத்தவரையும் வருங்கால அங்கத்தவ ரையும் வருந்தியழைக்கிறேன். கலைமகள் விழா முன்னைய ஆண்டுகளில் ஒரு தோத்திர விழாவாகவே நடைபெற்று வந்தது. ஆனால், தற்போது தமிழ் மாணவ சமுதா யத்திற்கும், அதனால் எமது வருங்கால சமுதாயத்திற்கும் ஏற்படும் மகா தீங்கை எண்ணி இம்முறை கலைமகள் விழாவை ஒரு மன்றுாட்டு விழாவாக, பெருமளவில், ஒரு பயனுள்ள விழாவாக மாற்றியமைத்தோம்.

விரிவாக்கல் வேலைகளிலும் நாம் தயங்க வில்லை. இதற்கு அறிகுறியாக 'மீட்டாத வீணை' என்ற புதிய தமிழ் நாவலுக்குத் திறனாய்வரங்கொன்றை, பத்திரிகை, வானொலி விமர்சகர்கள், பட்டதாரிகள் பங்குடன் இராமகிருஷ்ண மண்டபத்தில் நடாத்தினோம்; எமது மன்ற அங்கத்த வரும் தம் பங்கைத் திறனாய்வுக்கு அளித் தார்கள். சில இலக்கிய அரங்குகளைப் பிற கழகங்களுடன் இணைந்து கல்லூரிக்கு வெளியில் நடாத்தத் திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன. பணவசதியற்றுத் தமது சிறந்த, கதை, கவிதை ஆக்கங்களை வெளி யிட முடியாதிருக்கும் எமது முன்னாள் மன்ற அங்கத்தவர்களின் ஆக்கங்களை மன்றத்தின் பெயரால் வெளியிட உண்மை யிலேயே முயன்றுகொண்டிருக்கிறோம். பணத்தை வாங்கிப் பகட்டாய்ச் செல வழித்துக்கொண்டிருக்கும் பல மன்றங் களுக்குப் பணத்தைப் பயன்படுத்தும் வழி முறைகளில் நாம் ஒரு முன்னோடியாகவும் படிப்பினையாகவும் இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டாமலிருக்க முடியவில்லை. நூற் றுக்கணக்கான தமிழ் மாணவர்களையுடைய எமது கல்லூரி நூலகத்தில் தமிழ்ப் பத்திரிகை ஒன்று இல்லாத குறையை நிவிர்த்தி செய்துள்ளோம். தமிழ் மொழி மூலம் கற்கும் கணக்கியல் மாணவரின் நன்மை கருதிச் சில ஆயிரம் பெறுமதியான தமிழ்ப் பாட நூல்களை நூல் நிலையத்தில் இடம்பெற, கல்லூரித் தலைமைப் பீடத்தை வற்புறுத்தி, இன்று வெற்றி கண்டுள் ளோம். இதற்காக முன்னைய மன்றங்கள் பலவும் முயன்றும் எமது காலத்தில் எமது இறுதி முயற்சிகளால் இது நிறைவேறி யதையிட்டு நாம் பெருமைப்படும் அதே வேளையில் இதை இதுவரைகாலமும் நடை முறைப்படுத்தத் தடையாய் இருந்த சகல சக்திகளையும் நாம் வன்மையாகக் கண்டிக் கிறோம். மேலும், பல்வேறு நூல்களுக்கும், சஞ்சிகைகளுக்கும் செலவிடத் திட்டமிட் டுள்ள பணத்தில் ஒரு பங்கையாவது, தமிழ் நூல்களுக்குச் செலவிடும்படி கோரி வரு கிறோம். இந்நூல்கள் போடும் விடயத்தில் எமக்குப் பெரிதும் உதவிய எமது மன்ற உறுப்பினரும், கல்லூரி நிருவாகத்திற் கடமை புரிபவருமாகிய திரு. உருத்திர மூர்த்தி அவர்களுக்கு எமது மன்றம் என்றும் நன்றியுடையதாய் இருக்கும். இதைவிட எமது நடப்பு ஆண்டு முடிவிற்குள் குறைந் தது 500 ரூபா பெறுமதியான பொதுத் தமிழ் நூல்களை எமது நூலகத்திற்கு அன் பளிப்புச் செய்வதென்றும் முடிவு செய்துள் ளோம். இது எமது மன்றத்திற்கு ஒரு அழியாத சான்ருக என்றும் இருக்கும் என நம்புகிறோம்.

மேலும் கடந்த ஆண்டுகளில் மன்ற அங்கத்தவர்வளுக்கு என்ற கட்டற்று, பலரும் பங்குபற்றி வெறும் பொழுதுபோக் கம்சமாக விளங்கிய சுற்றுலா இவ்வாண்டு தொட்டு, தமிழ் மன்ற அங்கத்தவர் மட்டும் பங்கு கொள்ளும், பண்பான பய னுள்ள சுற்றுலாவாக உருவெடுத்துள்ளது. புதிய, பழைய மாணவ மாணவிகளிடையே

சிநேகிதத்தையும், அன்பையும் வளர்க்க ஒரு பயனுள்ள கருவியாகவும் இது இருந்து வருகிறது. இதைவிட எம்முடைய சமய வேறுபாடற்ற கொள்கையைப் பிரதிபலிக்க வும் நம்மிடையே இருக்கும் சமய குரோதங் களை ஒழித்துக்கட்டவும் கிறீஸ்தவ, இஸ்லா மிய சமய நிகழ்ச்சிகளையும் எமது ஆண்டு நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ள எண்ணி வருகிறோம். மேலும் எம்மிடையே எவ்வித இன பேதங்கள் இல்லையென்பதைச் செயலிற் காட்டி வருகிறோம். இதற்குச் சான்று பகரும் உதாரணங்கள்: எமது கடைசித் தலைவர் ஒரு இஸ்லாமியர், தற்போதைய தலைவர் ஒரு இந்து. தற்போதைய செயலாளர் ஒருகிறீஸ்தவர்.

கடைசியாகப் பல்வேறு குறைபாடுக ளுடன் காணப்படும் எமது மன்றச் சட்டத்தைத் திருத்தியமைக்க முனைந் துள்ளோம். இதற்காக அங்கத்தவர்க ளால் தெரிவு செய்யப்பட்ட, நிருவாகக் குழுவில் அல்லாத, உறுப்பினரைக் கொண்ட ஒரு குழு செயற்பட்டுவருகிறது.

சொல்லிலும் செயலிலும் ஒன்றுகி நிற்கும் நாம், நான் முன்னர் கூறியது போல் சில மேல்மட்ட நோக்கங்களிற்காக மன்றத்தை அமைத்து மேற்கூறிய பணிகளை ஆற்றிவருகிறோம். வருடாவருடம், பழைய பணிகளைத் தரமுள்ளவையாகவும், பய னுள்ளவைகளாகவும் ஆக்குவதுடன் புதிய பணிகளிலும் இறங்கி வருகிறோம். இத்த னைக்கும் நாம் முழுநேர கற்கும் மாணவர் களேயன்றி, சமூக சேவையாளிகளோ, மொழி வளர்ப்பாளர்களோ அல்ல என்பதை யும், நாம் பல கட்டுப்பாடுகளின் மத்தியில் இயங்கவேண்டியவர்கள் என்பதையும் சுட் டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் ஒரு செயற்குழுவின் ஆட்சிக்காலம் ஒரு வருடம் மட்டும் எனும்போது, ஆண்டு பூராவும் எவ்வளவு சுறுசுறுப்பாக நாம் இயங்க வேண்டும் என்பதை நான் சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை.

எமது மன்றம் எட்டாவது ஆண்டைத் தாண்டுகின்றபோதும், அதிலிருந்து பாயும் தமிழருவிக்கோ ஐந்து வயதே ஆகின்றது. சில இடர்கள் எமது முன்னைய மன்றங்க ளால் இம்மலரை வெளியிட விடமுடியாமல் தடுத்துவிட்டபோதும், எம்மை அந்த இடர்கள் நெருக்கிட நாம் விரும்பவில்லை. பத்திரிகை விலை ஆனை விலையாக மாறி யுள்ள மிக்க இடரான இக்காலகட்டத்தில் முன்னைய ஆண்டுகளைவிட அநேக பக்கங்க ளுடன் அதி தரமான மலரை 5ஆவது ஆண்டு மலராக வெளியிட்டுள்ளோம். இந்த முயற்சியில் நாம் இறங்கியபோதும் விளம்பரங்கள் சேகரிக்கப் புறப்பட்ட சமயத்திலும், எமது முயற்சியைக் குறை கூறிக் கிண்டல் பண்ணிய சோம்பேறிக் கூட்டத்திற்கும், இடர்களை எதிர்நோக்கத் தயங்கும் கோழைகளுக்கும் எமது வெற்றி ஒரு பலத்த அடியாகும். எமது வெற்றிகள் எதிர்கால மன்றங்களுக்கு ஒரு உற்சாகப் படியாக வேண்டும் என்பதே எமது பேரவா.

எமது பல்வேறு பணிகளுக்கு இன்றி யமையாதது பொருள். இப்பொருளைப் பணவடிவில் திரட்ட ஆண்டுதோறும் நிதி உதவிக் காட்சியை நடாத்திவருகிறோம். அவ்வழியில் இம்முறை 'நெஞ்சம் மறப்ப தில்லை' என்ற திரைப்படத்தைத் திரை யிட்டோம். சீட்டுக்கள் விற்கப் புறப்பட்ட நம்மவரை, சீனி விலையையும், அரிசி விலை யையும் காட்டிப் பயப்படுத்தினர்கள். பண மல்ல, உதைதான் தருவார்கள் என்று எமது உற்சாகத்திற்குச் சவால்விட்டனர். ஆனாலும் இலட்சிய தாகம் உள்ள எம்ம வரை யாரும் தடுக்க முடியவில்லை. என்றும் இல்லாதவாறு, அதிக பெறுமதியான சீட்டுக்களை அச்சிட்டு, அத்தனையையும் விற்று ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தி னேம். எமது வெற்றியை வருங்கால மன்றங்களுக்கு உற்சாகச் சின்னமாகக் கையளிக்கிறோம். ஆனாலும் இலாபகர நோக்கின்றிச் செயற்படும் எமது மன்றத் திற்குக் கிடைத்த வருமானத்திற்கு அரசு அறவிட்ட வரியோ அளப்பரியது. நாட்டின் நலத்திற்கு வரிகளின் அவசியம்பற்றி நாம் அறியாதவரல்லர், ஆனாலும் அதே வரிகள் அளவுகடந்து போகும்போது, முயற்சிக ளுக்கும் முன்னேற்றங்களுக்கும் எவ்வளவு தடையாக அமைகின்றனவென்பதை உள்ளூராட்சி அமைச்சரும், மற்றோரும்

நல்வாழ்த்துக்கள்

↓

நயம், நாணயம், நம்பிக்கை கொண்ட
ஸ்தாபனம்

# நாதன்ஸ்

ஸ்ரேசனரி விநியோகஸ்தர்கள்

52, முதல்மாடி,
மலே வீதி, கொழும்பு-2.
ஸ்ரீ லங்கா

*

## NATHANS

STATIONERY SUPPLIERS
52, First Floor,
Malay Street, COLOMBO - 2.
Sri Lanka (Ceylon)

TELEPHONE: 33366

*With the Best Compliments*
*of*

## GENTS CORNER

149, Main Street,
COLOMBO - 11.

T'phone: 25810

*With the Best Compliments*
*of*

## THANALAKSHUMY STORES

GENERAL MERCHANTS

TELLIPPALLAI

'மல்பியலி' சிங்கள, தமிழ்
பொப் பாடல் புத்தகமும்
பாலியல் சம்பந்தமான
தேக மனோதத்துவ புத்தகமுமான
'பாலியல் பலவீனமா?'
என்ற புத்தகமும்
விரைவில் வெளிவரவிருக்கின்றன,
ஞானசுந்தர வைத்தியசாலையுடன்
தொடர்பு கொள்க.

மூலவியாதி முற்றாக நீங்க



ரிஷி
லேகியம்
பாவியுங்கள்

மலச்சிக்கல் வயிற்றுவலி இவற்றை
இலகுவில் குணமாக்குகிறது.

10/40-17/60

வி.பி.பி ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

ஞானசுந்தர வைத்தியசாலை

187. செட்டியார் தெரு கொழும்பு .11.

உணர்ந்து ஆவன செய்யவேண்டுமென்று பாதிக்கப்பட்ட கலாசார இயக்கங்கள் சார்பில் வேண்டிநிற்கிறேன்.

எமது கொள்கை எது என்று கேட்போருக்கு ஒரு விளக்கம். நாம் அரசியலில் நேரடித் தொடர்பு அற்றவர்கள்; கட்சிச் சார்பற்றவர்கள். இதை எமது மன்றச் சட்டம் மிக அழகாக வலியுறுத்துகிறது. செயலிலும் இதை நாம் மீறுவதில்லை. "ஜனவேகம்" ஆசிரியரை அழைத்து ஈரறுபது நிமிடங்கள் பேசவைத்தோம், தமிழர் கூட்டணிச் செயலாளரை விவாதப் போட்டிக்குத் தலைவராக அழைத்தோம். இவை எமது நடுநிலையைக் காட்டும் இரு சிறு உதாரணங்கள். ஆனாலும் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் இன்னல் ஏற்பட்டால் அதைக் கடைக்கண்ணாற் பார்த்துக்கொண்டு இருக்கவும் மாட்டோம்; அவர்களின் இன்னல்களைச் சுட்டிக் காட்டத் தவறவும் மாட்டோம். இதற்குப் பெயர் வகுப்புவாதமென்றால் நாம் வகுப்புவாதிகளே.

மேல் மட்டமான சில இலட்சியங்களை நாம் நாடியதும் நாடி வருவதும் உண்மையே. ஆனாலும் இன்று எமது மொழியும் எமது இனமும் பல்வேறு இன்னல்களை அநுபவித்து அழிவு என்று சொல்லக்கூடிய ஒரு பாதையை நோக்கிச் செல்கின்றதோ என்ற ஐயம் தோன்றியுள்ளது: எனவே, இத்தருணத்தில் எமது இலட்சியங்களை மேலும் மேலும் ஆழமாக்க வேண்டியுள்ளது: சொல்லப்போனால் ஒரு அடித்தளத்திற்கே போகவேண்டியுள்ளது. முடியுமா? எமது மன்றம் இந்த இலட்சியப் பயணத்திற்கு எந்தவகையில் துணை செய்யும்? காலம் பதிலளிக்கட்டும். அதுவரை நாம் ஒற்றுமையுடன் முழுமூச்சுடன் முயலுவோமாக. அனைத்து மன்றங்களும் ஒன்றிணைந்து, ஒப்புரவாகி, அந்தப் பயணத்தில் செல்ல, சகல தமிழ்மன்றத் தலைவர்களையும், செயலாளர்களையும் அழைக்கின்றேன். ஒரு ஐக்கிய மாணவ தமிழ் மன்றத்தை அமைக்க ஒன்றுபடவேண்டுகிறேன்.

ஈற்றில் இந்த நடப்பாண்டை இத்தனை வெற்றிகளினூடு செயற்படுத்த எனக்குதவிய செயற்குழுவுக்கு நன்றி கூறுவதுடன் பலரும் களைத்து, சளைத்து, அலுத்த சமயத்திலும், தொடர்ந்து என்னுடன் சேர்ந்து உழைத்த எனது அன்புச் சகோதரிகளான செல்விகள்: ராஜி யோன்பிள்ளை, பிரமிலா யோன்பிள்ளை, சந்திரா முத்துக்குமாரசாமி ஆகியோருக்கும், எனது அன்பு நண்பர்களான, ம. சிவகடாட்சன், த. ஞா. நியூட்டன், தி. சிறீதரன் ஆகியோருக்கும் எனது விசேட நன்றிகள் உரித்தாகுக.

ஆழமான இலட்சியத்தை ஆண்டவன் கைகளில் விட்டு விட்டு, எல்லாவற்றிக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் அனைவரோடும் இருக்க வாழ்த்தி விடைபெறுகிறேன்.

அன்பு! நன்றி! வணக்கம்!

சிவஞானம் கி. நிர்மலானந்தன்
(பொதுச் செயலாளர்)

## ஜனநாயகம்

மீளாத் துயரிலும் மாளா வறுமையிலும்
கஞ்சிக்கே தாளம்போடும் பஞ்சப் படிகளை
'இந்நாட்டு மன்னர்'ரெனப் போற்றி
மதம் மொழி இனம் காட்டி
'பொன்னான' ஓட்டுப் பறித்து
சுரண்டலையும், வர்க்க நலனையும் பேணும்
'சுதந்திரம்' போற்றும் பணநாயகம்.

— கரவைக் கதிர்

# ஆளத்தான் போகின்றோம் வாழத்தான் போகின்றோம்

அகிலாண்ட கோடிகளை அழகுறப் படைத்துதவி
அண்ட சராசரங்கள் அணியுற வகுத்தவனே!
அழகென்னும் தமிழதனைத் தனியழகாய்ப் படைத்துத்
தரணியோர் பேசுகின்ற பல்வேறு மொழிகளிலே
தனியோசை, தனியினிமை தனிச்சிறப்புத் தந்தவனே!
தமிழ்அன்னை பெற்றமக்கள் தனிச்சிறப்பாய் வாழ்ந்தவர்கள்
தரமிழந்து தரையிழந்து தவிசிழந்து தலைகவிழ்ந்து
தரணியில் வாழ்ந்திடுதல் பாங்காமோ சொல்லடியோ?
மானமது தாமிழந்து மன்பதையில் வாழாது
துணைவிதனைப் பறிகொடுத்த சிறீராமன் சீற்றம்போல்
சீறி யெழுந்தே பறிபோன பதவிபெற்று
ஆளத்தான் போகின்றோம் வாழத்தான் போகின்றோம்.

அகத்தியனுர் தந்ததமிழ் அழகேசன் ஆண்டதமிழ்
முக்கோடி யுகங்களாய் முச்சங்கம் கண்டதமிழ்
மூவேந்தர் வளர்த்ததமிழ் மூதறிஞர் போற்றுந்தமிழ்
இயலிசை நாடகத்தில் இனிதுறத் தவழ்ந்ததமிழ்
வெற்றி முரசொலிக்க வெண்கொற்றக் கொடிநாட்டி
வீரமுடன் ஆண்டதமிழ் வீழ்ந்திடுதல் நெறியாமோ?
இன்பத் தமிழ்மாதா ஈன்றநம் மக்கள்
துன்புற்று மாண்டிருத்தல் மாண்பாமோ சொல்லடியோ?
மூதாக்கள் ஆண்ட முடியும் செங்கோலும்
தாமாள வேண்டுமென்று மார்தட்டி எழுகின்றார்
நாடிழந்த பாண்டவர்கள் நாடிரந்து வாழாது
நல்லோன் துணையுடனே போர்க்களம் குதித்தன்று
அதர்மம் அழித்துத் தர்மம் காத்ததுபோல்
ஆளத்தான் போகின்றோம் வாழத்தான் போகின்றோம்.

கம்பன் கண்டதுவும் வள்ளுவன் விட்டதுவும்
காள மேகம் மழையெனப் பொழிந்ததுவும்
ஒளவைப் பிராட்டி அழகுறச் செப்பியதும்
கன்னித் தமிழ்த்தாயின் கற்கண்டுத் தமிழன்றோ?
கட்டி அவள்காத்த வீரத் தமிழ்மன்னர்
எட்டுத் திசையும் இனியசெங் கோலோச்சி
முறைநின்று காத்தவரும் திறைபெற்று ஆண்டவரும்
வாரி வழங்கி வள்ளல்களாய் உயர்ந்தவரும்
மாற்றாரும் போற்ற மனுநீதி காத்தவரும்
தமிழ்மன்ன ரன்றி வேறுயார்! சொல்லடியோ?
கணவனை இழந்த கண்ணகி எழில்நங்கை
காளியாய் மாறிக் கடகம் கையேந்தி
நீதியை நிலைநாட்ட மாமதுரை சுட்டதுபோல்
அரியா சனத்தில் தமிழதை ஏற்றிவைத்துச்
சோம்பேறிகளை ஒதுக்கிச்சுய மரியாதையுடன் ஜனநாயகமாய்
ஆளத்தான் போகின்றோம் வாழத்தான் போகின்றோம்!

— சரஸ்வதி சிவஞானம்

# கடைச்சங்க காலமுந் தமிழரின் சமூக பொருளாதார வாழ்க்கையும்

பொ. சங்கரப்பிள்ளை B. A. (Lond.), B. Com. (Lond.), M. Sc. (Econ.) (Lond.), A. M. Inst. T.

பொருளியல் வரலாற்று முறை ஆராய்ச்சி முக்கியமானதாகும். அஃது இரு வழிகளில் பயன்படுகின்றது. முதலாவது வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து காரண-காரியத் தொடர்புகளைக் காட்டும் பொது விதிகளைக் காண்கிறோம். இரண்டாவது, எடுகோள்கள் சார்புகள் கொள்கைகள் முதலியனவற்றின் உண்மையைப் பரிசோதிப்பதற்கும் நிருபிப்பதற்கும் வரலாறு உதவுகிறது. வரலாற்றை நாம் படித்தால் மூன்று முக்கிய உண்மைகளை உணரலாம்.

(அ) பொருளியல் வாழ்க்கை அபிவிருத்தியடைந்து செல்லினும் எந்நாட்டு வரலாற்றிலும், ஏற்ற இறக்கங்களைக் காணலாம் எனினும் நீடிய போக்கு முன்னேற்றமாகும். இறந்த காலத்திற் சூக்குமமாக இருந்த வித்தே வருங்காலத்திற் பயிராகிறது. பழைமையும் புதுமையும் பிரிக்கமுடியாது ஒன்றுடன் ஒன்று கலக்கின்றன. சமுதாயம் மாற்றங்களுக்குத் தக்கவாறு நெகிழ்ந்து இசைவாக வளருகிறது. ஒவ்வொரு நாட்டின் அபிவிருத்தியும் அதன் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் இருந்து மலருகிறது. இவற்றுக்கு ஒவ்வாத வளர்ச்சி வேரற்ற பயிர்போல வாடி மடியும்.

(ஆ) எச் சமுதாயமாவது ஒழுங்காகவும், படிப்படியாகவும் வளருவதில்லை. சில காலங்களில் வளர்ச்சி வேகமானது. சில காலங்களில் மந்தமானது. வேறு சில காலங்களில் சமூகஞ் சீரழியலாம். பகலிற்குப் பின் இரவும் இரவுக்குப் பின் பகலும் இயற்கையாகும். மேனாடுகளின் பொருளாதார வளர்ச்சி இதற்கு உதாரணமாகும்; மறுமலர்ச்சிக்கும், தொழிற் புரட்சிக்கும் பின்பே இந்நாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. இதற்கு முந்திய இடைக் காலத்திற் பத்து நூற்றாண்டுகள் இந்நாடுகள் இருளடைந்து கிடந்தன.

(இ) அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசியல் அமைப்பும் சுதந்திரமும் முக்கிய காரணங்களாகும். ஒரு நாட்டின் பொருளாதார நிலையிலிருந்து அந்நாட்டரசு எப்படிப் பட்டது என்பதை அறியலாம்,

> "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
> மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்."

தமிழர் வரலாற்றில் மூன்று காரணங்கள் பற்றிக் கடைச்சங்க காலம் வசந்த காலமாகக் கருதப்படுகிறது.

(அ) கடைச்சங்க காலத்துக்குப் பின்பு தமிழ்நாட்டில் மூவேந்தரும் மறைந்தனர். பல்லவர், சாளுக்கியர், இராட்டிரகூடர், கங்கர் முதலிய அந்நிய நாட்டவரின் ஆட்சிகள் தொடங்கின. தமிழ்மக்கள் சுதந்திரத்தை இழந்தனர். அவர்களுடைய பொருளாதார நிலைமை குன்றத் தொடங்கிற்று.

(ஆ)

> "தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு
> சூழ்கலை வாணர்களும் — இவள்
> என்று பிறந்தவள் என்றுண ராத
> இயல்பின ளாம்எங்கள் தாய்" —பாரதி

மொழிகள் எல்லாவற்றுக்கும் மூலமும் முதலுமாகிய மொழி தமிழ். ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னரே பேரிலக்கணமும் இலக்கியமும் பெற்ற மொழி தமிழ். உலகப் பரப்பும், காலப்பரப்பும் உடைய மொழி தமிழ். சதுர்மறை ஆரியம் வருமுன் சகமுழுவதும் ஆண்ட மொழி தமிழ். முதற்

## HOLIDAY TOURS & TRAVEL LTD., JAFFNA.

★

### HOLIDAY TOURS & TRAVELS

**Contact us for all your Travel requirements**

*We attend to your*

★ PASSPORT & EMERGENCY CERTIFICATES

★ BOOKING OF PASSAGES

and

Conduction of

LOCAL AND FOREIGN TOURS AND PILGRIMAGES

190, Hospital Road,
JAFFNA.

*Grams:* "TRAVEL TOURS" Jaffna    *T'Phone:* 496 & 628

# REFINE & Co.

*Visit for your willing kits*

*to*

### REFINE & CO.

**40, Grand Bazaar : : JAFFNA**

*Workshop:*

**3, Jummah Mosque Lane,
JAFFNA.**

சங்கம் 4400 ஆண்டுகளும் இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும் இருந்தன. இக் காலங்களில் எழுந்த பல்லாயிரம் தமிழ் நூல்கள் கடற் கோள்களினால் அழிந்துவிட்டன; காலத்தினால் மறைந்துவிட்டன. கி. மு. 1000இற்கும் கி. பி. 200இற்கும் இடைப்பட்ட பன்னிரண்டு நூற்றாண்டுகள் கடைச் சங்க காலமாகும். இக்கால நூல்களிற் சில எமக்குக் கிடைத்திருக்கின்றன. இந்நூல்களிலிருந்து தமிழரின் வாழ்க்கை, பொருளாதாரம், பண்பாடு, சமயம் முதலியனவற்றைப்பற்றி அறிகிறோம்.

(இ) கடைச்சங்ககாலத்திற்குப் பின்பு ஆரியர் மொழியும், பண்பாடும், சமயமும் தமிழ்நாட்டிற் பரவின. எது தமிழர் பண்பாடு; எது ஆரியர் பண்பாடு என்பதை வேறுபடுத்திக் காட்டமுடியாத அளவிற்கு இரண்டும் கலந்துவிட்டன. கடைச்சங்க காலத் தமிழக எல்லைகளைச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளும் தொல்காப்பியத்துக்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனாரும் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

"குமரி வேங்கடம் குணகுட கடலா
மண்டினி மருங்கிற் றண்டமிழ் வரைப்பில்"

"வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுல கத்து"

கடைச் சங்க காலத்திற் குமரிகண்டம் பழங்கதையாகி விட்டது. வடக்கே விடாஅது பனிபடு நெடுவரை எல்லையாக விருந்த தமிழகம் வட வேங்கடம் வரையுங் குறுகிவிட்டது. வடக்கே வாழ்ந்த தமிழினங்கள் ஆரியமொழிக் கலப்பினால் அன்னியராகிவிட்டனர். தமிழ்மொழி சிதைந்து, தெலுங்கு, கன்னடம், துளுவம் முதலிய கிளைமொழிகள் தோன்றிவிட்டன.

தமிழ் இலக்கியத்தில் ஐவகைத் திணை வாழ்க்கை விபரமாகக் குறிப்பிடப்படுகின்றது. நிலத்தின் இயல்பிற்கேற்பத் தொழில்களும் உணவு உடைகளும் வேறுபட்டன. குறிஞ்சிநில மக்கள் குறவர், குன்றவர், கானவர், வேட்டுவர் எனப்பட்டனர். தேன் அழித்தலும் கிழங்கு அகழ்தலும், தினைவிதைத்தலும், வேட்டையாடலும் இவர்களுடைய முக்கிய தொழில்களாகும்; தேனுந் தினைமாவும் பறவை மிருக ஊனும் இவர்களுடைய உணவுப் பொருள்களாகும். முருகன் குறிஞ்சிநிலத் தெய்வம். முல்லைநில மக்கள் ஆயர், இடையர், கோவலர், பொதுவர் எனப்பட்டனர். ஆடு, மாடு மேய்த்தலும் வரகு விளைத்தலும் இவர்களுடைய முக்கிய தொழில்களாகும். வரகுச் சோறும் பாலுந் தயிரும் முக்கிய உணவுப் பொருள்களாகும். மருதநில மக்கள் உழவர், கனமர் எனப்பட்டனர். வேளாண்மை இவர்களுடைய முக்கிய தொழிலாகும்; நெல், வாழை, கரும்பு முதலிய பயிர்கள் செய்தனர். கற்காலந்தொட்டு இந்தியாவில் நெல் பயிர் செய்யப்பட்டு வருகின்றது. நெய்தல்நில மக்கள் நுளையவர், பரதவர் எனப்பட்டனர். மீன்பிடித்தலும், உப்பு விளைத்தலும் இவர்களுடைய முக்கிய தொழிலாகும். பரதவர் கடலிற் கலஞ் செலுத்தும் வன்மையுடையவராக இருந்தனர். கடல் வியாபாரஞ் செய்தனர். வண்டிகளில் உப்புமூடைகளை ஏற்றிச் சென்று உள்நாடுகளிலும் வியாபாரஞ் செய்தனர். பாலைநில மக்கள் எயினர், மறவர் எனப்பட்டனர். ஏனைய நில மக்களைக் கொள்ளையடித்து வாழ்ந்தனர். தமிழ்நாட்டிற் பாலைவனங்கள் இல்லாதபடியினால் சமூகத்திலிருந்து விலக்கப்பட்டோர் வாழ்ந்த பகுதிகள் பாலை எனப்பட்டிருக்கலாம். எல்லாப் பகுதிகளிலும் அரசர், அந்தணர், போர்வீரர், பற்பல வினைஞர், குயவர், நெசவர், தச்சர், கொல்லர் முதலியோரும் வாழ்ந்தனர். கடைச் சங்க காலத்திற்கு முற்பட்டே சாதிப் பிரிவினைகளும், கட்டுப்பாடுகளும் தோன்றி விட்டனபோலக் காணப்படினும், இப் பிரிவினைகள் செய்தொழில் அடிப்படையில் எழுந்தவையாகும். படையாண்மையினால் சிலர் அரசராயினர். அறிவாண்மையுடையோர் அந்தணராகினர்.

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்."

ஆண்மையுஞ் செல்வமுமுடையோர் வணிகராகினர். உழுதலும் உழுவித்தலும் மேற்கொண்டோர் வேளாளராகினர். ஏனை

யோர் தத்தம் திறனுக்கேற்ற தொழில் களைச் செய்தனர்.

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்
செய்தொழில் வேற்றுமை யான்" [பொவ்வா

என வள்ளுவர் கூறுவதிலிருந்து. பிறப்பு அடிப்படையான சாதிக்கட்டுப்பாடுகள், சங்ககாலத் தமிழர் சமுதாயத்தில் வேரூன்றவில்லை யென்பது வெளிப்படை. மேலும் எல்லாத் தொழில்களின் சிறப்புக் களையும் புலவர் பாடுகின்றனர்.

தமிழ் நூல்களில் மிகப் பழையது தொல்காப்பியம். இஃது இடைச்சங்க நூலாகக் கருதப்படுகிறது. ஐந்திணை வாழ்க்கையைப் பற்றியும், அவற்றின் ஒழுக்கங்களையும், தெய்வங்களையும் பற்றியும் பல விபரங்களைத் தொல்காப்பியத் திற் காணலாம். கடைச்சங்க காலத்திற்கு முன்பே தனிப்பட்ட திணை வாழ்க்கை மறைந்து விட்டதையும் பல நூல்கள் குறிப் பிடுகின்றன. இது திணைமயக்கம் எனப் படும். நாடு முழுவதும் வியாபாரமும், போக்குவரத்து வசதிகளும் பரவிவிட்ட படியினால், ஒருநில மக்கள் மற்ற நில மக்களுடன் நெருங்கிய பொருளாதாரத் தொடர்புடையவராக இருத்தலையும், ஒரு நிலப் பயிர்கள் மற்றைய நிலங்களில் பயிர் செய்யப்படுவதையும், ஒரு நிலப் பொருள் கள் மற்றைய நிலங்களில் விற்கப்படுவதை யும் காணலாம். இத் திணை மயக்கத்தை— அதாவது கலப்பு வாழ்க்கையைப் பின் வரும் சங்கப்பாட்டு நன்கு விளக்கும்.

"தேன் நெய்யோடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யோடு நறவு மறுகவும்
தீங் கரும்போடு அவல் வகுத்தோர்
மான் குறையோடு மது மறுகவும்
குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்
நறும்பூக் கண்ணிக் குறவர் ஆடக்
கானவர் மருதம் பாட அகவர்
நீனற முல்லைப் பஃறிணை நுவலக்
கானக் கோழி கதிர் குத்த
மனைக் கோழி தினைக் கவர்
வரை மந்தி கழி மூழ்கக்
கழி நாரை வரை இறுப்பத்
தன் வைப்பின் நாடு குழீஇ".

சங்க காலத்திற் தமிழ்நாடு வாணி பத்தில் பெருமுன்னேற்றம் அடைந்திருந்த படியினால், பல நகரங்களும், துறைமுகப் பட்டணங்களும் ஆங்காங்கு பரவியிருந்தன. இந்நகரங்களில் அரசர்களும், போர்த் தலை வர்களும், அந்தணர்களும், வணிகரும், பெருஞ் செல்வர்களும் வாழ்ந்தனர். இவர் களுடைய வாழ்க்கையைப் பல சங்கப் புலவர் பாடினர். இவர்கள் மாடமாளிகை களில் வசித்தனர். பாலிற் குளித்தனர். பல்லாபரணங்கள் அணிந்தனர். பிள்ளைகள் தேரோடி விளையாடினர். இவற்றில் ஓரளவு புலவர் புழுகும், கற்பனையும் உண்டு. பெரும்பாலான மக்கள் சிற்றூர்களில் வாழ்ந்தனர். இவர்களுடைய வாழ்க்கை யைப் பற்றியுஞ் சில பாடல்கள் கூறு கின்றன.

(1) சுற்றிலும் புல் மூடிக்கிடக்கிறது. ஊரைச்சுற்றி முள்வேலி அடைக்கப்பட் டிருக்கிறது. முள்வேலிக்கு இடையே அங்கு மிங்கும் சிறுகுடிசைகள். மனையின் புறத்திற் பருத்திச் செடியும், பீர்க்கு முதலிய கொடி களும் படர்ந்து கிடக்கின்றன. மனையை அடுத்து ஒரு குப்பைமேடு. இங்கு கோழிகள் குப்பையைக் கிளறுகின்றன. பறவைகளும், பன்றிகளும் வளர்க்கப்படுகின்றன. ஊரின் நடுவே கிணறும், பொதுவிடமும். ஊர் மக்கள் ஆட்டுக்கிடாய், கோழிச் சண்டை கள் பார்த்துப் பொழுது போக்குகின்றனர்.

(2) வரகுக் கற்றையால் வேய்ந்த சிறு குடிசை. உள்ளே ஆட்டுத்தோல் விரிக்கப்பட்டிருக்கிறது. ஆடுகள் மனையைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கின்றன.

(3) மரங்கள் வேலியாக வமைந்த மனை. அதற்கருகில் ஒரு பந்தல். மேலு மொரு கொட்டில். இங்கு கலப்பைகளும் வண்டிகளும் கிடக்கின்றன; மனை வரகு வைக்கோலால் வேயப்பட்டிருக்கிறது.

(4) தென்னங்கீற்றுகளால் வேய்ந்த சிறுமனை, வளவில் மரஞ்செடிகள்.

(5) அந்தணர் வாழும் ஊர் மிகவும் சுத்தமாக விருக்கிறது. வேதம் ஓதுவதி லும் வேள்வி எடுப்பதிலும் இவர்கள் காலத்தைக் கழிக்கின்றனர்.

(6) கடற்கரையிற் பரதவர் குடிசைகள், மீன்பிடிக்கும் பறிகள் குடிசையின் முன் கிடக்கின்றன. சுறை முதலிய கொடிகள் காய்த்துத் தொங்குகின்றன:

கடைச் சங்க கால நூல்கள் அக்காலத் தமிழ் மக்களின் நகர வாழ்க்கையையும், சிற்றூர் வாழ்க்கையையும் காட்டுகின்றன. ஒரு புறம் செல்வமும், சுகபோகங்களும் மறுபுறம் வறுமையுந் துன்பங்களும், எனினும் எங்காவது உணவிற்குக் குறைவில்லை.

கடைச் சங்க காலத்தில் வாணிபமும், தொழில்களும் உன்னத நிலை அடைந்திருந்த போதிலும் விவசாயமே தமிழர் நாகரிகத்தின் அடிப்படையாகும். நீர் வளம், நிலவளமுடைய தமிழ்நாட்டில் உணவுக்குப் பஞ்சமில்லை. பாரதப்போரின் போது ஒரு பாண்டிய மன்னனே இரு சேனைகளுக்கும் உணவளிக்கிறான். வந்தவர் யாவருக்கும் தமிழ்நாடு வாழ இடம் அளித்தது. தமிழ்நாட்டு மூவேந்தரும், சிற்றரசர்களும் கிணறுகள் குளங்கள் வெட்டியும், ஆறுகளுக்கு அணைகள் கட்டியும் நாட்டின் நீர்வளத்தைப் பெருக்கினர். சங்க இலக்கியத்தில் விவசாயத்திற்கு அளிக்கப்படும் சிறப்பு, அது பெரும்பாலான மக்களின் தொழிலாக இருந்ததற்குச் சான்றாகும்.

"சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனு
லுழந்து முழவே தலை."

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்."

"உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை."

"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு."

"வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும் குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோன்உயர்வான்."

விவசாயத் தொழிலின் பல கூறுகளையும், சங்கப் பாடல்கள் சிறப்பாகவும் விரிவாகவுங் கூறுகின்றன. உதாரணமாக:

"தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்".

எனக் குறள் கூறுகிறது. உழவே நாட்டின் செல்வத்துக்கும், இல்லறத்துக்கும் அடிப்படையாக இருந்தது.

கடைச்சங்க கால விவசாயமுறை பண்ணை முறை என்பதற்குப் பல சான்றுகளுண்டு. எல்லா நிலங்களும் விளைபொருள்களில் ஆறிலொரு பங்கும் அரசனுக் குரியவை. சேனைத் தலைவருக்கும், புலவருக்கும் அரசர் நிலங்களை வழங்கினர் எனும்போது, இவர்களை நிலப்பிரபுக்களாக்கினர் என்பது கருத்தாகும். நிலப்பிரபுக்களில் பலவகைப்பட்டவர் இருந்தனர். அவர்களுடைய உரிமைகளும், கடமைகளும் பலதரப்பட்டவையாக இருந்தன. கி. பி. முதலாம் நூற்றாண்டில் யூதர் தமிழ்நாட்டிற்கு வந்து குடியேறினர். அவர்களுடைய தலைவர்களில் ஒருவனாகிய யோசப் இரப்பயனுக்குத் தமிழ்நாட்டு வேந்தன் ஒருவன் அஞ்சுவளநாட்டை வழங்கினான். வழங்கியபோது அளித்த செப்புப் பட்டயம் பின்வருமாறு கூறுகிறது:—

"யாம் யோசப் இரப்பயனுக்கு அஞ்சுவளநாடு பணமாகவும் பொருளாகவும் நிறைபெறும் உரிமை, அஞ்சுவளத்தின் வருமானம் பகல் விளக்கு, தெரு விரிப்பு, பல்லக்கு, குடை வருக, முரசு, எக்காளம், கால் மிதியடி அணித் தோரண வளைவுகள், மேற்கட்டிகள் முதலிய பெருமகனுக்குரிய 72 சிறப்புரிமைகளையுங் கொடுத்துள்ளோம்.

நில வரியும், நீர் வரையும் கொடுக்கும் கடமையிலிருந்து அவருக்கு விலக்குரிமை அளிக்கிறோம். அரண்மனை வகைக்கு மற்ற நாட்டு வாசிகள் வரி செலுத்துஞ் சமயம் அவர் செலுத்த வேண்டியதில்லை யென்றும் அவர்கள் பரிசு பெறுஞ் சமயம், அவரும் பெறுவாரெனவும் இந்தச் செப்புப் பட்டய மூலம் நாம் கட்டளை செய்கின்றோம்."

தமிழ்நாட்டுச் சிற்றூர்களிற் பலவகைப்பட்ட தொழில் வினைஞர் வாழ்ந்தனர்;

## வருந்துகின்றோம்!

துடிப்பும் செயல்திறனு மிக்க சி. சிறீபரமநாதன், தன் குறுகிய காலத்தில் எம் மன்றத்தின் ஆக்க வளர்ச்சியில் முழு மூச்சாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையில், நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்திய ரெயில் விபத்தில் சிக்கி, அகால மரண மெய்தியதை யிட்டு, நாம் பெரும் கவலையும் வேதனையும் உறுகின்றோம். அவரின் பேரிழப்பை ஈடுசெய்ய முடியாமல் மலைக்கின்றோம். அன்னாரின் குடும்பத்துக்கு எம்மன்றம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.


# RADIOS

By

## ANTONS

For

WORLDWIDE RECEPTION

And

QUALITY

## ST. ANTHONY'S HARDWARE STORES LTD.

COLOMBO - 10.

நகரங்களிலும் பேரூர்களிலும் கைத் தொழில்கள் சிறந்து விளங்கின. தமிழ் நாட்டுத் தொழில் வளர்ச்சியை இளங்கோ வடிகள் சிலப்பதிகாரத்தில் மிகவும் தெளிவாகக் காட்டுகிருர்:

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினுங்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்
நூசுந் துகிரும் ஆரமும் அகிலமும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்துகடை யறியா
வனந்தலை மயங்கிய நளந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவிந்த கூல வீதியும்
காவியர் கூவியர் கண்ணுடை யாட்டியர்
பாசவர், வாசவர் பண்ணின வினைஞரோ
டோசுநர் செறிந்த ஊன்மலி யிருக்கையும்
கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும், மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலந் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னருங்
கிழியினுங் கிடையினுந் தொழில்பல பெருக்கி"

நெசவும், நெசவு சார்ந்த தொழில்களும் தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்கின. பட்டிலும், பருத்தியிலும் நுண்ணிய ஆடைகள் நெசவு செய்யப்பட்டன.

"பாம்புரி யன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியின் இழையணி வாரா
ஒண்பூங் கலிங்கம்"

"நேர்கரை நுண்ணூற் கலிங்கம்"

"போதுவிரி பகன்றைப் புதுமல ரன்ன
அகன்றுமடி கலிங்கம்"

"புகைவிரிந் தன்ன பொங்கு துகல்"

இவ்வாடைகள் உள் நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் விற்கப்பட்டன. உறையூர் ஆடைகள் உரோம் நகரத்துச் செல்வர்களிஞற் பெரிதும் விரும்பப்பட்டபடியினல், உரோம் தமிழ்நாட்டிற்கு அதிக பொன்னை ஏற்றுமதி செய்ததென உரோம சரித்திரங் கூறுகிறது. மொகஞ்சதாரோவிலும் வேறு பல இடங்களிலும் அகழ்ந்து எடுக்கப்பட்ட இராட்டினங்கள் இந்தியாவில் நெசவுத்தொழிலின் தொன்மைக்குச் சான்ருகும். சிற்பக்கலையில் தமிழர் தன்னிகரிலாது விளங்கினர். சிற்றூர்களில் பற்பல தொழில்கள் நடைபெற்றன. போர்க்கருவிகள் செய்தல் தமிழ்நாடு முழுவதிலும் பெருந்தொழிலாக இருந்தது. தமிழ்நாட்டில் பெண்களும், ஆண்களும், பிள்ளைகளும் பொன், முத்து, பவளம் முதலியவற்றிஞல் அணிகள் செய்வித்து அவற்றை அணிந்தனர். இவற்றைப் பல வகைப்பட்ட கொல்லர் செய்தனர். இத்தொழிலும் பெருந் தொழிலாக இருந்தது. ஒரு நாட்டிலே தொழில்கள் பெருகுவதற்கு அந்நாட்டு மக்களின் தலைவீத வருமானம் சீவனமட்டத்துக்கு மேல் அதியுயர்ந்ததாக இருக்கவேண்டும். இன்று உண்ண உணவும் உடுக்க உடையுமின்றித் தமிழ்மக்கள் வருந்துகிருர்கள். ஏன்? அக்காலத்தில் தொழின்முறை குழும முறைமை (Guild System) என்பதற்குச் சான்று வேண்டியதில்லை.

பண்டைக்காலத்தில் தமிழர் வாழ்ந்த குமரிநாடு நடுநிலக் கடலக உலகிற்கு மையமாக இருந்தது. சீஞ தொடக்கம் அத்திலாந்திக வரையும் தமிழ் மக்கள் கடல்மூலமும் தரைமூலமும் வாணிகஞ் செய்தனர்.

"நிலைபெற் றோங்குந் தமிழகத்
தாறறி வுடைமைப் பேறுறு மக்கள்
முன்னர்த் தோன்றி மன்னிக் கெழுமி
குமிழிய லொலிசேர் தமிழ்மொழி பேசி
மண்ணிற் பலவிட நண்ணிக் குடியிருந்
தவ்வவ் விடத்துக் கொவ்விய வண்ணம்
கூற்று நடையுடைய வேற்றுமை யெய்தி
பற்பல வினப்பெயர் பெற்றுப் பெருகினர்"

—கருணமிர்த சாகரம்

தமிழ்நாட்டு வாணிபத்தின் சிறப்பைப் பரிபாடல் கூறுகிறது:

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலில் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிலும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்"

பண்டைக் காலத்திற் பிறநாட்டு வியாபாரத்துக்குச் செல்வம் கொழித்த நாடு தமிழ் நாடு; தமிழ்நாட்டுப் பொருள்களாகிய மிளகு, தந்தம், நவமணிகள், முத்து, பவளம், கறுவா, சந்தனம், ஆடைகள், அணிகள் முதலியனவற்றுக்குப் பிறநாடுகளிற் பெருமதிப்பிருந்தது. தமிழ்நாட்டுத் துறைமுகங்களிற் கப்பல்கள் குழுமி நின்றன. ஓயாத ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் பந்தித்த பண்டசாலைகளில் (Bonded Warehouses) பொருட்கள் மலைபோல் குவிந்துகிடப்பதையும், சுங்க வரிகள் விதிக்கப்படும் முறைமையையும் பட்டினப்பாலை கூறுகிறது. தமிழ்மக்கள் கடலிற் கலஞ் செலுத்தும் வன்மையுடையவராக இருந்ததுமன்றி வாணிபக்காற்றின் வரவு நெறியுங் காலமும் அறிந்திருந்தனர். கடல் வியாபாரத் தனியுரிமையும் பெற்றிருந்தனர்.

''சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவா யோட்டிய அவ்வழிப்
பிறகலம் செல்லாது'' — நக்கீரர் (நய்ய சலையார்);

''நளியிரு முந்நீர் நாவா யோட்டு
வளிதொழி லாண்ட வுரவோன் மருக,
களியியல் யானைக் கரிகால் வளவ''
—வெண்ணிக் குயத்தியார்.

மனிதன் அப்பத்தில் மட்டும் வாழ்வதில்லை; பொருளாதாரம் முக்கியமானதாயினும், அது மட்டுமே வாழ்க்கைக்கு அடிப்படை என நினைப்பது தவறாகும். கல்வி, கலைகள், சமயம், அரசு, அறங்கள், உன்னத இலட்சியங்கள், உயர் நோக்குகள் இவையாவும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படைகளாகும். இத்துறைகளிற் கடைச் சங்க காலத் தமிழர் அடைந்த உன்னத நிலையை ஆராய இச்சிறு கட்டுரையில் இடமில்லை எனினும், இறுதியில் ஒன்றுகூற விரும்புகிறேன். ''அறங் கண்ட தமிழன்'' என்பர். இது தமிழன் வாழ்க்கையில் தனிச் சிறப்பாகும். மற்றவர்கள் அறத்தையும், சமயத்தையும் பற்றி ஓய்வு நேரங்களிற் போதிப்பர். ஆனால், தமிழர் வாழ்க்கையே அறமாகும். இல்லறம் என்பது நல்லறம் என வாழ்ந்தனர். சங்க காலத் தமிழர் வாழ்க்கையை,

''சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம்''

எனப் புறநானூற்றுப் பாட்டொன்று சித்திரித்துக் காட்டுகிறது:

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது''.

## பொற்காலம்

எந்த ராசா சவாரி செய்தாலும்
குதிரைக்குக் கொள்ளுப் போல
உழைப்பவனை உறிஞ்சி
சுரண்டுபவன் சுபிட்சம் காணும்
சமுதாய அமைப்புகளில்
'பொற்காலம்' கண்டு
பெருவாழ்வு கொண்டதாக
கட்டியமும் மாண்பினரே!
சரித்திர இயக்கவியல் பொருள்முதல்
வாதப் படிவளர்ச்சியறியா மூடரே!
நீ கண்மூடுவதினால்
குவலயம் இருள் கவ்வா
நிச உழைப்பன் பொற்காலம்
சமதர்ம சமுதாயமென்பதை யறி.

— கரவைக் கதிர்

# சோஷலிசமும் சட்டமும்

N. சத்தியேந்திரா, சட்டத்தரணி

இன்று நாம் எல்லாருமே சோஷலிஸ்டுகள்தான். நம்மில் சிலர் சட்ட அறிஞர்களாகவும் இருக்கிறோம். மாறுதல் அடையும் ஒரு காலகட்டத்தில் வாழ்வதாகச் சொல்லப்படுகிறது. இது யதார்த்தமான நிலைதான். நமது காலத்தில் மிகப் பெரும் சமூக மாற்றங்கள் நிகழ்வதாகவும் கூறப்படுகிறது. மனித வரலாறே தொடர்ச்சியான மாறுதல்களையும், படிமுறை வளர்ச்சியையும் கொண்டதுதான். ஒரு நாட்டின் சட்டங்கள் இந்தச் சமூக மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றன. மக்களின் அபிலாசைகளுக்கு இசைவான சட்டங்களை ஆக்குவது சட்டமன்றத்தின் பணியாகும். இந்தப் பணி. இதுகாறும் செய்யப்பட்டுவந்துள்ளது. இன்றும் செய்யப்படுகிறது.

சிலவேளை இது ஒரு பொதுவான நிலையாக இருக்கலாம். இது எவ்வாறாயினும், சட்டத்தின் உண்மையான பணியைப் புரிந்துகொள்வதும், போற்றுவதும் ஒரு முக்கியமான, அத்தியாவசியமான விஷயமாகும். சட்டத்தில் உள்ள ஒரு சில அம்சங்களும், அவை அமுலாக்கப்படுதலும் எந்தவொரு சமூகத்திலும் அடிப்படையாக இருந்துவருகின்றன. இந்த உலகில் தனியொரு மனிதப்பிறவி மாத்திரமே இருப்பானாகில், சட்டம் என்று நாம் விளங்கிக் கொள்கின்ற அந்த வார்த்தைக்கு அவசியமே இராது. மக்கள் சமூகக் குழுவாக, ஒன்றாக வாழலாம் என்று ஒப்புக்கொள்கிறபோதுதான், அவர்களை ஒன்றிணைக்கக் கூடியதென அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை விதிகளை வகுப்பதும், அவற்றை ஒப்புக்கொள்வதும் அவசியமாகிறது. அதே சமயத்தில் வலியார் சொல்வதே சரி என்று ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதோடு, எந்தவொரு மனிதப்பிறவியும் தனது நடவடிக்கைகளை இன்னொருவரின் தனிப்பட்சமான பரிசீலனைக்கு விடுவதை விரும்புவதில்லை. இப்படியான ஒரு தனிப்பட்சமான தன்மையை அகற்றுவதும், நாட்டு மக்களின் நடத்தைக்கான தெளிவான, முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விதிகளை விளக்குவதுமே சட்டத்தின் பிரதான நோக்காகும். ஐயத்துக்கிடமான, உறுதியற்ற விதிகள், விதிகளே அல்ல. ஒரு மனிதன் தான் இணங்கியுள்ள, தான் பின்பற்றுவதாக ஒப்புக்கொண்டுள்ள சட்டத்தின் விதிகளைப் பற்றி ஓரளவு அறிந்து வைத்திருக்கவேண்டுமென்பது நியாயப்படி அவசியமாகும். எந்தவொரு சமுதாயத்துக்கும், குறிப்பாக சோஷலிசத்தை அடைய விரும்பும் சமுதாயத்துக்கு இது அடிப்படையாகும். சோஷலிசம் என்பதன் அர்த்தத்தைப் பரவலான முறையில் சொல்வதானால், ஒரு நாட்டின் செல்வம் அதன் மக்களுக்கே பொதுப்படையாகச் சொந்தமென்பதும், சமூகம் விரும்பக்கூடிய இலட்சியத்தை அடைவதற்காகவே தனி மனிதர் ஒருவர் சொத்தினை உபயோகிப்பதற்கு உரிமையுடையர் என்பதுமாகும். இதுவே சமூக நீதியாகும். இந்தச் சமூக நீதியின் இன்னொரு பக்க அம்சமாகத் தனிப்பட்ட ஒருவரின் நடவடிக்கைகளில் இன்னொரு தனிப்பட்டவரோ, அரசாங்கமோ ஒரு தனிப்பட்சமான முறையில் தலையிடக் கூடாததாகவும் இருக்கவேண்டும். இதுவே சட்டத்தின் விதிமுறையாகும். சோஷலிசமும் சட்டத்தின் விதிமுறையும் ஒன்றோடொன்று இணைந்து செல்பவை.

எந்தவொரு நாகரிக சமுதாயத்துக்கும் சட்டம் அத்தியாவசியமாகும். எங்கு சட்டம் கிடையாதோ அங்கு மனம் போன போக்கிலேயே காரியங்கள் நடைபெறும். ஒழுங்குபடுத்தப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட சட்ட அமைப்பைக்கொண்ட ஒரு இடத்தில் கூட அந்தச் சட்டம் வியாக்கியானம் செய்யப்படும் ஒரு தனிப்பட்சமான

# மலாயன் கபே

★

யாழ்நகரில்
முதன்மையும் திறமையுமான
மாபெரும் சைவ ஹோட்டல்

ருசிகரமான பலகார வகைகளும்
நறுமணம் கமழும் காப்பி, தேநீர்
மற்றும் குளிர்பானங்களும்
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.

36, 38, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

*With the Best Compliments*
*of*

# Lingam & Company

**Dealers in Hardware**
**Paints & Etc.**

41, K. K. S. Road,
**CHUNNAKAM**

**The Cheapest and Reliable**
**House in North for**
**All Your Electrical Requirements**

*Please Visit*

# EMMO SONS

**Electrical Contractors and Dealers**

MOMSAC BUILDING
**Stanley Road,**
**JAFFNA.**

PHONE: 374 & 7570

சிறந்த போட்டோக்களுக்கு

# "செல்லம்ஸ்"

94, 96, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 436

தன்மையின் விளைவாக அந்த இடத்தில் மனம் போன போக்கில்தான் காரியங்கள் நடைபெறும். முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட, நடைமுறை விதிகளைக் கொண்ட ஒரு அமைப்பு இருக்கவேண்டும் என்ற அவசியம் மாத்திரமன்றி, அந்தச் சட்டத்துக்கு வியாக்கியானம் கூறி, அதனைப் பிரயோகிப்பவர்களும், அதனை அமுல் நடத்துவோரும், உணர்ச்சிவசப்படாதவர்களாயும், பாரபட்சமில்லாதவர்களாயும் இருத்தல் அவசியமாகும். இரண்டு மனிதர்கள் தங்களுக்கிடையே உள்ள கருத்து வேறுபாட்டை இன்னொரு மனிதனின் முடிவுக்கு விடுவதன் காரணம் அந்த மூன்ருவது மனிதனின் நேர்மையிலும், பாரபட்சமில்லாத தன்மையிலும் அவர்களுக்கு உள்ள நம்பிக்கையேயாகும்.

அத்தகைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகாத எந்தவொரு நீதிபதியோ, நீதிபரிபாலன முறையோ செவ்வனே செயல்பட முடியாது. சட்டத்துக்கு வியாக்கியானம் கூறி, அதனை அமுல் நடத்தும் பணியை ஏற்றுக்கொண்டுள்ளோர், தங்களது பணியைப் பொறுமையான முறையில், ஓரவஞ்சகமில்லாமலும், பாரபட்சமில்லாமலும் நிறைவேற்றினற்ருன் இந்த நம்பிக்கை இடம்பெறமுடியும். எந்த ஒரு சமூகத்தின் சட்ட முறைக்கும் இது அடிப்படையானதாகும். நீதி வழங்கப்படுகிறது என்பது தெளிவாகத் தெரியவேண்டும். இது அர்த்தமில்லாத ஒரு வெறும் சொற்ருெடர் அல்ல. நீதி வழங்கப்படுவது, வெளிக்குப் புலப்படாத முறையில் இருக்குமானல், அங்கே நீதித்துறையின் அஸ்தமனம் ஆரம்பமாகிவிட்டது என்றே கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தனது பிறவிக் குணவியல்பினலும், தனது சூழ்நிலையினலும் உருவாக்கப்பட்டவன் என்பதால், மனித முயற்சித்துறையைப் பொறுத்தமட்டில், பாரபட்சமேயில்லாத சம்பூரண தன்மையை அடையவே முடியாது என்பதும் சந்தேகத்திற்கிடமில்லாத உண்மையாகும். இதனைக் குறிப்பிடத்தக்க, அர்த்தபுஷ்டியுள்ள சொற்ருெடராகச் சொல்ல வேண்டியதில்லை, தோட்டமொன்றின் சொந்தக்காரராக இருக்கக்கூடிய ஒரு நீதிபதி, தன் முன்னல் விசாரணைக்கு வந்துள்ள தொழில் வழக்கை விசாரணை செய்வதாக வைத்துக்கொள்வோம். தாமும் ஒரு தோட்டச் சொந்தக்காரர் என்ற முறைக்கு அப்பாற்பட்டவகையில் இந்த வழக்கை விசாரிப்பதும் இவருக்குக் கஷ்டமாகவே இருக்கும். இதேபோல் நீதிபதி ஸ்தானத்தில் இருக்கும் ஒரு மார்க்ஸியவாதி முன்னிலையில், பௌத்த சமயமானியச் சட்டத்தின்கீழ், ஒரு பிக்குவின் மானியக்கோரிக்கை வழக்கு விசாரணைக்கு வருவதாக வைத்துக்கொள்வோம். சம்பந்தப்பட்ட நீதிபதிக்குத் தனது லௌகீகக் கண்ணேட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் இவ்வழக்கில் தீர்ப்பளிப்பது சிரமமாகவே இருக்கும். விவாகரத்துச் செய்துகொண்ட ஒருவர், தனது சொந்த அனுபவங்களுக்கு அப்பாற்பட்ட முறையில், ஒரு விவாகரத்து வழக்கை விசாரித்துத் தீர்மானிப்பதற்குச் சிரமப்படவே செய்வார்.

ஒரு நீதிபதியின் நெருங்கிய உறவினர் யாராவது கற்பழிக்கப்பட்டிருப்பார்களானல், அந்த நீதிபதி, தனது நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் கற்பழிப்புக் குற்றச்சாட்டு வழக்கொன்றில் பாரபட்சமில்லாத வகையில் தீர்ப்பளிப்பதற்குச் சங்கடப்படவே செய்வார். இதுபோன்ற எண்ணற்ற உதாரணங்களை இங்கு தரலாம். நீதிபதிகளிடமிருந்து வழக்காளிகள் எதிர்பார்க்கும் அந்தளவு பற்றற்ற தன்மையுடன் நீதிபதிகள் பணியாற்ற முடியாதிருப்பதற்கு அவர்களது சொந்த அனுபவங்களும், சொந்த நம்பிக்கைகளும் சில வேளைகளில் எவ்வாறு சங்கடத்தைத் தருகின்றன என்பதை மேற்படி சம்பவங்கள் காட்டுகின்றன. ஆனல், இதற்காக யாவரும் இந்தச் சட்டங்களைப் புனிதமானவை என்று ஒப்புக்கொள்ளவோ நீதிபதிகள் தாம் அளிக்கும் தீர்ப்புகளில் தமது சொந்த அனுபவங்களையும், நம்பிக்கைகளையும் இடம்பெறச் செய்யலாம் என்ருே கருதிவிடக்கூடாது. தனது சக மனிதர்களின் நடவடிக்கைகள் மீது நீதி வழங்கும் பணியை ஏற்றுக்

கொண்டுள்ள ஒரு மனிதன், தான் வழங்கும் தீர்ப்பில் தனது சொந்த நம்பிக்கையோ, பின்னணியோ எந்த விதத்திலும் சம்பந்தப் படாதவாறு தவிர்த்துக்கொள்ள முயற் சிக்கவேண்டும். ஒரே சட்டம் வெவ்வேறு நீதிபதிக்கு, வெவ்வேறு விதமாகப் பொருள்படுமானுல், நாம் சட்டத்துறைக்கு அல்லாமல், ஒரு தனிப்பட்சமான தன் மைக்கே மீண்டும் திரும்பிவிட்டோம் என்றே அர்த்தமாகும். இப்படியான நிலைமையில் நீதிமன்ற விசாரணைகள் அதிர்ஷ்ட லாபம் பார்க்கும் குணுதிசயத் தைப் பெற்றுவிடும் என்பதுடன், எந்த வொரு குறிப்பிட்ட வழக்கின் முடிவும் சட்டத்தைப் பார்க்கிலும் நீதிபதிகளைப் பொறுத்ததாகவே மாறிவிடும்,

இப்படிச் சொல்வதன் அர்த்தம் சமு தாயம் மாறக்கூடாது என்பதல்ல, அல்லது மாறும் சமுதாயத்தின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையில் சட்டங்களைத் திருத்தக்கூடாது என்றும் அர்த்தமல்ல. ஆனுல், அப்படியான மாற்றங்களின் கருவி யாக, மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய சட்டமன்றமே விளங்கவேண்டும் என்பதேயாகும். ஒருவர் சட்டத்தை மாற்றவேண்டும். ஆனுல் சட்ட மன்றத்துக்குரிய பணியைச் செய்ய மறுக்கும் நீதிபதிகளை மாற்றக்கூடாது. 1930ஆம் ஆண்டு காலத்தில், சோஷலிஸத் தின் பெயரால் யோசப் ஸ்டாலின் பெரிய களையெடுப்புகளைச் செய்தார். அந்தச் சமயத்தில் இருந்த சோவியத் நீதிபதி களும், நாட்டுக்கெதிரான குற்றமிழைத் தார்கள் என்ற காரணத்துக்காகத் தம் முன்னுல் நிறுத்தப்பட்ட கைதிகளைத் தண்டித்ததன் மூலம், சட்டம் பற்றிய முற்போக்கான கருத்தைத் தாங்கள் மேற் கொள்வதாக எண்ணிக்கொண்டான். அந்த விசாரணைகள் பற்றி இன்று வரலாறு வழங்கியுள்ள தீர்ப்பு இப்பொழுது தெளி வாக உணர்த்துவது யாதெனில், சட்டத் திற்கு வியாக்கியானம் கூறி, அதனை அமுல் நடத்துபவர்கள் சுதந்தரமானவர்களாக வும், பாரபட்சமில்லாதவர்ளாகவுமிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைத்தான். சட்டத்தின் சில பகுதி வியாக்கியானங் களில் இரு வேறு கருத்துக்கள் இருப்பது சாத்தியம் என்பதும் இவற்றில் எந்தக் கருத்து நிலைபெறவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை நீதிபதிகளுக்கே உண்டென்பதும் உண்மைதான்; ஆனுல் இந்த உரிமையும், பல்வேறு வியாக்கியான விதிகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சட்டம் இவர்களிடம் எதனை எதிர்பார்க் கிறது என்பதை இவர்கள் ஓரளவாவது தெரிந்து கொள்வதற்கு இது வழி செய்கி றது. ''முற்போக்கான'' வியாக்கியானம் தான் அளிக்கப்படவேண்டும் என்ற அடிப் படையில், இந்த உரிமையை மேலும் வலியாக்கினுல், தனிப்பட்சமான தன்மை கள் புகுத்தப்படும். ஏனெனில், எத்தனை நீதிபதிகள் இருக்கிறுர்களோ அத்தனை விதமான அர்த்தங்களும் விதங்களும், ''முற்போக்கு'' என்ற பதத்திற்குக் கற்பிக் கப்படலாம். ''முற்போக்கு'' என்ற வார்த்தை மிகப்பரந்த அளவிலான பல கருத்துக்களைக் கொண்டது. எனவே அது ஒரு வலுவான சட்டச் சொல் ஆகாது. ஒரு மனிதனின் சோஷலிஸம் இன்னெரு மனிதனின் நஞ்சாக இல்லாவிட்டாலும், மற்றெரு மனிதனின் திரிபுவாதமாகவும் அமையலாம். விவாதத்துக்குட்பட்ட ஒரு விஷயத்தில் குறிப்பிட்ட நீதிபதியொருவர் தனிப்பட்ட முறையில் கருதக்கூடிய ''முற் போக்கான கண்ணேட்டத்துக்குச்'' சட்ட வியாக்கியானம் உள்ளடங்கிவிட முடியாது. இன்று நாம் எல்லோருமே சோஷலிஸ்ட் டுக்கள்தான்.

✳

## உபதேசம்

தலைசிறந்த பேச்சாளர்
அரைமணி நேரமாய்க்
'காந்தீயம்' பேசுகிறுர்
அவருக்கு நல்ல 'மப்பு.'

— மீசாலைச் சந்திரன்

# விஞ்ஞான கை கணி

தா. சோமசேகரம், உதவி நிலஅளவை நாயகம்

சந்திரனுக்கும் கோள்களுக்கும் பிரயாணம் செய்யும் விண்வெளிக் கப்பல்களின் மண்டலத்தைச் சரியான வழியில் செலுத்துவதற்கு வேண்டிய திருத்தங்களை அவ்வப்போதே கணிக்கும் பெரும் விசித்திரக் கணனிகளைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். கணனிகள் இன்றி விண்வெளிப் பிரயாணமே இல்லை எனலாம். கணனி சாஸ்திரத்தை நன்கு கற்றறிந்த விஞ்ஞானிகளைத் தவிர ஏனையோருக்கு இப்பெருங் கணனிகள் விளங்கிக்கொள்ள முடியாத உலக அதிசயங்களில் ஒன்றாகவே இருக்கும். இப்படியான கணனிகள் அதிக விலையினதால், ஒரு சாதாரண மனிதனுக்கு இவற்றுடன் பழகும் வாய்ப்பு தற்போதைக்கேனும் ஏற்படாது. ஆனால் புரட்சிகரமான விஞ்ஞான அடிப்படையிலான கை கணிகள் பல இப்பொழுது தோன்றியுள்ளன. இவற்றில் ஒன்றுதான் Hewlett Packard 45 என்பது. அண்மையில் இப்படியான நான்கு கைகணிகள் தியுத்தலாவையிலுள்ள அளவை – படமாக்கல் நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 400 U. S. டொலருக்குக் குறைவான (அதாவது ரூபா 4000/- இற்குக் குறைவான) விலையினதாகும்; ஒன்றின் நிறை 11 அவுன்சாகும். படத்தில் விளக்கப்பட்டது போல இதனைச் சுலபமாகக் கையில் வைத்துக்கொள்ளமுடியும்; சட்டைப் பைக்குள்ளும் போட்டுக்கொள்ளலாம். மீள் ஏற்ற நிக்கல் கட்மியம் கலன்களிலிருந்து இதற்கு வேண்டிய வலு பெறப்படுகிறது. ஆனால் 230 உவோற்று பிரதான மின்னோட்டத்திலும் இதனை நேரடியாகப் பயன்படுத்த வசதியுண்டு.

இது கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் போன்ற செய்கைகளை மட்டுமன்றிப் பின்வருவனவற்றையும் காணும். இவை:– கலை, விகலை, ஆரையின் அல்லது கிராட்டுகளில் தரப்பட்டுள்ள எக்கோணத்தினதாவது சைன், கோசைன், தான்சன், நேர்மாறு சைன், நேர்மாறு கோசைன், நேர்மாறு தான்சன், பொது அல்லது இயற்கை மடக்கைகள்; ஏதாவதொரு எண்ணின் வர்க்கமூலம், வர்க்கம், நிகர்மாறு; நேரான எண்களின் எந்த □ வொரு வலு, சினையகங்கள், சத வீதங்கள், சராசரிகள், நியமவிலகல் ஆகியனவாகும். மேலும் பாகை, கலை, விகலைகளைத் தசமப் பாகைகளாகவும், எதிர்மாறாகவும், செங்கோண ஆள்கூறுகளை முனைவாள் கூறுகளாகவும், எதிர்மாறாகவும், மீற்றர் அலகுகளைப் பிரித்தானிய அலகுகளாகவும், எதிர்மாறாகவும் தன்னியக்கமாக மாற்ற வல்லது. தொடர் கணிப்புக்கள், கலப்புத் தொடர் கணிப்புக்கள், சங்கிலிக் கணிப்புக்கள், கலப்புச் சங்கிலிக் கணிப்புக்கள் போன்றவற்றையும் இது செய்யும். 10 பொருளையுடைய இலக்கங்கள் சக 2 இலக்க அடுக்குக்குறி வரையிலான இலக்கங்கள் இதில் தோன்றும்.

மேற் கூறியவற்றை உற்று ஆராயும் போது இக்கணியின் சக்தி எத்தகையதென்பதை உணரலாம். உதாரணமாக, மடக்கை வாய்பாடுகள், திரிகோண வாய்பாடுகள், வழுக்குச் சட்டங்கள் ஆகியன தேவைப்படா. ஒரு எண்ணின் மடக்கை வேண்டுமாயின் அந்த எண்ணைச் செலுத்திய பின் (அதாவது அந்த எண் கொண்ட பொத்தானை அழுத்தியபின்) மடக்கைப் பொத்தானை அழுத்துதலே நாம் செய்ய வேண்டிய வேலை. அந்த எண்ணின் மடக்கை உடனடியாகத் தோன்றும். உண்மையில், அநேக சந்தர்ப்பங்களில் மடக்கைக் கணிப்புகளே தேவைப்படா. உதாரணமாக $\frac{387\cdot2\times52\cdot75}{342\cdot85}$ போன்ற ஒரு கணிப்பை பின்வரும் செய்கைகள் மூலம் நேரடியாகப் பெறலாம். 387·21ஐச் செலுத்திப் பிரவேசப் பொத்தானை அழுத்தியதும் செலுத்திய எண் சேமிக்கப்படும். இனி 52·75ஐச் செலுத்தி பெருக்கல் (×) பொத்தானை அழுத்தியபின் 342·85ஐச் செலுத்திப் பிரித்தல் (÷) பொத்தானை அழுத்த விடை 59·58 என 15செக்கனுக்குள் கிடைக்கிறது. தளத் திரிகோண கணிதம், பௌதிகவியல் அளவையீடு ஆகிய துறைகளிலிருந்து தெரியப்பட்ட பின்வரும் மூன்று உதாரணங்களும் இக் கணியின் சக்தியையும் அதன் பலவின பயன்பாட்டையும் விளக்குகின்றன.

*With All Best Wishes*
*from*

**STERLING PRODUCTS LTD.**

Main Street,
COLOMBO - 11

T'Phone: 21984

சகலவிதமான உள்ளூர் உற்பத்திப் பொருட்கள்
கமிசன் விற்பனையாளர்

**WELIGMA STORES**

IMPORTERS, EXPORTERS & COMMISSION AGENTS

139, 4th Cross Street,
COLOMBO-11

**வெலிகம ஸ்டோர்ஸ்**

தொலைபேசி: 2371 Telephone: 2371

உதாரணம் 1—தளத்திரிகோண கணிதம் !

முக்கோணி ABC இன் கோணம் A= 44° 32′, 42″·5

B= 65° 21′ 30″·7. பக்கம் b =3472·2 மீற்றர் ஆகத் தரப்பட்டிருப்பின் பக்கம் a யைக் காண்க.

பக்கம் a.

$$a = \frac{b \text{ சைன் } A}{\text{சைன் } B}$$

$$= \frac{3472{\cdot}2 \text{ சைன் } 44°32'\ 42''{\cdot}5}{\text{சைன் } 65°\ 21'\ 30''{\cdot}7}$$

எனும் சூத்திரத்தினல் பெறப்படும். மரபு வழக்கான முறையிற் கணிப்பதாயின் மட 3472·2 ஐயும் அதன்பின் மட சைன் 44° 32′ 42″·5 ஐயும் (இடைச்செருகல் மூலம்) கண்டு இரண்டையும் கூட்ட வேண்டும். இதைத் தொடர்ந்து சைன் 65° 21′ 30″·7ஐக் கண்டு முன்னைய கூட்டுத் தொகையிலிருந்து கழிக்கவேண்டும். இதை அடுத்து முரண் மடக்கை காணப்பட வேண்டும். இக் கணிப்பிற்குக் கிட்டத் தட்ட 5 நிமிடம் வேண்டும். கணியினுல் செய்வதானுல் செயன்முறை பின்வருமாறு: 3472·2 ஐச் செலுத்தி பிரவேசப் பொத்தானை அழுத்துதல்; 44° 32′ 42″·5 ஐச் செலுத்தி முறையே சைன் பொத்தானையும் பெருக்கல் (×) பொத்தானையும் அழுத்துதல்; இறுதியாக 65° 21′ 30″·7 ஐச் செலுத்தி முறையே சைன் பொத்தானையும் பிரித்தல் (÷) பொத்தானையும் அழுத்த விடை 2679·7 என 35 செக்கனுக்குள் தரப்படுகிறது.

உதாரணம் 2 — பௌதிகவியல் :

மூன்று ஓம் , , , 8·7 ஓம், 9·2 ஓம் தடைகள் சமாந்தரத் தொடுப்பில் உள்ளன. விளையுள் தடை (R) காணப்பட வேண்டும். இதன்விடை :

$$\frac{1}{R} = \frac{1}{6{\cdot}5} + \frac{1}{8{\cdot}7} + \frac{1}{9{\cdot}2}$$

கணியினுல் செய்வதானுல் செயன் முறை பின்வருமாறு :

6·5 ஐச் செலுத்தி நிகர்மாறு $(\frac{1}{x})$ பொத்தானை அழுத்துதல்; 8·7ஐச்செலுத்தி நிகர்மாறு பொத்தானையும் அதைத் தொடர்ந்து கூட்டல் (+) பொத்தானையும் அழுத்துதல்; இறுதியாக நிகர்மாறு பொத்தானை அழுத்த விடை 2·6 என 13 செக்கனுக்குள் தரப்படுகிறது.

உதாரணம் 3 — அளவையீடு:

அளவைப் போகுகளில் நிலையங்களின் ஆள்கூறுகளைக் காண்பது அளவையீட்டின் ஒரு பொதுப் பிரச்சினையாகும். உதாரணமாக ABCDE ஆகிய 5 கால்களைக்கொண்ட ஒரு குறுபோகை எடுத்துக்கொள்வோம். AB, BC ............. ஆகியவற்றின் நீளங்களும் திசைகோள்களும் தரப்பட்டிருக்கையில், B, C, ............ ஆகியவற்றின் ஆள்கூறுகள் காணப்படவேண்டும். இதற்கு AB கோசைன் ரீற்ரு$_1$, AB சைன் ரீற்ரு$_1$, BC கோசைன் ரீற்ரு$_2$ ......................... ஆகியவற்றை பொயிலர் வாய்பாடு அல்லது சேம்பரின் 7 இலக்க வாய்பாடு போன்றவற்றினுல் கணித்து எல்லாவற்றையும் அட்சரகணித முறையாகக் கூட்டவேண்டும். 5கால் போகுகளின் ஆள்கூறுகளை இம் முறையாகக் கணிக்க கிட்டத்தட்ட 30நிமிடங்கள் எடுக்கும்: 50இலிருந்து 60வரையிலான நிலையங்களையுடைய போகொன்றின் கணிப்பு ஒரு அளவையாளரின் முழுநாள் வேலையாகும். ஒரு கை கணியினுல் 5 நிலையங்களின் ஆள்கூறுகளை 3 நிமிடங்களிலும், 60 நிலையங்களின் ஆள்கூறுகளை கிட்டத் தட்ட ½ மணித்தியாலத்திலும் செய்யலாம்.

| | நீளம் | திசைகோள் | △N | △E | N | E |
|---|---|---|---|---|---|---|
| AB | 272·01 | 30° 15′ | 235·05 | 137·08 | 235·05 | 137·08 |
| BC | 412·4 | 33° 14′ | 344·95 | 226·02 | 580·00 | 363·09 |
| CD | 398·8 | 28° 51′ | 349·30 | 192·43 | 929·30 | 555·52 |
| DE | 334·4 | 55° 15′ | 190·61 | 274·76 | 1119·91 | 830·28 |
| EF | 280·8 | 40° 37′ | 213·15 | 182·80 | 1333·06 | 1013·08 |

மேற் கூறப்பட்டவை 3 எளிய உதாரணங்கள் மட்டுமே. ஆனுல் இவற்றைவிட மிகச் சிக்கலான கணிப்புகளை இது செய்யவல்லது. ஒரு சில வருடங்களில் மடக்கை அல்லது வழுக்குச் சட்டக் கணிப்புகளைப் போன்று இக் கணிப்புகளும் சர்வசாதாரணமாகிவிடும்.

*With the Best Compliments*
*of*

**Logarajah Stores**
**லோகராசா ஸ்ரோர்ஸ்**

General Merchants & Dealers
in Rubber

*No.* 21, *OldMoor Street,*
COLOMBO - 12

*Grams:* 'CHELVANS'
*Phone:* 32119

*With the Best Compliments*
*of*

**VASANTHA STORES**
General Merchants &
Commission Agents

No. 33, Old Moor Street
COLOMBO - 12

Phone: 26641

சகலவிதமான உள்ளூர்
உற்பத்திப் பொருட்களான
கிழங்கு, வெங்காயம், நிலக்கடலை
குரக்கன், வெல்லம் முதலியனவற்றிற்கு

**K. M. P. AGENCY**
General Merchants &
Commission Agents
*(Dealers in all kinds of local Produces)*

**கே. எம். பி. ஏஜன்சி**

130, Fourth Cross Street
COLOMBO - 11

Telephone: 25444

*With the Best Compliments*
*of*

**M. EGAMBARAM**
Manufacturing Jewellers

*Office*:
131, New Chetty Street
COLOMBO - 13

Phone: 35531

# நீ ஓர் அசல் கோமாளி

முத்தமிழ் மாட்சி இசை மீட்க:
பரந்த சிந்தைக்கு:
'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என
சொற் சிலம்பம் ஆடி அளப்பீர்.

விரிந்த அறிவுக்கு:
'அணுவைத் துளைத்து ஏழ்கடல் புகட்டும்'
குறளில் விந்தை பல புரிந்து மகிழ்வீர்.

சுரந்த ஞானத்துக்கு:
'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' எம்
தாரக மந்திரமென திருமந்திரம் ஈருக
சித்தாந்த விசாரம் விளம்புவீர்.

பாராண்ட மேன்மை பண்பாட;
மறப்போர் சங்ககால அறப்போரென
கொம்பு ஊதிக் கனைத்திடுவீர்.

கனக விஜயன் கல்சுமந்த காதையை
கர்ச்சித்து காலமெல்லாம் தினவெடுப்பீர்.

சோழர் கண்ட பேரரசின் பெற்றியை
மார்தட்டி வான்பிளக்க முரசு கொட்டுவீர்.

மாண்புமிகு பண்பாட்டுக் கோலங்கள் இசைக்க;
கற்புக்கு அறம்பிழைத்த வேந்தனை ஒறுத்த கண்ணகி
நட்புக்குக் காணுக்கேள்மை பூண்டு வடக்கிருந்த பிசிராந்தையர்
வண்மைக்கு முல்லைக்குத் தேர் தொடுத்த பாரி
திண்மைக்கு பரமனுக்கும் அஞ்சா நக்கீரன்
பெண்மைக்கு தெய்வம் பலவாக்கித் தொழுது

கல்தோன்று மண்தோன்று முதுபழமை முழங்கி
எண்ணிறந்த பழங்கதைகள் உடுக்கடித்துச் சன்னதமாடி
தாளா இன்பப் பெருக்கில் மாளும் 'பழந்தமிழா'!

நிசஉலகில் புரியும் அலங்கோலங்கள் அப்பப்பா!
பெண் பிறப்பைத் தரித்திரச் சீவனாக்கி
கொடும் சீதனம் காட்டி மாளவைத்து
வாழ்வு காணுக் கன்னியாக்கி
கலக்கமும் கண்ணீரும் பெருக்கிடுவீர்.

மற்றவள் கற்புக்கு வேட்டு வைத்து
மனைவியின் கற்புக்கு அணைகட்டுவீர்.

பெற்றவளை அந்தரிக்க விட்டு
செத்தபின் மேளதாளங்கள் கூட்டி
ஊருக்குப் புகழ் நாட்டுவீர்.

தமிழருவி தழைத்தோங்குக !

## Peoples Trade & Supplies

**Wholesalers & Retailers in Provisions, Groceries, Old News Papers, Empty Gunnies, Packing Materials All kinds of Local Produces & Commission Agents.**

பலவகை உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்

STORES

339, Negombo Road,
PELIYAGODA
No. 3, Maliban Lane,
COLOMBO - 11

No. 143, Maliban Street
No. 112, Fourth Cross Street,
COLOMBO - 11

T'grams: "SARAVANAN"

T'Phone: 25389, 23509

*With the Best Compliments*
*of*

## KUNDANMALS LTD.

110, 114, MAIN STREET
COLOMBO - 11

அற்ப பூசலுக்கு உடன் பிறப்பைக்
கோட்டுக் கிழுத்து இரத்த பாசத்தின்
மகத்துவத்தை மாநிலம் காட்டுவீர்.

மற்றவன் காணிக்குள் வேலியகட்டி
பரந்த நெஞ்சம் பாரறியப் பகர்ந்திடுவீர்.

அயலவனுடன் அகப்பகைமை போக்க
அவன் கோழியைப் பொலிடோலுக்கு இரையாக்கிடுவீர்!

அடுத்தவன் பற்றிப் பொல்லாத பிட்டிசம்வாட்டி
கடைகெட்ட கைவண்ண ஜாலத்தில் பூரிப்பீர்.

பென்சன் எடுத்தபின் 'தொண்டுள்ளம் பிறக்க'
சங்கக்கடை, விவசாயக்குழு, கோயில் நிர்வாகசபை
எனப் பலவற்றில் கொள்ளையடிக்கச் சேர்ந்திடுவீர்.

வீட்டில் துன்பம் பெருகிடும் வேளையில்
மாற்றானின் செய்வினை சூனியம் எனச்சாட்டி;
வாது புரிந்து 'கழிப்புச்' செய்வீர்.

பக்தி வெள்ளம் விரதமாக ஓடி
ஆடுமாடு கோழி சாராயம் சகிதம்
முழுக்காடி விரதம் முடிப்பீர்.

உன்னவனிடமே 'ஆங்கிலத்தில்' சொற்சிலம்பம் ஆடி
மொழிப்பற்றைப் பாரினில் பறைசாற்றிடுவீர்.

'பண்பாடு' பேசியே சாதி சாதித்து,
வெட்டியவனைக் கிணற்றுக்குள் நீர்அள்ள மறுப்பீர்.
கட்டியவனை வீட்டுக்குள் புகவிடத் தடுப்பீர்.
திட்டியவனைத் தீர்த்துக்கட்டக் கலகம் செய்வீர்.
கொண்டவனைச் சமூகப் பகிஷ்கரிப்பு நடத்துவீர்.
ஆண்டவனை அணுக மறியல் போடுவீர்.

கணக்கற்ற மூடநம்பிக்கைகள் வெற்றுச் சடங்குகளை;
களவுக்கு 'மைபோட்டு'ப் பார்த்து
விஞ்ஞான ஆழத்தை முழம் போடுவீர்.

எடுத்ததற் கெல்லாம் சோதிடம் நாடித்
தலைவிதியை நொந்து ஓலமிடுவீர்.

தொட்ட தனைத்தும் 'சகுனம்' பார்த்து
பல்லி, பூனை, நாய் என்பன கட்டியழுவீர்.

தாலி விற்றுப் போட்டிக்குத் திருவிழா நடாத்தி
வீரப் பிரதாபம் பொறித்து இந்நூற்றாண்டில்
நீ ஓர் அசல் கோமாளி.

வீரகத்தி கதிரமலை

இன்றுபோல் என்றும் உங்கள் வாழ்க்கைச் சக்கரம் தாமதம் இன்றி ஓட
எங்கள் வாழ்த்துக்கள்

சிறந்த முறையில் சகல விதமான

★ சுவர் மணிக்கூடுகள்
★ மேசை மணிக்கூடுகள்
★ கைக்கடிகாரங்கள்

உத்தரவாதத்துடன் திருத்துவதற்கு யாழ்நகரில்
சிறந்த பிரபல்யமான ஸ்தாபனம்

# செனித் வோர்ச் கொம்பனி

*56, கஸ்தூரியார் வீதி* :: **யாழ்ப்பாணம்**

எல்லாவிதமான உலோகப்பொருட்களும்
கார், லொறி, சயிக்கிள்
உதிரி பாகங்களும்
சிறந்த முறையில்
நீடித்த பாவனைக்குரியதாய்
நிக்கல் குரோமியம்
பிளேற்றிங் செய்வதற்கு
நாடுங்கள்

**K. B. METAL WORKS**
**ZENITH WATCH CO.**
**56, Kasthuriar Road**
**JAFFNA**

மலிவான விலையில் தரமான
பாத அணிகள்

இது மிக அபூர்வம்

ஆனல்,

பிரகாசில் கிடைக்கும்

**Pragas Stores**
31, 33, Kasthuriar Road
JAFFNA

# மறைந்தும் மறையாதவர்

ஈழவேந்தன்

உலகத்திலே எண்ணில் அடங்காத எத்தனையோ பேர் தோன்றி மறைகிறார்கள். அவர்கள் அனைவரைப் பற்றியும் யாம் எண்ணிப்பார்ப்பதில்லை. எண்ணிப் பார்க்கிற தேவையும் கூட இல்லை. உண்மையில் அப்படி எண்ணிப் பார்ப்பது எம் மூளைக்கு தேவையற்ற வீண் முயற்சியாகும்.

உலகில் பிறப்பு உண்டு என்பதை யாம் ஏற்கின்றபோது இறப்பும் உண்டு என்பதை யாம் ஏற்றேயாக வேண்டும். எங்கு தோற்றம் உண்டோ அங்கு ஒடுக்கமும் உண்டு. இது இறைவன் கட்டளை. இது இயற்கை நியதி. ''செத்தாரெல்லாம் எழுவார் என்று கைத்தாளம் போடுங்கள்'' என்று பாடிய மரணமில்லாப் பெருவாழ்வை வேண்டிய வடலூர் வள்ளலாரும் உலகியல் அடிப்படையில் வைத்துப் பார்க்கும்போது செத்துத்தான் போய் விட்டார் என்று ஏற்கவேண்டியிருக்கிறது. ஆம், அவர் உடலோடு எம்மிடையே இல்லை. ஆனால், ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் உயர்தமிழ்ப் பாடல்களால் எம்மிடையே வாழ்ந்துகொண்டுதானிருக்கிறார்.

ஆம், சாவை யாராலும் வெல்ல முடியாது என்ற சாகாத உண்மையை யாம் உணர்ந்துள்ள நிலையிலும் உலகில் சிலர் மறைகின்றபோது எம்மையறியாமலே எம் உள்ளம் ஆழ்ந்த துயரில் மூழ்கிறது. கண்களில் நீர் பெருகுகிறது. எமக்குத் துயரை வருவிக்கும் மேற்குறித்த சிலர் இருவகைப் படுவர். உற்றார், உறவினர், நண்பர் ஆகியோர் ஒருவகையினர். மற்றையோர் உலகப் பெருமக்கள். எம் பெற்றோர் மறைகின்றபோது எம்மைப் பெற்று வளர்த்துப் பேணிக்காத்தோர் என்ற காரணத்தால் — இரத்தபாசத்தால் கண்ணீர் விடுகிறோம். உற்றார், உறவினர், நண்பர்கள் மறைகின்றபோது நெருங்கிப் பழகிய காரணத்தால் கண்கள் கலங்குகின்றன; ஆனால் உலகப் பெருமக்கள் மறைகின்றபோது அவர்களோடு எதுவிதமான நேரடித் தொடர்பு அற்ற நிலையிலும் எம் நெஞ்சம் வேதனையால் வெம்புகிறது.

எடுத்துக்காட்டாக மகாத்மா மறைந்த போது, மாட்டின் லூதர் கிங் மறைந்த போது, ஜவகர்லால்நேரு மறைந்தபோது, மறைமலையடிகளார் மறைந்தபோது, திரு. வி. க. மறைந்தபோது, சேர் பொன். இராமநாதன் மறைந்தபோது, சேர் பொன். அருணாசலம் மறைந்தபோது, வன்னியர் மறைந்தபோது, நாகநாதன் மறைந்தபோது எம்மையறியாமலே எம் கண்கள் கலங்கின; இதுகொண்டு மேற் குறித்த பெருமக்கள் எவ்வித குறையுமற்ற தெய்வீகப் பிறவிகள் என்று யான் கூற வரவில்லை. அவர்கள் அடிப்படையிலே மானிடப் பிறவிகள்தான்; ஆனால் அவர்கள் தமக்கென்று, தன் குடும்பத்திற்கென்று வாழாது தாம் பேசிய மொழிக்காக—தாம் பிறந்த இனத்திற்காக—தாம் வாழ்ந்த நாட்டிற்காக—உலக மக்களின் உயர்விற் காக வாழ்ந்து மறைந்தவர்கள். இப் பெருமக்கள் வரிசையில் தமக்கென்று தனியிடம் பெற்று விளங்குபவர்தான் அறிஞர் அண்ணா அவர்கள். அவர் மறைந்தபோது தமிழ் கூறும் நல்லுலகு எங்கும் வாழ்ந்த தமிழ் மக்கள்—குறிப்பாகத் தென்னகத்தில்—தமிழகத்தில் மக்கள் உற்ற துயர்—அதை வெளிக்காட்டிய முறை உலகம் இதுவரை கண்டிராத—வரலாற்றில் இதுவரை வரையப்படாத உணர்ச்சிப் பெரு வெள்ளமாகவே விளங்கியது.

மகாத்மாவுக்கும், ஜவகர்லாலுக்கும் அடுத்த நிலையில் ஒரு தலைவனின் மறைவுக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் இலட்சக் கணக்கில் மக்கள் கூடினார்கள் என்றால் அது எம் அண்ணாவின் மறை

வுக்குத்தான் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது: ஏன்? செய்தி ஏடுகள் செப்பும் செய்தியும் இதுதான்.

காந்தி அடிகள்—உலக மகாத்மா 79 ஆண்டுகள் வாழ்ந்தவர்: 50 ஆண்டுகள் அரசியலில் மூழ்கியவர். ஜவகர்லால் நேரு உலகத் தலைவர். இந்தியத் துணைக் கண்டத்தில் தலைமை அமைச்சராக 17 ஆண்டுகள் விளங்கியவர். உலகில் 74 ஆண்டுகள் வாழ்ந்தவர். நீண்டகாலம் அரசியலுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவர். ஆனால் நம் அண்ணாவோ வாழ்ந்தது ஏறக்குறைய 60 ஆண்டுகள் தாம். அதில் 35 ஆண்டுகள் அரசியலுக்கு ஒதுக்கப்பட்ட வாழ்க்கை. அவர் ஒரு மாநிலத்திற்கு மட்டும் முதலமைச்சராக விளங்கினர். அந்தப் பதவியைக்கூட முற்றாக 2 ஆண்டுகட்குக்கூட வகித்ததில்லை. ஆனால் குறுகிய வாழ்க்கை கொண்ட, ஒரு மாநிலத்திற்கு மட்டுமே தலைவனாக விளங்கிய அண்ணாவின் மறைவு கேட்கக்கூடிய மக்கள் கூட்டம் அவரின் அன்பு தவழும் முகத்தை எப்படியும் பார்க்கவேண்டும் என்று துடிதுடித்தது. 50 உயிர்கள் தம் உயிரை அர்ப்பணித்த நிகழ்ச்சி உலக வரலாற்றில் இதுவரை நடைபெற்ற நிகழ்ச்சி அல்ல. "மக்களின் கண்ணீர் ஓர் உயிரை மீண்டும் திருப்பி அழைக்க முடியுமென்றால் அது அண்ணாவிற்குத்தான் நடந்திருக்கவேண்டும்" என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் (Indian Express) மொழிந்த கருத்து எம் நெஞ்சில் ஆழப் பதிந்துள்ள கருத்தாகும்:

அண்ணாவின் இறுதி ஊர்வலக் காட்சியைக் கண்டு கலங்கிய தூய இன்ப சுத்தானந்த அடிகள் பின்வரும் முறையிலே, கவிதையிலே அக்காட்சியினை எமக்குக் காட்டுகிறார்.

"கட்டுக் கடங்காக் கூட்டமடா
கடலும் கலங்கும் கூச்சலடா
மட்டுக் கடங்கா மனக்கண்ணீர்
மடமட வென்றே கொட்டுதடா
எட்டுத் திக்கும் அண்ணாவின்
இறுதிப் பவனி கண்டன்பர்
முட்டித் தள்ளி முன்வந்தே
முகத்தை மூடிக் கதறுகிறார்."

தாங்க முடியாத துயர் தோய்ந்த இந்நிலையை மற்றுமொரு கவிஞராகிய புத்தனேரி சுப்பிரமணியம்,

"எதையும் தாங்கும் இதயத்தை
ஏற்பீர் என்றேன் மறைவுதனை
இதயம் தாங்க முடியாமல்
ஏங்கித் துடிப்போர் பலகோடி."

என்று எடுத்துக் கூறும் கருத்து எம் சிந்தையைத் தூண்டும் கருத்தாகவே மிளிர்கிறது.

"முற்பறக்ள்! பொடிபோடும் பெரிய மூக்கு! அன்புக்கண்! ஆர்வக்கண்! அறிஞருக்கு அறிஞரையும் அளந்து விடும் ஒளி படைத்த அறிவுக் கண்கள்! தென்பக்கத் தமிழ் வழங்கும் பொதிகைபோலத் தெளிவு தனைப் பறைசாற்றும் அகன்ற நெற்றி! நன்செய்யிலே நெல் முற்றிச் சாய்ந்தது போல நாகரீகமாகப் படிந்து நரைத்த முடி! அடக்கத்தின் சின்னமெனும் சிறிய மேனி! அடங்காத பிள்ளை நடை! துள்ளல் நடை! விடக்கட்டிப் புரளுகின்ற தறிநெய் வேட்டி! வெள்ளைமனம் உணர்த்துகின்ற சட்டை! கையின் தொடக்கத்தை அடிக்கடி தான் இழுத்துக்கொண்டு துண்டெடுத்து முகம் துடைத்துப் பேசும் பேச்சு!" என்று ஒரு பெருமகனால் வருணிக்கப்பட்ட தோற்றப் பொலிவோடு விளங்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

எம் நெஞ்சத்தில் குடியிருக்கும் குன்றக்குடி அடிகளார் கூற்றில் வைத்துக் கூறின்,

"நாடு புகழ்ந்தேத்தும் நல்ல பேரறிஞராய்ப், பாரிலுள்ளோர்க்குப் பைந் தமிழ்ச் சாரதியாய், மலராடு சோலையில் வண்டாடு புதுமலராய், வழக்காடு மன்றத்தில் தேர்ந்த வழக்காடியாய், இன்ன புகழ் சேர்த்த எமது அருமை அண்ணா தாங்கு புகழ் தமிழ் இனத்தின் தானைத் தலைவனாய், தரணிபுகழ் அன்னைத் தமிழின் தவப் புதல்வனாய், வள்ளுவத்தை உலகுணர வைத்தவொரு வான் விளக்காய், தெள்ளு தமிழ் நெஞ்சில் தேன் சேர்க்கும் பேச்சழகனாய், செந்தமிழ் நாவழகனாய், இரக்கத் தனி ஊற்றும் ஏற்றத்தின் சாயல் மலரினை மொய்த்து மயங்கிச் சுழன்றாடும் வண்

டாய்த் தமிழுலகம் வாயாரப் போற்றி மகிழ்ந்து அண்ணா அண்ணா என்று அன்பொழுக அழைத்திட்ட பேரோடு, புகழோடு வாழ்ந்த பெருமகன்'' அறிஞர் அண்ணா அவர்கள்.

இத்தகைய பல்துறைப் பெருமை மிக்க அறிஞர் அண்ணாவின் பணியினைத் தனித்தனியாக ஆராயின் அவை மிக விரியும் என்று அஞ்சுவதினால் இன்றைய உடனடிச் சூழ்நிலைக்குத் தேவையான தணிக்கைக்கு உட்பட்ட சில கருத்துக்களையே யாம் இங்கு கூற முடியும்.

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் இனம் தனது இழந்த பெருமையினை மீண்டும் பெறவேண்டின் தமிழ் இனத்தில் ஆழப்பதிந்து இருக்கும் அழுக்குகளை நீக்கித் தூய்மைப் படுத்துவதே தனது தலையாய பணி என்று கருதியவர். ''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்'' என்று வள்ளுவர் மொழிந்ததற்கமைய தமிழ் இனத்தின் அடிப்படை நோயின் தன்மையை உணர்ந்து சமுதாயச் சீர்திருத்தத்தில் ஈடுபட்டார்கள்; எம் சமுதாயத்தைச் சீர்குலைக்கும் சாதி வெறியைச் சாடிய அவர் நம் சமயத்தில் அழுந்திக்கிடந்த மூட நம்பிக்கைகளோடு மோதினார். குருட்டு நம்பிக்கைகளைக் குழி தோண்டிப் புதைப்பதில் அவர் ஈட்டிய வெற்றி அளவிடற்கரியது. இதனால்தான் நம் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் அண்ணாவின் பெருமையை அன்றே தன் அருங் கவிதையில் முதல் இரண்டு வரிகளில் பின்வருமாறு மொழிகிறார்.

''அண்ணாத்துரை என்னும் அண்ணல்
தமிழ்நாட்டு வண்ணான் அழுக்கெடுப்பில்.''

அவர்கள் கூறியதற்கமையத் தமிழ் நாட்டின் அழுக்கை நீக்குவதில் தமிழ் நாட்டு வண்ணானாக விளங்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள்; எனினும், எப்படி வண்ணான் ஒருவன் அழுக்கெடுக்கும் ஆவலில் சில துணிகளைக் கிழிப்பதற்குக் காரணமாகிறானோ அதே போன்றே அண்ணாவும் அழுக்கெடுக்கும் ஆவலில் சில வேளைகளில் எல்லை மீறியதும் உண்டு; ஆனால் அவர் வாழ்ந்த அந்தச் சூழ்நிலையில் அவருடைய தீவிர கருத்துக்களுக்கும் தேவை இருந்ததென்பதை யாம் மறுக்க முடியாது.

எல்லாம் தமிழிற் செய்தே எம் வாழ்வாம் தமிழைக் காப்போம் என்ற கோட்பாட்டில் ஊறித் திளைத்தவர் மறைமலை அடிகளார். இந்த அடிப்படையில் அடிகளார் தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தார் ஆனால் இந்த இயக்கம் புலவர் நிலையிலேயே பெருமளவு நின்றது. அதைச் செய்தி இதழ்களில் கையாண்டும், அரசியல் மேடையில் முழக்கியும் ஓரளவு பொது மக்கள் நிலைக்கு இறக்கி அம்மக்களிடையே பரவத் துணை நின்றவர் திரு. வி. க. அவர்கள். மறைமலையடிகள் தொடங்கியதைத் திரு. வி. க தொடர்ந்ததைப் பொதுமக்களிடையே முழுமையாகப் பரப்பிப் பேரியக்கம் தோற்றுவித்து, தமிழின் தனித் தன்மையைப் பேணுவதில் மாபெரும் வெற்றி ஈட்டியவர் அறிஞர் அண்ணா அவர்கள்; அறிஞர் அண்ணாவுக்கு மறைமலையடிகளாரின் தனித்தமிழ் இயக்கத்தில் எவ்வளவு தூரம் ஈடுபாடு இருந்தது என்பதற்கு அடிகளார் பற்றி அவர் மொழிந்த பின்வரும் சொற்றொடர்கள் சான்றாக அமையும்.

''மறைமலையடிகள் திருப்பெயர்-பெற்றோர் இட்ட பெயர் வேதாசலம் என்பதாகும்; அதனை அவர் மறைமலையடிகள் என்று மாற்றிக்கொண்டபோது பலருக்கு ஐயப்பாடு. சிலர் இது என்ன புதியதோர் ஆபத்து என்று கேட்டனர்.''

ஆனால், மறைமலையடிகளாரோ தமிழனுக்கு எனத் தனிப்பண்பு உண்டு, மொழி உண்டு என்பதை நிலைநாட்டுவதில் மிக்க அக்கறை காட்டினார். இந்தப் பண்பும் மொழியும் காப்பாற்றப்படாவிடின் நாளாவட்டத்தில் தமிழர்கள் இந்த மொழியையும் பண்பையும் மறந்து தங்களுக்கென உள்ள சீரிய தன்மையை இழந்து விடுவர். உலகில் இன்றுள்ள வாழ்விழந்த இனத்தாரோடு தமிழரும் சேர்க்கப்பட்டு விடுவர். எனவே, தமிழர்கள் தங்கள் மொழியையும் பண்பையும் மறந்துவிடக்கூடாது என்பதற்காக மறைமலையடிகளார் தனித்தமிழ்

With the Best Compliments
of

ALL CEYLON DISTRIBUTORS

DAM STREET
COLOMBO - 12

ருசிமிக்க உணவுப் பண்டங்களுக்கும்
சிற்றுண்டி வகைகளுக்கும்
பேர் பெற்ற ஹோட்டல்

ஹோட்டல் De இக்பால்
HOTEL De IQBAL
44, Hulftsdorp St. :: COLOMBO-12
Day & Night Services

இயக்கம் என்ற பேரால் சீரியதொரு முயற்சியை மேற்கொண்டார்கள்:

இந்த இயக்கத்தை அவர் தோற்றுவித்தபோது இது வெற்றி பெறுமா என்று சிலரும், இது தேவைதானா என்று வேறு சிலரும், இதனால் தமிழகத்திற்கும், தமிழர்களுக்கும் என்ன நன்மை என்று மற்றும் சிலரும் வினவத் தொடங்கினார்கள்.

''ஆனாலும் இன்று யார் நடாத்துகின்ற ஏடானாலும், தனித்தமிழ் இயக்கத்தை எதிர்த்தவர்களது ஏடானாலும் அதில் தனித்தமிழ் நடை கையாளப்படுவதை நாம் காண்கிறோம்.''

இவ்விதம் மறைமலையடிகளாரின் தனித்தமிழ் இயக்கத்திற்கு வாழ்த்துரை வழங்கிய அறிஞர் அண்ணா அவர்கள் மற்றுமோர் இடத்தில் எவ்வளவுதூரம் மக்கள் நாவில் நற்றமிழ்ச் சொற்கள் நடம்புரியத் தொடங்கிவிட்டதென்பதைத் தனக்கே உரிய தனி நடையில் ''ராஜ்யம் மறைந்து அரசு வந்துவிட்டது, சபை போய்விட்டது மன்றம் தெரிகிறது, பேரிகை இல்லை முரசு முழங்குகிறது, மாஜி மந்திரி இல்லை முன்னாள் அமைச்சர் தெரிகிறார். சத்தியாக்கிரகம் மாறி அறப்போர் பேசப்படுகிறது. சேனாதிபதியைக் காணோம் படைத்தலைவன் வருகிறான், மகாநாடு நடைபெறவில்லை மாநாடு நடைபெறுகிறது. ஜில்லா மாவட்டம் ஆகிவிட்டது. மாகாணம் மாநிலமாகிவிட்டது.'' தமிழ் வெல்கிறது. தமிழின் மாற்றார்களோ என்று யாரைப் பற்றி அஞ்சினார்களோ அவர்களின் அருந்தொண்டும் தமிழருக்குக் கிடைக்கிறது.

இவ்விதம் தனித்தமிழின் இயல்பைப் பேணிக்காப்பதில் பேரார்வம் காட்டிய அண்ணா அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தை இந்த அடிப்படையில் கட்டிக்காக்க முடியும் என்பதை 3-1-1968இல் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் நிகழ்த்திய பேருரையில் ஒரு பகுதியில், எம் அறிவுக் கண்களைத் திறக்கும் முறையில் இனிது எடுத்து இயம்பியுள்ளார்: இதோ அப்பகுதி: ''தமிழ்ச் சமுதாயம் தமிழ்மொழியின் அடிப்படையில்தான் இயங்குகிறது; இதை உணர்ந்திருந்தாலும் எடுத்துச்சொல்ல முடியாமல், எடுத்துச்சொல்லும் வகை அறியாமல் நாம் இருக்கலாம்.''

''ஆனால் தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழமுடியும். தமிழர் வாழ்ந்தால் தான் தமிழ்ச் சமுதாயம் வாழமுடியும் என்று நாம் உள்ளூர உணர்ந்திருக்கிறோம்.''

எதுகை மோனையுடன் தமிழை எடுத்தாண்டு தமிழ் இனத்திற்கு எழுச்சியூட்டிய அண்ணா அவர்கள் ஆங்கிலத்தையும் அழகுறக் கையாண்டு அதன் ஊடாகவும் தமிழின் பெருமையை நிலைநாட்டியவர். 10-1-68இல் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு மண்டபத்தில் அனைத்துலக அறிஞர் முன்னிலையில் தமிழின் பெருமையைப் பின் வருமாறு எடுத்து மொழிந்தார்.

"Tamil has a vitality, a fertility and adaptability and versatility unequalled by any other Language."

இப் பேச்சினை முழுமையாக நேரிற் கேட்கும் பேறு பெற்றவன் யான். என் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

தமிழை வாழ்வித்த அண்ணா அவர்கள் தமிழுக்கு வளம் ஊட்டவும் தயங்கியதில்லை. அவரின் இலக்கியப் பணி, வரலாறு, கதை, கட்டுரை, கவிதை, நாவல், நாடகம், திரைப்படம் எனப் பலபட விரிகிறது. ''எதைச் சொல்லி முடிப்பேன், அண்ணா எண்ணாத துறையே இல்லை'' என்று ஒரு கவிஞன் மொழிந்த கூற்று வெறும் வெற்றுரை அல்ல. ஆனால் பொருள் பொதிந்த பொன்னுரையாகும். பல்சுவை உணவைப் படைக்கும் சமையற்காரன் போல் இலக்கியத்தில் பல துறைகளில் சுவையானவற்றைப் படைத்துத் தந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள். அதனாற்றான் கதைகளால், நாடகத்தால், கட்டுரைத்திறத்தால், பேச்சால், சிதைவில்லாக் கருத்தை ஆக்கிச் சிந்தனை விருந்து வைக்கும் புதையலாம் அண்ணா நாட்டின் புதுமுறைச் சமையற்காரர் என்று ஒரு தமிழ்க் கவிஞன் சாற்றும் கருத்து சால்புடைய கருத்தேயாகும்.

நீதிக் கட்சியில் உருவாகிய அறிஞர் அண்ணா அவர்கள் தமிழர் கட்சியில் வளர்ந்து திராவிடக் கழகத்தில் பெரியாரின் பேரன்பைப்பெற்ற அடியவனாய் விளங்கி தி. மு. க. வைத் தோற்றுவித்து தென்னகத் தமிழரை வழி நடத்திய தனிப்பெருந் தலைவனாய்த் தலையெடுத்து, உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் உறைவிடம் பெற்ற பெருமகனாகவும் விளங்கியவர். படிப்படியாக உயர்ந்து இறுதியில் உலகின் கவனத்தையே ஈர்த்து விளங்கிய அண்ணா அவர்கள் "உங்களுக்காக நான் அல்ல உங்களால் நான்" என்று அடிக்கடி கூறித் தன்னடக்கத்தின் திருவுருவமாக விளங்கினார். "அடக்கத்தோடு பணியாற்றுவேன். அமைச்சர் பதவி வரும், போகும்; ஆனால் இத்துணை நான் கட்டிக் காத்து வளர்த்த பண்பாடு போனால் வராது. எனவே பண்பாட்டை இழக்க மாட்டேன்;" என்று மொழிந்த அண்ணா அவர்கள் வள்ளுவரின் சான்றாண்மையின் ஒளி விளக்காய் ஒளி விட்டார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நிறை மொழியாம் மறை மொழியைத் தமிழ் இனத்திற்குத் தந்த அண்ணா கொள்கை மறவாதீர் என்று அறிவுறுத்தினார். கோபத்திற்கு ஆளாகாதீர் என இடித்துரைத்தார்; கூடி வாழ்வது பொறுப்பான செயல் என்று பொறுமை காட்டிய அறிஞர் அண்ணா "அறிவீர்! குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை" என்ற பெருண்மையையும் எடுத்துரைத்தார்.

இவ்விதம் தமிழ் இனத்தை எல்லாத் துறைகளிலும் வழி நடாத்துவதற்கு முற்றும் தகுதியுடையவர் அறிஞர் அண்ணா என்பதை இன்று நேற்றல்ல 1953லேயே முன்கூட்டியே உணர்ந்த முனிவராக விளங்கியவர் திரு. வி. க. அவர்கள். "தமிழ் வளர்ச்சி பற்றி இதுகாறும் பலர் யாரோ பேசியுள்ளனர், இக்காலமும் பேசி வருகின்றனர், இனியும் பேசப்போகின்றனர். ஆனால், இன்னும் சின்னாட்களில் கண்மூடப் போகும் எனக்கு வண்டமிழின் வளர்ச்சி குறித்து ஒரேஒரு உருவம்தான் தெரிகிறது. அந்த உருவம் தமிழுக்காக வாழும் உருவம், தமிழர் நலனுக்காக உழைக்கும் உருவம், தமிழ் அழிந்து படாமல் தரணி எங்கும் ஓங்க கழலணிந்த வீரன்போலக் காத்து நிற்கும் உருவம், அந்த உருவந்தான் அண்ணாத்துரை; அவரை நம்பியே மகிழ்ச்சியோடு இறப்பேன்." என்று உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து உரைத்த உரை பொய்யாமொழியாக எம்மினத்தை மெய்யாக வாழ்விக்கும் மொழியாக விளங்கியதைக் கண்ணாரக் கண்டோம். ஆனால், என்ன செய்வது? கொடுத்துவைக்காத தமிழினம் தமிழ் உணர்ந்த, தமிழ் அறிந்த இந்த மகனை நீண்டகாலம் எம் வழிகாட்டியாகப் பெற முடியாமற் போனது எம் தீவினையின் விளைவேயாகும்.

இந்தி என்னும் புற்றுநோய் இத் தமிழினத்தைத் தாக்கி இனிய தமிழை உருக்குலைக்க முனைந்தபோது அதனுடன் நீண்ட காலமாகப் போரிட்டு ஆண்டுக் கணக்கில் வைத்துக்கூறின் 1937 தொடங்கி 1969 வரை ஆம் ஏறக்குறைய 32 ஆண்டுகளாகப் போரிட்டுப் பெருமளவு வெற்றிகண்ட இப் பெருமகன் தன்னைத் தாக்கிய புற்றுநோயை இயன்றவரை எதிர்த்து இறுதியில் தோல்வி கண்டது உண்மையில் தமிழினத்தின் தவக் குறை என்றே கூறியாக வேண்டும்.

"பேச்சில்லை! மூச்சில்லை!
பிப்ரவரி மூன்றினிலே!
போச்சே முத்தமிழின்
பொன்றுதலில் தெய்வஉயிர்"

என்று மக்கள் கதறி அழ, கண்ணீர்க் கடலில் மக்கள் தவிக்க எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் எம் அருமை அண்ணா.

ஆண்டுகள் ஏழு உருண்டோடியும் அண்ணாவின் மறைவு எம்மவரை இன்றும் வாட்டியபடியே இருக்கிறது என்பதை யாம் மறப்பதற்கில்லை. ஆனால் எமக்குத் தேறுதல் கூறி ஆறுதல் அளிப்பதுபோல் "தம்பி உயிரற்றவர் என்பதைப் பிணம் என்று பேசுகிறோம். ஒருவன் செத்தால் உயிரற்றவன் ஆகிறான் என்று பொதுவாகக் கூறும் போது அது உண்மைதான். ஆனால் சாவு வேறு உயிரற்றுப்போவதென்பது வேறு; தத்துவம் பேசுவதாக எண்ணிக்கொள்ளாதே தம்பி! உண்மையை உரைக்கிறேன்;

சாகாமலே உயிரற்றவர்களாகி விட்டவர்களும் உண்டு."

"முன்னவரி கொள்ளாமற் பற்றற்று வாழ்கிலாச் சுமையில் மூழ்கி நாடு, மொழி, இனம் மறந்துகிடக்கும் உருவங்கள். உயிர் இருக்கும். உண்ண, உறங்க, உறவாட, உரையாட, பொருள்தேட நடமாடும். ஆனால் இனம் வாழப் பீடுநடை போட, மொழி வாழ, வழி வகுத்திட வேண்டும் என்ற உணர்ச்சி, துடிப்பு, செயலார்வம் அற்றுப்போயிருக்கும்.

"அவர்தான் உள்ளபடி உயிரற்ருர். கொள்கைக்காகவே வாழ்ந்து கொடியவரின் கோரப்பற்களுக்கு இரையாகி இறந்துபடும் மாண்பினர். உயிரற்ரோர் எனும் பட்டியலில் அல்ல, உயிரூட்டம் தருவோர் வரிசைக்குத் தங்களை உயர்த்திக் கொள்கிருர்கள் என்பதுதான் போற்றிடத்தக்க பேருண்மையாகும்" என்ற வாக்கியங்கள் எம்முன்னே நிற்கின்றன.

மேற்கூறிய கூற்று தனது அருமைத் தம்பிகளுக்கு அறிஞர் அண்ணுவிஞல் 21-8-60த் திராவிடநாட்டில் தீட்டப்பட்ட மடல்களில் ஒரு பகுதியாகும். இப்பொருள் பொதிந்த கூற்றிற்கமையத் தாம் பிறந்த இனம், தான் பேசிய மொழி, தான் தோன்றிய நாடு பீடுநடை போடத் தன்னை முற்ருக அர்ப்பணித்து ஒரு குறிக்கோளுடன் வாழ்ந்தவர் அறிஞர் அண்ணு அவர்கள். அவர் வெறும் உயிரற்றவர் பட்டியலில் இடம்பெற முடியாது. அவர் என்றும் உயிரூட்டம் தரும் உயர்ந்தோர் வரிசையிலேயே இடம்பெற்றுள்ளார். தமிழும், தமிழ் இனமும், தமிழகமும் உள்ளவரை அண்ணு வாழ்வது உறுதி. இது வரலாற்றின் முடிந்த முடிபு.

※

## நாம் காணும் சோசலிஸ்ட்

மாடியில் வாழ்ந்து வைன்
சாடியில் திளைத்து
கோடியில் பணம்சேர்த்துப் புது
மோடியில் கார் மாற்றி
வாடியில் தங்கி
ஆயாசம் போக்கி
அநாயசமாக சமதர்மம் முழங்கி
பாட்டாளியின் 'கர்மவீரன்'
சோசலிசத்தின் தந்தை எனச் செப்பி
உழைப்பவனை ஏய்த்துச் சுரண்டும்
'கனவான்'.

— கரவைக் கதிர்

*Visit*

# Joys Chemicals
# &
# Joys Mill

*[Dealers in Agro Chemicals]*

Main Street

**PANDATHARRIPU**

*With the Best Compliments of*

# Yarl Metal Industries

*250 — 254, K. K. S. Road*

**JAFFNA**

*Telephone:* 7042

*Branch:*

63, Bankshall Street

**COLOMBO — 11**

*Telephone:* 26150

**DYES**

**FOR ALL DYES**

**AND**

**TINTS**

**TRY**

# A. C. A. Muthalifb & Co.

227, Darley Road

**COLOMBO 10**

THE PREMIER DYE DEALERS

*With the Best Compliments of*

# Vancon Hardware Stores

*17, Abdul Jabbar Mawattai*

**COLOMBO - 12**

*Phone:* 31626

*Gram:* "VANCON"

# இலங்கைத் தமிழரின் கட்டிடக்கலை

வி. எஸ். துரைராஜா, F. R. I. B. A., A. A. Dipl., F. I. I. A., A. R. A. I. A.,
F. C. I. A., Diploma in Tropical Architecture, Fellow of the Inst. of Arbitrators

சித்திரம், சிற்பம், நாட்டியம், சங்கீதம், இலக்கியம் ஆகிய புனிதக் கலைகளுக்குத் தாய்க்கலையாக விளங்குவது கட்டிடக் கலையாகும். இதை றஸ்கின் என்னும் ஆங்கிலப் புலவர் "Mother of all arts is Architecture" என்று கூறியுள்ளார்.

ஆனல் இன்று எம்நாட்டில் கட்டிடம் கட்டுவதை ஒரு கலையாகக் கருதுவதில்லை. சங்கீதத்திற்கும், நாட்டியத்திற்கும் காட்டும் ஆர்வமும், சலுகையும் இத்தாய்க் கலைக்குச் சிறிதளவேனும் இல்லை என்பது மிக வருந்தத்தக்கது. இன்று நம் நாட்டில் கட்டப்படும் கட்டிடங்கள், இப் புனித கலையை அவமதிக்கின்றன. எங்கு பார்த்தாலும் பார்வைக்கு அவலட்சணமான கட்டிடங்களே தோற்றமளிக்கின்றன. கல்லாலும், சாந்தாலும் கட்டியெழுப்பப்படும் எல்லாக் கட்டிடங்களும் கலைப்பொருளாகக் கருதப்படமாட்டா. கட்டிட சாஸ்திரங்கள் அனைத்தையும் அனுசரித்துப் பார்வைக்கு அழகையும், பாவனைக்கு வசதியையும், மனதிற்கு இரம்மியத்தையும் கொடுக்கும் கட்டிட அமைப்பே கலைப்பொருளாகக் கருதப்படும்.

ஒரு நாட்டின் தொன்மைப் பண்பையும், சீர்திருத்தத்தையும், செல்வச் செழிப்பையும் அந்நாட்டில் கட்டப்பட்ட கட்டிடங்களிலிருந்து தீர்மானிக்கலாம். இந்தியாவின் இந்துநதிப் பள்ளத்தாக்கிலுள்ள மோகன்ஜோதாரோ, ஹரப்பா என்னும் கிராமங்களில் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு இன்று பாழடைந்து கிடக்கும் கட்டிடங்களும், கட்டிட அடிகளும் அந்நாட்டின் ஆதி நாகரிகத்தை வெளிப்படையாகக் காட்டுகின்றன. இன்று புதைபொருள் ஆராய்ச்சி இலாகா புராதனக் கட்டிடங்களைக் காப்பாற்றுவதன் நோக்கம் இதுவே.

ஆதி மனிதன் தடிகளாலும், புற்களாலும் அமைத்த குடிசை முதல் வேலைப்பாடுகள் நிறைந்த கூடகோபுரங்கள் ஈறுக ஏற்பட்டுள்ள கட்டிட முன்னேற்றம் மனிதனின் அயராத கலையார்வத்தை எடுத்துக் காட்டுகிறது.

கட்டிடங்களின் தோற்றமும் அவைகளின் அலங்கரிப்பு முறையும் அவைகளை நிர்மாணிக்கும் சாஸ்திரமும் நாட்டுக்கு நாடு, காலத்துக்குக்காலம் வேறுபட்டுள்ளன. உதாரணமாக இந்தியாவிலுள்ள புராதன கட்டிடங்களுக்கும், ரோமாபுரியிலுள்ள புராதன கட்டிடங்களுக்கும் இடையே எவ்வளவோ வித்தியாசங்களைக் காணலாம். ஏனெனில், ரோமர்களின் வாழ்க்கைமுறை. அவர்களின் மதம், அந்நாட்டின் பூகோளநிலை எல்லாம் இந்தியர்களுடையவை போன்றவையல்ல. ஆகவே கட்டிடங்களின் தோற்றமும் நிர்மாணிப்பு முறைகளும் நாட்டுக்குநாடு வேற்றுமையாகவுள்ளன. இவ்வகைத் தோற்ற வேறுபாடுகளைக் கட்டிடக்கலைச் சரித்திர ஆசிரியர்கள் நுணுக்கமாக ஆராய்ந்து பாகுபாடுகள் செய்துள்ளனர். இவற்றுள் இந்தியக் கட்டிடக்கலையை இந்தோ ஆரியக் கட்டிடக்கலை, திராவிடக் கட்டிடக்கலை, சாணக்கிய கட்டிடக்கலை, இஸ்லாமியக் கட்டிடக்கலை, பௌத்த கட்டிடக்கலை எனத் தொகுத்திருக்கின்றனர். திராவிடர்களாகிய தமிழர்களின் கலை திராவிடக்கலை எனப் பொதுவில் வழங்கப்படுகிறது.

இந்தியாவில் தமிழர்களின் கட்டிடக்கலை சோழ, பாண்டிய, விஜயநகர் மன்னர்களாலும் மதுரை நாயக்கர்களாலும் வளர்க்கப்பட்டு வந்தது. இதன் விளைவாக சிதம்பரம், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், மகாபலிபுரம், வேலூர், மதுரை ஆகிய இடங்களில் இன்றும் வானளாவும் கோவிற்

கோபுரங்களையும் அலங்கார மண்டபங்களையும் காணலாம்;

தமிழ் மன்னர்கள் கலைப்பிரியர்கள். இவர்கள் பிரமாண்டமான கலைச் சின்னங்களாகக் கோவில்களைக் கட்டி, அவைகளை அலங்கரிக்க அதி அற்புத உயிர்ச் சிற்பங்களையும், சுவர் ஓவியங்களையும் தீட்டுவித்தனர். சிற்பக்கலை, சித்திரக்கலை, கட்டிடக் கலை ஆகிய முக் கலைகளையும் ஒன்று சேர்த்துக் கடவுளின் இருப்பிடமாக்கினர். தேவ சன்னிதியில் தெய்வ கன்னிகள் நடமாடினர். கின்னரர் இசை மீட்டனர். நாவலரும், பாவலரும் தேவனைப் போற்றிப் பாடினர்: தெய்வசன்னிதி எல்லாக் கலைகளுக்கும் இருப்பிடமாகி, தேவாலயம் கலாலயம் ஆனது. அங்கு பல லளிதக் கலைகளும் சுடர்விட்டெரிந்து கட்டிடக் கலையைப் பிரகாசிக்கச் செய்தன.

தமிழன் மொழியாகிய தமிழின் இனிமையைப் போற்றிப் பாரதியார் ''நாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்'' என்றார். நாமும் தமிழனின் கட்டிடக் கலையைப் புகழ்ந்து ''நாமறிந்த கட்டிடக் கலைகளிலே தமிழன் கலையதுபோல் அழகான தெங்கும் காணோம்'' எனப் பாடிப் பெருமிதமடைந்தால் மிகையாகாது.

இலங்கையில் தமிழர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறினார்கள். அவர்களின் மொழி, பண்பு, மதம், கலை யாவும் இந்தியத் தமிழரை ஒத்ததாகும்; ஆகவே நமது கட்டிடக் கலையும் திராவிடக் கலைக் குட்பட்டதே.

மகாவம்சம் என்னும் இதிகாச நூலின் படி தமிழர் இலங்கைமீது முதலாவதாகப் படையெடுத்தது கி. மு. 237ஆம் ஆண்டு எனத் தெரிகிறது. தென்னிந்தியாவிலுள்ள ஒரு தனவந்தனான குதிரை வியாபாரியின் இரு புத்திரர்களான சேனன், குத்திகன் என்னும் தமிழ் வாலிபர்கள் சூரதிச என்னும் சிங்கள மன்னனை வென்று 22 வருஷங்கள் இலங்கையை ஆட்சி செய்தனர். இவர்களின் ஆட்சி அசேலன் என்னும் சிங்கள மன்னனால் முறியடிக்கப்பட்டது. இவன் 10 வருஷங்கள் ஆட்சிசெய்தான்; பின் அசேலனை ஏலாளன் என்னும் தமிழ் அரசன் வென்று 44 வருஷங்கள் ஆட்சி செய்தான். இவ்வரசன் பௌத்தமதக் கட்டிடங்களைக் காப்பாற்றினானேயன்றித் தன் மதக் கட்டிடக் கலையை நிர்மாணித்தான் எனத் தோன்றவில்லை. இதற்கு ஆதாரமாக மகாவம்சத்தில் மேல்வருமாறு கூறப்பட்டிருக்கிறது: ''ஒருநாள் ஏலாள மன்னன் தன் இரதத்தில் சவாரிசெய்யும்போது அசந்தர்ப்பமாக அவ்விரதம் பௌத்த ஸ்தூபி ஒன்றில் பட்டு 15 கற்கள் விலக்கப் பட்டபடியால் அவன் மிக மனம் நொந்து 15 கற்களுக்குப் பதிலாக பதினையாயிரம் பொன்களை அக் கோவிலுக்குக் கொடுத்தான்.

ஏலாளனை ஜெயித்த துட்டகைமுனுவுக்கு முன் 66 வருஷங்கள் தமிழரின் ஆட்சி நடந்திருந்தபோதிலும் அக்காலத்தில் தமிழ் மன்னர்களாற் கட்டப்பட்டவை என ஒரு கட்டிட அடியாவது இதுவரை தென்படவில்லையாதலால் இந்த 66 வருஷங்களில் கட்டிடங்கள் கட்டப்படவில்லை என்று கூற முடியாது: தமிழரை அடியோடு அழிக்கக் கங்கணம் கட்டிநின்ற துட்டகைமுனு அவர்களின் கலைச் சின்னங்களைக் காப்பாற்றியிருப்பானோ என்பது விவாதிக்கத்தக்கது.

ஏலாளனின் பின் பல தமிழ் அரசர்கள் இலங்கையை ஆட்சி செய்திருக்கிறார்கள். ஆனால், இவர்களே ஒருவரை ஒருவர் கொன்று இராச்சியத்தை அபகரிக்கும் சூழ்ச்சியில் முனைந்தார்களேயன்றி கலை வளர்ச்சியில் ஈடுபடவில்லையானதால், இம் மன்னர்களின் தலைநகராக அனுராதபுரம் இருந்தபோதிலும் தமிழர்களின் புராதனக் கலைக்கட்டிடங்கள் அங்கு இல்லாது போனதற்குக் காரணம் இதுவுமாகும்.

பொலநறுவை இலங்கையின் தலைநகராக இருந்தபோது அங்கிருந்து ஆட்சி செய்த தமிழ் அரசர்கள் ஓர் அளவில் கட்டிடங்கள் சில கட்டியுள்ளனர். ஆனால் அங்கு இன்று காணப்படும் சிவ தேவாலயங்கள் சிங்கள மன்னர்களால் அவர்களின் சைவ ராணிகளுக்குக் கட்டப்பட்டவை. சிங்கள மன்னர்கள் பெரும்பாலும் இந்தி

யாவிலிருந்து அழகிய தமிழ்ப் பெண்களை அழைப்பித்துத் தமது இராணிகளாகக் கொண்டனர். இவ்விராணிகள் சைவ மதத் தவராதலால் அவர்களுக்கெனச் சிவன் கோவில்களைப் பௌத்த விகாரைகளுக்கு அண்மையில் கட்டுவித்தார்கள். ஆனால் இச் சிவன் கோவில்கள் தூய திராவிடக் கட்டிடக்கலையைத் தழுவியே கட்டப்பட்டுள்ளன.

பொலநறுவையிலுள்ள பல பௌத்த விகாரைகளும் சிங்களத்தில் ''வட்டடாகே'' என்று அழைக்கப்படும் வட்டக் கோவில்களும் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட தமிழ் சிற்பக் கட்டிட நிபுணர்களாலும் சிங்களச் சிற்பிகளாலும் சேர்ந்து கட்டப்பட்டவை. ஆதலால் இப் புராதன கட்டிடங்களில் திராவிடக் கலை வடிவங்களையும் ஒரே கட்டிடத்தில் காணலாம்.

இலங்கையில் தமிழ்நாடாகிய யாழ்ப்பாணத்தின் கிராமங்களிலும் வானளாவும் கோபுரங்களுடன் கோவில்கள் காட்சியளிக்கின்றன. இக்கோவில்களும் பொலநறுவையிலுள்ள சிவ தேவாலயங்களும் நம் பண்டைய கலைப்பண்பை எடுத்துக்காட்டும் அணிகலங்களாக இன்று காட்சியளிக்கின்றன. கொழும்பு கொட்டாஞ்சேனையில் சேர் பொன்னம்பலம் ராமநாதனால் கட்டப்பட்ட சிவன் கோவிலும் நம் கலைக்குப் புத்துயிர் கொடுக்கின்றது.

தமிழர்களாகிய நமது கட்டிடக்கலை கோவில் கட்டிடங்களில்தான் பெரும்பாலும் காணப்படுகின்றன. ஏனெனில் அக் காலத்தின் ஜன சமுதாய வாழ்வில் பகிரங்கக் கட்டிடங்கள் பிரத்தியேகமாகக் கட்டப்படவில்லை. சமூகக் கூட்டங்களும் வைபவங்களும் அநேகமாகக் கோவில் மண்டபங்களிலும் வீதிகளிலுமே நடந்தன. வீட்டுக் கட்டிடங்களும் சிறிதாகவே இருந்தன.

## குடிமகன்

'தண்ணி' விட்டபின்
ஞானபண்டிதனாகி ஞாலத்தைக்
காலடியில் போட்டு
கண்டவன் வேலியை
முட்டி மோதி
கணக்கற்ற சோலியை
விலைக்கு வாங்கி
இதமான பொரியல் இல்லையெனின்
சட்டிபானை பந்தாடி
மனைவியைச் சிந்துபாடி
அளப்பரிய வீரசாகசங்கள் காட்டி
குடும்பத்தைச் சீரழிக்கும் 'குடிமகன்'

— கரவைக் கதிர்

இலங்கை பல்தொழில் நுட்ப தமிழ் மன்றத்திற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

# அண்ணா தொழிற்சாலை

## இணுவில்

தரமான அண்ணா கோப்பியை எப்பொழுதும்
அருந்துங்கள்

தலைமை அலுவலகம் :
அண்ணா தொழிற்சாலை
இணுவில்

தொலைபேசி : 7412

கிளை :
(1) இல. 4, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

(2) 79/1, மெசஞ்சர் வீதி,
கொழும்பு—12

சிறந்த சாப்பாட்டிற்கு இன்றே விஜயம் செய்யுங்கள்
ஆட்டிறைச்சிச் சாப்பாடு

# NAFEESHA HOTEL

22, OLD MOOR STREET
COLOMBO-12
இரவு பகல் சேவைகள்

# பிரதேச அபிவிருத்தி மன்றத்தின் தோற்றமும் அதன் நோக்கங்களும்

செ. ஆறுமுகராஜா

(அபிவிருத்தி உதவியாளர், மாந்தைப் பிரிவு)

[ஏறக்குறைய நான்கு ஆண்டுகளுக்கு முன் இந்நாட்டில் மக்கள் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மேற்குறித்த மன்றம்பற்றி ஆராய்ந்து, இதனால் படித்தவர் மத்தியில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வாறு குறைவடையச் செய்ய ஏதுவாக உள்ளதென்பதைக் கட்டுரையாளர் மிக அற்புதமாக விளங்குகிறார்.]

நீண்டகாலமாகப் பொருளியற் பிரச்சினையில் சிக்குண்டு தீர்வு காணமுடியாது தவித்த இந்நாடு புத்துயிரைப் பெறக் கூடியளவுக்கு சில முன்னேற்றகரமான திட்டங்கள், புதிய அரசினால் மக்கள்முன் சமர்ப்பிக்கப்பட்டன. ஐந்தாண்டுத் திட்டம், பட்டதாரிப் பயிற்சித் திட்டம், பிரதேச அபிவிருத்தி மன்றம், தேசிய இளைஞர் சேவைச் சபை ஆகியவை மாற்றுமருந்தாக முற்போக்கு அரசினால் தயாரிக்கப்பட்ட திட்டங்களிற் சிலவாகும்.

இதுவரை அரச உத்தியோகத்தரால் திட்டமிடப்பட்டு, மக்களிடம் திணிக்கப்பட்ட முறைமைக்கு முற்றுப்புள்ளியிட்டு, சாதாரண மனிதனின் ஒன்று திரண்ட ஆதரவைப் பெற்று, எமது நாட்டின் அபிவிருத்திக்குப் புதிய பாதையமைக்கும் நோக்கத்துடன் அபிவிருத்தி மன்றங்கள் இலங்கைத்தீவின் பல பாகங்களிலும் ஒருமுகமாக ஏற்படுத்தப்பட்டன. உற்பத்தித் துறையில் மக்களைப் பங்கெடுக்கச் செய்தலே பிரதேச அபிவிருத்தி மன்றங்களின் மூல இலக்காகும். இவ்விலக்கை அடைவதற்குக் கூட்டுறவு நிறுவனம் பயன்படுத்தப்படுகிறது. நாடு முழுவதும் பரவலாகக் காணப்படும் மூல வளங்களைப் பயன்படுத்தி, மக்கள் அரசு உத்தியோகத்தருடன் இணைந்து, ஏற்ற திட்டங்களை வகுத்து சிறு சிறு தொழில்களை ஏற்படுத்த இம் மாற்றம் வழிவகுக்கிறது. இதுவரைகாலமும் கிடைக்கும் மூலவளங்களைக் கொண்டு, எமக்குத் தேவையான முடிவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் வாய்ப்பு மக்களுக்குப் பூரணமாகக் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை இறக்குமதி செய்வதிற் பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டு வந்தது.

இலங்கை சிறந்த செழிப்புள்ள நிலப் பரப்பினைக் கொண்டதொரு நாடாகும். ஆனால் அவையாவும் வளர்ந்து வரும் சனப் பெருக்கத்திற்கேற்பப் பயன்படுத்தப் படாது, பாரம்பரிய தொழில்களுக்குப் புத்துணர்வூட்டாது, எமது அன்றாட தேவைக்காக நாட்டின் வருமானத்தின் பெரும்பகுதியினைத் தானிய இறக்குமதியிலும், சீனி, மிளகாய், பருப்பு வகைகளிலும் செலவிடப்பட்டது. நாட்டில் நடைமுறையில் இருந்து வந்த கருத்தற்ற கல்வி பல லட்சக்கணக்கான இளைஞர்களின் வாழ்வை வளமூட்டத் தவறியதுடன், பொருளாதாரத்தையும் மேலும் சிக்கலாக்கியது.

இவற்றினைக் கருத்திற் கொண்ட அரசு உடனடியாக நிவாரணம் தேடும் பொருட்டு அதாவது, விரக்தியுற்ற இளைஞர்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டுவதற்கும், கிடைக்கும் சாதனங்களை முறையாகப் பயன்படுத்தி அந்நியநாட்டுச் செலாவணிப் பளுவைத் தணிப்பதற்கும் 'பிரதேச அபிவிருத்தி மன்றங்கள்' இந்நாட்டிற்கு அறிமுகம் செய்தது.

இம் மன்றங்கள் சாதாரண மனிதன் ஒன்று திரண்ட ஆதரவையும், அறிவையும் கொண்டு, கூட்டுறவு முறையில் தொழிற்றிட்டங்களைச் செயற்படுத்த மூலக் கருவியாக விளங்குவது, சர்வதேசரீதியில் மக்கள் கவனத்தைக் கவரும் என்பதில் ஐயமில்லை. உள்ளூராட்சி மன்ற எல்லைகளே (கிராமசபை, பட்டினசபை ஆகியன) இம் மன்றங்களின் எல்லைக் கூறுகளாகும். இதுவரை 583 இம் மன்றங்கள் பரவலாகத் தாபிக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகின்றன. இம் மன்ற உறுப்பினராகப் பின்வருவோர் உளர். மன்றத் தலைவர்—உதவி அரசாங்க அதிபர், உப தலைவர்—உள்ளூராட்சி மன்றத் தலைவர், செயலாளர்—அபிவிருத்தி உதவியாளர். விவசாயப்பகுதி, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், சிறுகைத்தொழிற் பிரிவு, பொலிஸ்பகுதி, சுகாதாரப்பகுதி, காணி ஆணையாளர் திணைக்களம், கிராம முன்னேற்றத் திணைக்களம் ஆகிய பகுதிகளின் பிரதிநிதிகளும், கிராம முன்னேற்றச் சங்கம், பயிர்ச்செய்கைக்குழு, உள்ளூராட்சி மன்றம் என்பவைகளின் உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர். ஒவ்வொரு மன்றத்துக்கும் ஏறக்குறைய ரூபா 200,000 ஒதுக்கப்பட்டுள்ளது. மாதமொருமுறை கூடி அங்கத்தவரால் சமர்ப்பிக்கப்படும் ஆலோசனைகளை ஆராய்ந்து, திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஏற்ற நடவடிக்கைக்கு அனுப்பப்படும்.

ஒவ்வொரு மன்றத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்படும்.

I. ரூபா 50,000/- = (25%) கைத்தொழிற்றிட்டங்களுக்கு.

II. ரூபா 70,000/- = (35%) விவசாயத் திட்டங்களுக்கு.

III. ரூபா 80,000/- = (40%) பாதை விருத்திக்கும் தொழில் சம்பந்தப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கும்.

இம்மன்றங்களின் பொறுப்புக்கள் திட்டமிடல், பொருளாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டபோதிலும், அப்பொறுப்புக்கள், கைத்தொழிற்றிட்டங்களைப் பொறுத்து, கைத்தொழில் அமைச்சுக்கும் (சிறுகைத்தொழிற்பகுதி), கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகிய இரு பகுதிக்கும் பரவலாக்கப்பட்டுள்ளன. இம்மன்றங்களின் இணைப்புக்குழு, கைத்தொழிற் திட்டங்கள் தொடர்பாக மன்றங்களின் கொள்கைகளைத் தீர்மானிப்பதுடன், முதலீடு முறைகளையும் வரையறைசெய்யும். சிறுதொழிற் பகுதி, கைத்தொழில் அமைச்சு, கூட்டுறவு அபிவிருத்திப் பகுதி ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட செயற்குழு (அ) மூலவளச் செறிவு, (ஆ) குறைந்த அந்நிய செலாவணி, (இ) வேலைவாய்ப்பு என்ற அடிப்படையில் ஆய்வுகளை நடத்தித் திட்டங்களுக்கு அநுமதி வழங்கும்.

இம் மன்றங்களுக்குக் கீழ்ச் செயற்படுத்தப்படும் கைத்தொழில், விவசாயத் திட்டங்கள் கூட்டுறவு முறையை அடிப்படையாகக்கொண்டு செயற்படுவதனுல், கூட்டுறவுணர்வை மக்கள் மத்தியிற் பதியச் செய்து, தேசிய ரீதியில் சிந்திக்கவும், பணிபுரியவும் வழிசெய்கிறது. இம்மன்றத் தின்கீழ் அமையும் திட்டங்களை முகாமை வகிப்பதற்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படுவதோடு, பங்குபற்றுவோர் உற்பத்திக் கருவிகள் அமைப்புக்களின் உடைமையாளராகவும், அதன் முகாமையைக் கையாள்வோராகவும், ஈட்டப்பெற்ற லாபங்களில் பங்காளராகவும் விளங்குவர். கிராமப்புற விவசாய வளர்ச்சிக்கு ஆக்கம் அளிக்கும் பான்மையில், விவசாய அமைச்சின்மூலம், இம்மன்றம் உப-உணவுச் செய்கை, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகிய விருத்தித் திட்டங்களுக்கு மானியம் வழங்குகிறது.

## பண்ணை அங்கத்தினருக்கு நேரடியாக வழங்கப்படும் மானியம்

### (அ)

| | நீர்ப்பாசன விவசாயம் ஏக்கருக்கு | ஈரலிப்பு விவசாயம் ஏக்கருக்கு |
|---|---|---|
| 1. நிலம் தயாரித்தல் | ரூபா | ரூபா |
| (a) காடு வெட்டுதல் | 200—00 | 200—00 |
| (b) கட்டை பிடுங்குதல் | 350—00 | 200—00 |
| (c) வரம்பு கட்டுதல் (மண் பாதுகாப்பு) | 50—00 | 150—00 |
| 2. வேலி அடைத்தல் | 150—00 | 150—00 |
| 3. உபகரணங்கள் | 800—00 | 800—00 |
| 4. பண்ணைக் கட்டிடம் | 50—00 | 50—00 |
| | 1600—00 | 1550—00 |

### (ஆ)

## சிறு பாற்பண்ணைக்கு வழங்கப்படும் மானியம்

| | மலைநாடு (Mid Country) | உலர்வலயம் (Dry Zone) |
|---|---|---|
| அலகு (Unit) | 5 பசுக்கள் | 8—10 பசுக்கள் |
| பரப்பளவு (Extent) | 4 ஏக்கர் | 10 ஏக்கர் |
| | | ரூபா |
| புற்றரை (நிலம் தயாரித்தல் புல் நடுதல்) மானியம் வழங்கப்படும் | | 50—00 ஏக்கருக்கு 500—00 (இறுதி) |
| வேலியடைத்தல் | — | 750—00 ஏக்கருக்கு |
| கொட்டகை | 1500—00 | 250—00 |
| உபகரணம் | 250—00 | 250—00 |
| போக்குவரத்து மானியம் | 250—00 | 250—00 |
| | 2000—00 | 2000—00 |

### (இ)

கோழிப்பண்ணை அமைப்பதற்கு மானியம் ஒரு கோழிக்கு ரூபா 4—00 வீதம் 2000—00 ஆகக் கூடுதலாக வழங்கப்படும்.

இதுவரை இம் மன்றங்கள் மூலம், கைத்தொழில், விவசாய, மீன்பிடித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, பல்லாயிரக் கணக்கான இளைஞருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளன. செங்கட்டி, பனங் கட்டித் தொழிற்சாலைகள் பல நாட்டின் பல பாகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் அநேக மாவட்டங்களில் அமைக்கப்பெற்று, மிளகாய், உருளைக்கிழங்கு, சோயா அவரை, பாசிப்பயறு, பருப்பு, மரவள்ளி, வாழை, கரும்பு, கொம்புப் பயறு, நிலக் கடலை, இறுங்கு, எள்ளு ஆகியன பயிரிடப் பட்டு வருகின்றன.

எடுத்துக்காட்டாக, மன்னார் மாவட்டத்தில் 1974ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடங்கப்பெற்ற கடலட்டை பதனிடும் தொழிற்சாலை, நவம்பர் மாதத்தில் ரூபா 130,091/- வருமானத்தைப் பெற்று, கணிசமான அந்நிய செலாவணியை ஈட்டியுள்ளது. 1 இறாத்தல் கடலட்டையின் வெளிநாட்டுச் சந்தை விலை 2·5 அமெரிக்க டொலராகும்.

இவ்விதம் நாட்டில் கிடைக்கும் மூல வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி, அபிவிருத்தியை ஊக்கப்படுத்தும் 'பிரதேச அபிவிருத்தி மன்றம்' இளைஞர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் 'மருந்தகம்' என்று வருணிக்க இடமுண்டு.

# தம்பியே தட்டிக்கேளுன்னை

ஏனடா தமிழ்த் தம்பி
வேண்டாப் பழைமைகளைக் கட்டிக்காக்கிறாய் !

செத்துச் சீரணித்து மண்ணோடு மண்ணாகி
மக்கி மடிகின்ற மதியற்ற போக்குகளைத்
தூக்கி நிறுத்தித் தூசி துடைக்கின்றாய்.

நோக்கில் தவறிழைத்தால் தம்பி
போக்குப் பிழைக்குமடா...........

கிராமச் சங்கத்தால் கட்டிவிட்ட
கிணறும் பொதுக் கிணற்றில்
''தீண்டாதே தீட்டு'' என்று கொடுந்
தீமைதனைக் கனவிலும் நினைக்காதே !

கோயில் மணியோசை சாதி பார்ப்பதில்லை
கொண்டிருக்கும் கடவுளுக்குப் பேத மங்கில்லை
வாயிலின் முன்னேதான் சாதிப் போராட்டம்
பாயில் படுத்துக் கொண்டே
நோயை அறியாது நொந்துகொண் டிருக்கிறாயே !

விதியை நோகாதே! கதியே இதுவென்று
மதியை இழந்ததால் வந்ததே இந்தவினை !

ஓடும் ரத்தத்தில் ஒளிரும் கண்களில்
தேடிப் பாரடா தம்பி ! சாதி
தெரிகிறதோ என்று ...... ....

முன்னவன் விதைத்த சொத்தை — கண்ணை
மூடியே பின்பற்றுதே — அன்னவன்
சுய நலத்தால் ஆனதே இந்தக் கதி !

தீய நெறி இவைகளை — இனி
''தீண்டாமை'' உனக்கு வேண்டும் !

தம்பியே தட்டிக் கேளுன்னை
தவறு எங்கென்று தேடிப்பார் !

குறைகளைச் சுமந்தவன் நீ, இன்று
குற்றவாளி நீதான் என்பேன் !

கற்பை விற்றவள் வயிறு வளர்க்கின்றாள்
காறித் துப்பி ''வேசி'' என்கிறோம் !
சாதியை வைத்தே தமிழை வளர்க்கிறான்
சரித்திரமே ........... இவனுக்கு என்ன பட்டம் !

கதிர் பொன்னுத்துரை

# தனக்கென்றொரு பாதை

"நான் உங்களை விரும்பினவன்தான். உங்களுடன் அன்பாய் ஆதரவாய்ப் பழகின வன்தான். நான் உங்களை இப்போ காத லிக்கிறேன் தான்; ஆனால் நான்தான் உங் களை முதலில் காதலிச்சேன் என்றால் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவே முடியாது."

"அப்படி என்றால் நான்தான் உங்களை முதலில் காதலிச்சேன் என்று சொல்லு றீங்களா? நீங்கள் அப்படிச் சொல்லுவீர் கள் என்றால் அதைவிட அவமானமே எனக்கில்லை".

"அப்படி அவமானம் என்றால் விட்டிட் டுப் போங்களன், நான் என்ன இழுத்தா பிடிக்கிறன்".

"நானும் ஒருவரையும் இழுத்துப் பிடிக்கவில்லை, விருப்பம் இல்லை என்றால் போறதுதானே".

இப்படியே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடாமல் வாதாடிக்கொண்டிருந்தனர் விமலும், லதாவும். அன்றுதான் லதா தன்னைக் காதலிக்கிறாள் என்ற உண்மை விமலுக்குத் தெரியவந்தது. இதுவரை நான் அவள்மீது வைத்திருந்த சுயநலமற்ற, சபலமற்ற அன்புக்குக் காதல் என்ற வடி வத்தைக் கொடுத்தான். ஆனால் காதல் மலர்ந்த அடுத்தகணமே அவர்களுக்குள் நீயா நானா பிரச்சினை தொடங்கி விட்டது. பாவம், விமல் அவளுடன் உண்மையிலேயே அன்பு வைத்துப் பழகிவந்தான். தான் அவளைக் காதலிக்கக் கூடாது. அவ்வாறு காதலிப்பின் அது அவளுக்குப் பிடியாது என்று கணக்குப் போட்டு மிகவும் பண் புடன் பழகி வந்தான்; ஆனால் லதாவோ, விமல் தன்னைக் காதலித்து அதை வெளிச் சொல்லப் பயப்படுகிறான் என்று நினைத்து அவனை விரும்பி மனதாரக் காதலித்தாள், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் லதா தன்னைக் காதலிக்கிறான் என்று அறிந்ததும் தனது எண்ணங்களைத் தனது இளமையின் உணர்ச்சிகளுக்கு அடிமையாக்கித் தனது காதலியாக மாற்றினான். இதனால்தான் என்னவோ யார், யாரை முதலில் காதலித்தார்கள் என்பது பெரும் பிரச்சினை யாக இருந்தது.

"இப்ப என்ன லதா, நமக்குள் எப்ப டியோ காதல் மலர்ந்துவிட்டது. யார் யாரைத்தான் காதலித்திருந்தால் என்ன? சரி, நானே உங்களை முதலில் காதலிச் சேன்" என்று பேச்சை அடக்க முயன்றான் விமல்.

"வேண்டாம் வேண்டாம், நான்தான் உங்களைக் காதலிச்சேன், போதுமா" என்றாள் லதா.

பாவங்கள், ஒருவரில் ஒருவர் உயிரையே வைத்திருந்தனர். ஏதோ தமது இயல்புக் கேற்ப உளறிவிட்டார்கள். இடைவேளை மணி ஒலிக்கவே இருவரும் தத்தம் வகுப்பு களுக்கு விடை பெற்றுச் சென்றனர். அன்று இருவருக்கும் படிப்பே ஓடவில்லை, "சரி யான வாயாடிதான்" என்று நினைத்த படியே இருந்தான் விமல். 'விட்டேகொடுக்க மாட்டார் போலிருக்கே' என்று எண்ணிய வண்ணம் இருந்தாள் லதா.

அன்புக்குறைவே இல்லாத அவர்களின் கல்லூரிக் காதல் வாழ்வு வாரத்திற்கு 5 தடவை என்ற வேகத்தில் ஓடிக்கொண் டிருந்தது. பள்ளியில் அவர்கள் சேர்ந்து பேசுவதோ சொற்பநேரமே. அதுவும் மூலை முடுக்குகள், ஒதுக்குப் புறங்களை அவர்கள் ஒருபோதும் நாடுவதேஇல்லை. ஆனால், அவர் கள் பேச்சில் போட்டிதான் எப்போதும். எந்த விஷயத்தை எடுத்தாலும் மாறான கருத்தையே இருவரும் கொண்டிருந் தனர். வெறும் பேச்சுக்காகப் போட்டி போட்டுப் பழகியவர்கள் போகப்போக அற்ப விஷயத்திற்கெல்லாம் வாதாடினர்.

அவர்களின் மாறுபட்ட சமய நம்பிக்கை களினால் உண்டான தர்க்கங்கள் அவர்களின் காதல் வாழ்வின் பெரும் பகுதியையே விழுங்கிவிட்டது. ஒருநாள் "எனக்கு

ஒரே செலவில் தமக்கும் பிறர்க்கும் நயம்வர வாய்ப்பான வழியை
நாடுதல் உத்தமமல்லவா !

*

நாடு நலம்பெற, நாம் நற்சேவை செய்ய,
எமது உற்பத்திப் பொருட்களை வாங்கி உபயோகியுங்கள்.

வணக்கம்

*

அதிபர்,

## மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7233 தந்தி: "மில்க் வைற்"

கிளை : 79, மெசெஞ்ஜர் வீதி, கொழும்பு—12

தொலைபேசி : 36063

மில்க்வைற் சோப் மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டு வருகின்றோம்.
சேகரித்துக் கொடுத்து அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



*With the Best Compliments*

*of*

↓

## P. B. UMBICHY LTD.

SHIPS AGENTS, CHARTERS, CUSTOMS CLEARING &
FORWARDING AGENTS

175, BANKSHALL STREET
COLOMBO - 11

*T'Gram:* Umbichy, Colombo *T. Phone:* 21972 & 32347

கிறிஸ்தவர்கள் என்றால் பிடியாது'' என்றாள் லதா. ''ஓகோ அப்படியா, எனக்கு இந்துக்களை ரொம்பவும் பிடிக்கும்'' என்றான் விமல்.

''இயேசுவின் போதனைகள் எனக்குப் பிடிப்புத்தான். ஆனால் அவரைப் பின் பற்றுகிறோம் என்று சொல்லித் திரிபவர்களைக் கண்டால் எனக்கு அருவருப்பு'' என்றாள் லதா.

''அப்படி என்றால் என்னை மட்டும் எப்படிப் பிடிச்சுது? அதுதான் காதலுக்கு கண், மண் தெரிவதில்லை என்று சொல்லுறவங்களோ'' என்று கேட்டான் விமல்.

''இல்லை, விமல் உங்களுடன் பழகின பின்னர்தான் கிறிஸ்தவர்களும் நல்லவர்கள் என்ற உண்மை எனக்குத் தெரிய வந்தது'' என்று சொல்லிக் காரசாரமான தமது வாதத்தை அன்பு வார்த்தையால் முடிவுக்குக் கொண்டுவந்தாள் லதா.

ஏதோ ஒன்றைப்பற்றி வாதாடுவதும் கடைசியில் அதைத் தம் அன்புக்கு அடிமையாக்கி ஒத்துப் போவதும் வழக்கமாக இருந்து வந்தது.

எதைத்தான் எப்படித்தான் பேசித் தீர்த்தாலும் அவர்களின் பேச்சில் ஒரு துளி ஆபாசத்திற்கு இடமே இருக்கவில்லை. பிறருடன் வாதிட நேரிட்டால் தமது கொள்கைகளைத் தூக்கி எறிந்து விட்டு ஒன்று சேர்ந்து மற்றவரை எப்படியும் மட்டம்தட்டி விடுவர்.

இவ்வாறே அன்பை மையமாக வைத்து ஓடிய காதல் வாழ்வு தவணைக்கு ஒரு விடுமுறையுடன் கடைசித் தவணையை அடைந்தது.

வழமைபோல் மதிய போசன இடைவேளையில் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். சடுதியாக இடைமறித்தாள் லதா.

''விமல் என்னை ஒரு படத்துக்குக் கூட்டிக்கொண்டு போறீங்களா?'' என்றாள்.

படமா ...? நானா?... உங்களையா?... தடுமாறினான், விமல் சமாளித்துக்கொண்டு ஒரு நல்ல படம் ஓடுதுதான், எந்த ஷோ Show)வுக்குப் போவம்'' என்று கேட்டான்.

''எப்பவாவது ஒரு மத்தியான ஷோ. ஆனால், எனக்கு வீக்டேயிஸ்(Week days)இல் தான் வசதி'' என்றாள் நம்பிக்கையுடன்.

''லதா, நீங்க இவ்வளவு தூரம் போவீங்க என்று நான் நினைக்கவேயில்லை. ஒரு படத்துக்காக schoolலை cutபண்ணி அம்மா அப்பாவைப் பேய்க்காட்டவேணுமா? யாரும் எங்களைப் பார்த்தா என்ன நினைப்பாங்க? அவங்கள் நினைக்கிறது கிடக்கட்டும். எங்களுக்கு மனம் என்று ஒன்று இல்லையா? யாராவது தெரிஞ்சவங்க கண்டிட்டா அம்மாகிட்டே சொல்லாதேயுங்கோ என்று கெஞ்சப்போறீங்களா? தேவை இல்லாமல் பிறருக்குக் கடமைப்படப்போறீங்களா? என்ன லதா, உங்களோடு படம்பார்க்க எனக்கு என்ன விருப்பமா இல்லை? ஒரு நாள் மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் 4 showவும் பார்க்க நான் தயார். ஆனால் எமக்கென்றொரு கட்டுப்பாடு வேண்டும். அதற்காகத்தான் நாங்கள் சுதந்திரமாகப் படத்திற்குப் போகக்கூடிய காலம் வரும்வரை பொறுத்திருங்க'' என்று தன் உள்ளத்துக் கொள்கைகளை விளாசி விட்டான்.

''என்னுடன் அதிக ஞானம் பேசாதீங்க. இதைவிட அதிக ஞானம் பேச எனக்குத் தெரியும். ஏதோ உங்களின் அருகில் இருந்து ஒரு படம் பார்க்க வேண்டும்போலிருந்தது. இஷ்டமில்லாட்டி விடுங்கோ'' என்று தனக்குரிய பாணியில் கண்டிப்பாகக் கூறினாள்.

''எனது அன்பு புனிதமானது. அங்கு இப்படியான அலுவல்களுக்கு இடமே யில்லை'' என்று கூறிவிட்டு விமல் நடக்கலானான். தன் லதாவின் ஆசையை நிறைவேற்றாத கவலையும், ஒரு படம்தானே அவளுடன் போயிருக்கலாம் என்ற இளமையின் உணர்ச்சிகளும் தன் கொள்கையை நிறைவேற்றிய பெருமையும் அவன் மனதில் மாறிமாறி மோதியவண்ணம் இருந்தது. தெருச்சந்தியில் இருந்த தேநீர்க்கடையில் அவனுக்கு விருப்பமான ஹிந்திப் பாட்டு ஒன்று பாடத் தொடங்க அவன் எண்ணம் எல்லாம் பாட்டிலேயே படிந்தது. பாட்டும் முடிய அருகில் உள்ள பஸ் ஸ்ராண்டில்

பஸ்ஸும் வர அதில் ஏறிக்கொண்டான். வீடு சென்ற விமல் பாடசாலை விவகாரத்தை மறந்து படிப்பில் கவனம் செலுத்தினான். பரீட்சைக்கு 2 மாதம் மாத்திரமே இருந்தது. படிப்பை விட்டு வேறு விடயத்தில் தலையிட அவன் விரும்பவில்லை: காதல் என்பது படிப்பில் தன்னையோ லதாவையோ எந்த விதத்திலும் பாதிக்கக் கூடாது என்பதே அவன் விருப்பம்; இதற்காகப் பரீட்சை முடியும்வரையாவது லதாவுடன் பேச்சைக் குறைக்க முயன்றான். ஆனால் லதாவோ அவனை விட்டுவைக்கவில்லை. பாவம், விமலைக் காணாவிட்டாலோ அவனுடன் பேசாதுவிட்டாலோ அவளுக்குப் பிரமை பிடிச்ச மாதிரி. என்ன செய்வான் நிமல். காதலுக்குத் தூய அன்பு என்பதை விட வேறு கருத்தை அவனால் கொடுக்க முடியவில்லை. அவன் முனையவுமில்லை;

அடுத்தநாள் காலை பஸ்ஸுக்குக் காத்து நின்றான் விமல். வழக்கம்போலவே லதாவும் அதே பஸ் ஸ்ரொப்பிற்கு வந்தாள். எப்போதும் புறம்பாக நிற்பவள் அன்று விமலின் அருகில் வந்து நின்றாள். ''விமல், இன்றைக்கு பஸ்ஸில் உங்களின் அருகில் வந்து இருக்கிறேன், கோவியாதையுங்கோ'. என்றாள்.

''லதா, உங்களைப் பக்கத்தில் இருத்திப் பயணம் செய்ய எனக்குப் பயமில்லை. இது தான் ஊரெல்லாம் நடக்குதே. ஆனால் என்னுடைய காதல் புனிதமானது. அதற்கு விளம்பரமே தேவையில்லை. பஸ்ஸில் கூடி இருந்து குசுகுசுப்பதுதான் காதல் என்றால் அது எனக்கு வேண்டாம். என்னுடைய காதலில் ஒரு புரட்சி ஒரு புதுமை வேண்டும்; பண்பு வேண்டும். அதுமட்டுமல்ல, இளவட்டங்களின் கடைக்கண் பார்வையும் கிழடுகட்டைகளின் நக்கல் சிரிப்பும் என்னாலே பொறுக்கமுடியாது.'' என்று சொல்லிக்கொண்டே நிறுத்தாமல்போன பஸ் ஒன்றில் ஓடிச்சென்று ஏறிக்கொண்டான்.

''ம்! என்னவென்றாலும் விமல் நல்லவர்தான்'' என்று நினைத்தபடி வந்து நின்ற பஸ்ஸில் ஏறிக்கொண்டாள்; பஸ்ஸின் பாதைகளில் எல்லாம் விமலின் பூமுகத்தைக் கண்டுகொண்டே போனாள்.

பரீட்சை முடிந்து பள்ளி வாழ்வின் கடைசி நாளில் இருவரும் சந்தித்தனர். வழக்கத்திற்குச் சற்று அதிகமாகவே அன்று பேசினர். இப்படியான பிரிவை அவர்கள் எதிர்பார்த்திருந்தாலும் அன்று அவர்களுக்குப் பொறுக்கமுடியாத ஏக்கம்.

''லதா, இனி உங்களை நான் எப்ப சந்திப்பேனோ எங்கே சந்திப்பேனோ கடவுளுக்குத்தான் தெரியும்'' என்று விமல் தொடங்கவே லதாவின் கண்கள் எல்லாம் கலங்கிவிட்டன.

''விமல், நாம் எங்கேயாவது சேர்ந்து ஓடிவிடுவோமா?'' என்று கண்ணில் நீர் வடியக் கூறினாள்.

''என்ன லதா, இத்தனை நாளும் கட்டிக் காத்த எமது புனித இலட்சியக் காதலை ஊரார் சிரிப்புக்கும் கேலிக்கும் ஆளாக்கப் போறீங்களா. எங்களைப் பெத்தவங்களைத் தலைகுனிய வைக்கப் போறீங்களா. நாய்களும், பன்றிகளும் குட்டிகளைப் பெற்றுத் தள்ளுகின்றனதான்; எமக்கும் அந்த மிருகங்களுக்கும் வேற்றுமை வேண்டாமா? எங்களை வாழ்க்கைக்குத் தயார் பண்ணி பின்னர் சேருவதற்குத்தானே இப்பிரிவு. இல்லை, ஓடித்தான் போய்விட்டால் நாம் நினைத்த இன்பத்தைப் பெற்றுத்தான் விடுவோமா? கடவுளை நம்பித் துணிவோடு காத்திருங்க. கூடிய விரைவில் உங்களை என் மனைவியாக அழைத்துப்போக வருவேன். அனாவசியமாக எனக்குக் கடிதம் எழுதி அப்பா, அம்மாவின் எதிர்ப்பைச் சம்பாதியாதையுங்கோ'' என்று கூறிவிட்டு விடைபெறவே பொறுமையோடு லதா கேட்டிருந்துவிட்டு ''என்னை மறந்திடாதீங்க விமல், நான் ஒரு பெண், உங்களைத் தேடி அலைய இந்தச் சமூகம் இடம் தராது. எனவே நான் எங்கிருந்தாலும் எப்படி இருந்தாலும் என்னைத் தேடுவீங்களா விமல்'' என்று விம்மி, விம்மி அழுதாள். ''உங்கள் கொள்கைக்காக என்னை மறந்திடாதீங்க'' என்று அழுதபடி கூறினாள்;

''தேவை இல்லாமல் அழாதீங்க, உங்களை மறப்பது என் கொள்கை என்றால் உங்களை நான் விரும்பியே இருக்க மாட்டேன். நிச்சயம் உங்களைத் தேடி வரு

வேன். ஆனல், நீங்கள் என்னிலும் உயர் மட்டத்தில் இருந்தால் விருப்பம் என்றல் நீங்களே தேடி வாருங்கள்; ஏனென்றல் உயர் மட்டத்தில் இருப்போரில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை'' என்று சொல்லி அவள் கண்களைத் தன்கையால் துடைத்துவிட்டுப் போய்விட்டான்.

அவன் மறையும்வரை பார்த்திருந் தவள் 6 வருடங்கள் காத்திருந்தாள். அந்த இடைக்காலத்தில் தனக்குரிய பணவசதி யைப் பயன்படுத்தி வெளிநாடு சென்று பட்டதாரியாக வந்து வேலை தேடாம லேயே வீட்டில் இருந்தாள் லதா. அவள் பொழுதுபோக்கெல்லாம் வானெலியும், வெளிநாட்டிலிருந்து வாங்கிவந்த ரேப் றைக்கோட்டும்தான். விமலோ உள்ளூரி லேயே படித்து வேலை பார்க்கவேண்டும் என்ற கொள்கையுடன் வேறும் பல துறை களில் சித்திபெற்று 600 ரூபா சம்பளத்தில் அரசாங்கவேலை பார்த்து வந்தான்.

இனியும் பொறுக்க முடியாமல் லதா வின் வீட்டை அடைந்தான் விமல். ''ஓ! விமலா, வாங்க தம்பி! வாங்க!'' என்று ஆனந்தம் பொங்க வரவேற்றள் லதாவின் தாய். லதா தன்னறையில் தனிமையாக வானெலி கேட்டுக்கொண்டு இருந்தாள்.

''நான் உங்களில் நம்பிக்கை இழந் தும், அவள் அசையவில்லை. தம்பி, லதா வேறு கலியாணத்திற்குக் கண்டிப்பாக மறுத்துவிட்டாள்'' என்றள் லதாவின் தாய்.

விமலோ ''நான் நம்பி நடக்கா விட்டலும் நம்பத்தான் நடக்கிறவன்'' என்றன் பணிவுடன்.

''பெண்ணைப் பெத்த எனக்குத்தான் கஷ்டம் தெரியும் தம்பி, சொந்தத்தில் எத்தனை கேலிகள் நையாண்டிகள்'' என்று தொடர்ந்தாள் லதாவின் தாயார்.

வெளியில் தாயாருடன் யாரோ பேசும் குரல் கேட்டு வெளியே வந்த லதா விமலைக் கண்டதும் அதிர்ச்சியுடன் விமலைக் கட்டி அணைக்க ஓடினள். அங்கு தாயின் பிர சன்னம் அவளைத் தடுத்துவிட்டது.

''என்ன லதா, விமலுக்கு உன்னில் நம்பிக்கை இல்லையாமே'' என்று இழுத் தாள் லதாவின் அம்மா கேலியாக.

''அப்படி என்றல் ஏனும் இங்கு வந்தவர்'' என்று விமலுக்குக் கேட்கும் படியாகவே தாயிடம் கேலியாகக் கேட் டாள் லதா.

''நான் உங்களை நம்பித்தான் வந்தேன். ஆனல், என் நம்பிக்கைக்கு எல்லை போட்டு வைத்திருந்தேன். ஏனென்றல் நான் உங் களை முற்றக நம்பியிருக்க தற் செயலாகச் சந்தர்ப்பம் சூழ்நிலையால் நீங்கள் என்னை மறக்கவோ கைவிடவோ நேர்ந்திட்டால் நான் என்னை ஒரு பெரும் குடிகாரனுக மாற்றக் கூடாதே! தற்கொலை செய்யத் துணியக் கூடாதே என்ற அந்த உயர்ந்த எண்ணத்தில்தான் என் நம்பிக்கைக்கு எல்லை போட்டேன். நீங்கள் எங்கு சென் றலும் எப்படியானவளாக மாறினுலும் உங்களை மனமார வாழ்த்தும் மனப் பக்கு வத்தை வளர்த்தேனேயொழியக் காதல் தோல்வியால் என்னை அழிக்கவோ அல்லது உங்களைப் பழிவாங்கவோ நான் என்றும் எண்ணியது கிடையாது. என்னுடைய புதுமை விரும்பும் மனநிலை உங்களுக்கு எங்கு புரியப்போகிறது'' என்று கூறவே ஆச்சரியத்துடன் கேட்டு நிற்கிருர்கள் தாயும் மகளும்.

''சரி லதா, இனியும் பொறுத்தது போதும்; நீங்களே நாளைச் சொல்லுங்கள்; நான் அழைத்துப் போகிறேன். கலியாணம், பந்தல், பலகாரம் எதுவும் எனக்குப் பிடியாது. இது உங்களுக்குத் தெரியும்'' என்று கூறவே, லதா ''ஆமாம் அம்மா தாலிச்செலவையும், றெஜிஸ்ரர் பண்ணும் முத்திரைச் செலவையும் விட அதிகமாக ஒருசதமும் செலவிடமாட் டார். என்ன சொல்லியும் அவரை மாற்ற முடியாது. அவர் இஷ்டத்திற்கே விட் டிடுங்க'' என்று தன் காதலனுக்குப் பின்னணி போட்டாள்.

பின் தேநீர் அருந்தி விடைபெற விமலுடன் வாசல்வரை கூடப் போனள் லதா. வாசலில் வைத்து விமல் இப்பவே

உங்களுடன் வரட்டுமா'' என்று ஆசையுடன் மெதுவாகக் கேட்டாள்.

''பெத்தமனம் அவ்வளவு சுலபமாக இடம் தராது. ஆக்கப் பொறுத்தனிங்க ஆறவும் பொறுங்க'' என்ருன்;

''உங்களைப்போல ஊருக்குப் பயந்து ஞானம் பேசுகிற கோழைகளை நான் பார்த்ததேயில்லை'' என்று எரிந்தாள் லதா.

அடுத்த சனிக்கிழமை காலையில் தாலி கட்டி லதாவைப் பெற்ருேர், உடன்பிறந்தோர் முன்னிலையில் சட்டபூர்வமான மனைவியாக்கினுன். வந்தவர்களையெல்லாம் வழியனுப்பிவிட்டு லதாவைத் தான் தனியாக இருந்த (Annex) அனெக்சுக்கு கூட்டிச் சென்ருன். இரவுச் சமையல் புதுப் பெண் லதா மீதே விழுந்தது; இரவு உணவை இருவரும் ஒரே கோப்பையில் ஒருவருக்கொருவர் ஊட்டி உண்டனர். இரவு சாப்பாடு முடிந்ததும் கட்டிலில் அமர்ந்த விமல் ''லதா'' என்று அழைத்து, ''நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை, கோவிலுக்குப்போகவேணும், என்னை எழுப்பி விடுங்க. நீங்களும் கெதியா வந்து லைற்றை அணைத்துவிட்டுப் படுங்கள்'' என்று சொல்லிக் கட்டிலில் சாய்ந்தான். சீக்கிரமே வந்து அவனருகில் படுத்துக்கொண்டாள் லதா. அவளுக்குத் தூக்கமே வரவில்லை;

''நிமல், நிமல் என்ன நித்திரையா,, என்று அவனது மூடிய விழிகளைத் தன் கையால் விரித்தாள்.

''காலை முழுவதும் அங்கும் இங்கும் திரிந்தது சரியாக நித்திரை வருகிறது'' என்று கொட்டாவியுடன் கூறினுன்.

''இது எங்களுக்கு முதலிரவல்லவா'' என்று தொடர்ந்தாள் லதா. ''ஓ! அதுவா! கலியாணம் முடிஞ்சதும் முடியாததுமா அந்த ஹோட்டல், இந்த ரெஸ்ட் ஹவுஸ் என்று பறக்கிருர்கள்தான். ஆனுல், எனக்கென்னவோ அதில் விருப்பமே இல்லை. வாழ்வில் எத்தனையோ இரவுகள் கூடி வாழப்போகிருேம். இதற்கு மட்டும் முக்கியத்துவம் என்பது என்னைப் பொறுத்தவரையில் அர்த்தமற்றது'', என்ற சொல்லி அவளை முத்தமிட்டு அவளை அணைத்தபடியே களைப்பால் தூங்கிவிட்டான். புரட்சித் தம்பதிகள் நனவுலகில் தூங்கிவிட்டாலும் கனவுலகில் அவர்களின் இளமை அவர்களை விட்டு வைக்கவில்லை.

''விமல் 6-30 (Six Thirty) ஆச்சு; கெதியாக வெளிக்கிடுங்க'' என்று சேலையைக் கட்டியபடியே தன் கணவனை எழுப்பினுள் லதா. அவசர அவசரமாக வெளிக்கிட்டு ஓடிய தம்பதிகளை ஆலயமணி வரவேற்றது. நிமல் முழங்காலில் உட்கார்ந்து ஜெபம் செய்தான்; லதாவும் அவனைப் பின்பற்றி முழங்காலில் இருந்தாள். ஆராதனை ஆரம்பமாக 8 கீர்த்தனைகள் பாடுவோம் என்ருர் குருவானவர். வாத்தியங்கள் ஒலிக்க சபையார் யாவரும் எழுந்து நின்று பாடத் தொடங்கினுர்கள். லதாவும் சபையோருடன் சேர்ந்து பாடினுள். அத்தனை குரல்களுக்கும் மத்தியில் தன் லதாவின் குரலைக் தரம் பிரித்துக் கேட்டுநின்ருன் விமல். ஆராதனை முடிந்து வெளியே வந்ததும் ''என்ன லதா, பாட்டெல்லாம் பிரமாதம். மிக அக்கறையுடன் பங்கு பற்றினீர்கள். ஏதும் சமயம் மாறுகின்ற யோசனையோ'' என்ருன்.

''உங்களுடன் எல்லா விதத்திலும் ஒத்துப்போகவே விரும்புகிறேன்'' என்ருள்.

அதற்காக இத்தனை வருடமாக நீங்க தொழுது வந்த குலதெய்வத்தை மறந்திடப்போறீங்களா? லதா எனக்குச் சமயம் மாறுகிறவர்களைக் கண்டாலே பிடிக்காது. என்னைப் பொறுத்தவரையில் கோழைகளும், பைத்தியக்காரர்களும்தான் சமயம் மாறுவார்கள். எனது மனைவி அப்படி ஒரு கோழையாகவோ பைத்தியக்காரியாகவோ இருக்க நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன்'' என்று கூறினுன்.

''விமல், நீங்கள் உண்மையில் ஒரு விசித்திரப் பிறவிதான். ஆசைகளை அனுபவித்துவிட்டு, சாகிற வயதில் ஞானம் பேசுகிருர்கள் பெரிய மகாத்மாக்கள்; நாட்டுக்குப் பயந்து காட்டுக்கோடி புனிதம் பேசுகிருர்கள் யோகிகள்; தாம் செய்தவற்றை மறந்துவிட்டு புத்தி புகட்டுகிருர்கள் பெற்றவரும் மற்றவரும். நான்தான்

உங்களின் புனித அன்பையும் பண்பையும் புரியாது விட்டேன். அழகான காதலியை அருகில் வைத்திருந்தும் அனுபவிக்க அவளே சந்தர்ப்பத்தைத் தந்திருந்தும் புனிதத்தைக் காத்தீங்களே, இப்போது அழகான மனைவியை அருகில் வைத்துக்கொண்டு ஞானம் பேசுகிறீர்களே, பெருந்தன்மையைச் செயலில் காட்டுகிறீர்களே, உண்மையில் நீங்க புரட்சிகரமானவரே. உங்களை அடைந்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன்' என்னை விடக் கொடுத்துவைத்தவள் யாருமே இல்லை'' என்று கணவனின் பெருமைகளை அவனுக்கே அளந்து கொட்டினாள்.

புன்சிரிப்புடன் ''இது வீடு அல்ல, தெரு. புகழ்ந்தது போதும். கொஞ்சம் மெதுவாகப் பேசுங்க'' என்று அடக்கினான் விமல்.

''அப்போ விமல், அடுத்த வெள்ளிக்கிழமை எங்கடை கோவிலுக்குப் போவோமா?'' என்று சொன்னாள் செல்லமாக;

''நிச்சயம், லதா நீங்கள் மறந்தாலும் நான் உங்களைக் கூட்டிச் செல்வேன்'' என்று திடமாக விமல் கூறியதும்:

''உங்களுடைய புரட்சிக்குத் தலை வணங்குகிறேன். உங்கள் புரட்சி வாழ்க'' என்று லதா சிரித்துக்கொண்டு கூறவே இருவரும் வாய்விட்டுச் சிரித்தபடியே தொடர்ந்து நடந்து சென்றனர்;

ஜி. என். எஸ்.

## எம் பாதை

அமெரிக்க நீசப்படையும்
அவர்கள் தாசரின் கூலிப்படையுடன்
'கொலு வீற்றிருந்த' பொம்மை அரசுகள்
கட்டவிழ்த்து விட்ட வரலாறு காணா
பயங்கர மனித அழிப்பு 'மைலாய் படுகொலைகள்'
பயிரின ஒழிப்பு நச்சுவாயுத் தெளிப்புகள்
குடிவிடச் சிதைப்பு நாசகார குண்டுத் தாக்கல்கள்
அடுக்கடுக்கா இழைத்திட்ட வேளையிலும்
புகழ் பூத்த இந்தோசீன மக்கள்
அஞ்சாது துஞ்சாது ஒன்றிணைந்து
சீரிய கொள்கைவழி நின்று,
ஆயுதம் தரித்து 'அரக்கர்களை' வீழ்த்தி
ஈட்டிய மகத்தான மக்கள் விடுதலை
மூன்றும் அகில நாடுகளின் ஒளி விளக்கு.

—கரவைக் கதிர்



த - 7

மலையகத்துப் பாட்டாளியின்
நிலையறிய வேண்டுமா ?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் வாரவெளியீடான

## "காங்கிரஸ்"

இதழை வாசியுங்கள்

*

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்**

**CEYLON WORKERS CONGRESS**

72, Ananda Coomaraswamy Mawatha

**COLOMBO - 7**

*With the Best Compliments of*

## P. JAMES

Main Street

PANDATERUPPU

## HOME D LITES

**For Anything of Electrical Goods**

※

*Please Contact us*

## Home D Lites

**No. 7, Model Market,**

**JAFFNA.**

# கோழியும் ஆமையும்

காலைத் தென்றல் சில்லென வீசிற்று
கொக்கரித்து நின்ற கோழி
அருகே நின்ற ஆமையைப் பார்த்துக் கேட்டது,

"ஓ! என் தோழனே!
உன்னைப் பார்க்கும்போது
நான் மிகவும் துக்கமடைகின்றேன்.
இரும்பைப் போன்ற ஆடை
உன் முதுகைப் போர்த்திருக்கிறது
பலம் வாய்ந்த கைகளும் கால்களும் பெற்றிருக்கிறாய்
ஆயினும் ஒரு சாதனைதானும்
உன்னால் சாதிக்க முடியவில்லையே?
மௌனத்தின் இருள் உன்னைச் சூழ்ந்து கொண்டதே!
இப்படி இருக்கும் நீ
எப்படித் திறமையானவனாக முடியும்?
நானோ,
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முட்டையை யிட்டு
மிக அற்புதமான சாதனையை நிலைநாட்டுகிறேன்
அதனால் பெருமையோடு கொக்கரிக்கின்றேன்
நீ எங்கே நான் எங்கே?"

கோழியின் போதனையைக் கேட்டுக்கொண்டு
அமைதியாக இருந்த ஆமை
சற்று நகர்ந்து விலகி நின்றது
அதன் வயிற்றின் கீழே
ஆயிரம் முட்டைகள் கிடந்தன
கொக்கரித்து நின்ற கோழி
வியப்போடு ஆமையை நோக்கிற்று
ஆமை தன் கழுத்தை நெளித்துக்கொண்டே
பதில் சொல்லிற்று.

"ஓ! அறிவுள்ள தோழனே!
நான் சொல்வதைச் சற்று உற்றுக்கேள்
உன்னைப் போன்ற அநேகர்
மனிதர்களாகவும் ஜனித்திருக்கிறார்கள்
நீ ஒரேஒரு முட்டையை இட்டுவிட்டுக்
கொக்கரித்துத் திரிகின்றாய்;

நானே
ஆயிரம் முட்டைகளை இட்டுவிட்டு
அமைதியாக இருக்கின்றேன்
நான் ஒருநாளில் இடும் முட்டைகளை
உன் வாழ்நாள் முழுவதில்கூட இடமுடியாதே
என்னிடம் அடக்கம் உண்டு;
அந்த அடக்கம் ஆயிரம் சாதனைகளைச்
சாதிக்கும் திறனை எமக்கு வழங்குகிறது
அந்த அடக்கம் உன்னிடம் இல்லை
அதனுல்தான் நீ
ஒரேஒரு முட்டையை ஒருநாளில் இடுகிருய்
சில காலங்களில் ஒரு முட்டைதானும்
இடமுடியாத பலவீனத்தை அடைகிருய்.

அடக்கம் இயலாமையின் குறி என்று கருதிவிடாதே!
கொடிய நாகம் கரந்து தான் உறையும்;
ஆனுல் அதன் வயிற்றிலோ
விலை மதிக்கமுடியாத மணித்தரளம் மறைந்திருக்கிறது
குரைக்கும் நாய் கடிப்பதில்லை என்பதை நினைவிற் கொள்!
ஆனுல் மௌனமாகக் கிடக்கும் நாயின் பற்களிலே
உயிரை உறிஞ்சும் விஷம் உறைந்திருக்கிறது
எரிமலை ஒருகாலும் சலசலப்பதில்லை;
அது தன் மௌனத்தைக் கலைத்து விடுமானுல்,
நெருப்பின் நாக்குகளை அள்ளி வழங்கிவிடும்
நிறை குடம் தளம்புவதில்லை,
குறை குடமோ தளம்புவதன் மூலம்
தன்னையே அழித்துக் கொள்கிறது
அடக்கமாக இருக்கக் கற்றுக்கொள்வாய்!
அடக்கம் உன்னை ஓர் அமரனுக மாற்றிவிடும்
உன்னைப் போன்ற மனிதர்களுக்கும்
என் போதனை படிப்பனையாக இருக்கட்டும்.

ஆமை நீரினுள் மூழ்கி மறைந்தது
கோழி தன் தலையைத் தாழ்த்திக் கொண்டது
வைகறைத் தென்றல்
சிரித்துக்கொண்டே தன் பணியைத் தொடர்ந்தது.

எம். எச். ஏ. ஸமது

# நன்மைக்கு நன்மை செய்வது.......

'மானிடராய் இப்பூவுலகில் பிறந்திட மாதவம் செய்திட வேண்டுமம்மா' என நமக்கே பெருமை கூறிக்கொள்ளும் நாம் எந்தளவில் இச்சிறப்பு நிலையினைக் காப்பாற்றி வருகிறோம் என்பது கேள்விக்குரியதொன்று. குழந்தைப் பருவத்தில் தொடங்கும் இந்த வாழ்க்கை இளமைப் பருவம் முதுமைப் பருவம் எனத் தொடர்ந்து பிறப்பென்பதொன்று இருப்பது இறப்பென்பதைத் தெளிவுபடுத்துவதுபோல் இறுதியில் வாழ்க்கை முடிவடைகிறது; முடிந்தது என்ற இந்தச் செயலை நாம் எந்தளவுக்குக் கையாள முடியும் என்பதிலிருந்து எமது வாழ்க்கையின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடியும். கிறிஸ்துவானவர் கடைசியில் ''எல்லாம் முடிந்தது'' என்று கூறி ஜீவனை விட்டார். அவர் கூறிய கருத்து என்னவெனில், தாம் இப்பூவுலகில் அவதரித்ததின் நோக்கம் நிறைவெய்திவிட்டதையே தெளிவுபடுத்தும் ''முடிந்தது அல்லது பூரணமாயிற்று'' என்ற பொருள்படக் கூறினர். நாம் இந்த நிலையை அதாவது பூரண நிலையை அடைய முடியுமா? என்பதைச் சற்றுச் சிந்திப்பது சிறப்புள்ளதாயிருக்கும்.

எல்லா மனிதரும் ஒரே மாதிரிப் பிறப்பதில்லை (All men are not born equal), எல்லோருக்கும் சகல தாலந்துகளும் (talants) அளிக்கப்படுவதில்லை; சிலர் மேதாவிகளாகப் பிறப்பதுண்டு. அநேகர் சாதாரண நிலையில் பிறக்கிறார்கள். வெகு சிலர் துரதிஷ்டவசமாக இரண்டு இடது கைகளை யுடைவர்களாகப் பிறப்பதுமுண்டு. அவ்விதமிருக்கும் யாவரும் சிறந்த முறையில் வாழ வழியுண்டு. ஆனால் அவரவர் வாழ்க்கையை எவ்விதம் அமைத்துக் கொள்கிறார்கள் என்பதிலிருந்தே அவர்களின் சிறப்புத் தன்மையை அல்லது பெருமையை வெளிப்படுத்த முடியும்.

குழந்தைப் பருவம் முழுவதற்கும் பொறுப்பானவர்கள் பெற்றோரே. குழந்தையொன்று எவ்விதம் வளர்க்கப்படுகிறது, எவ்விதம் பெற்றோரால் நேசிக்கப்பட்டு, அன்பு செலுத்தப்பட்டு, பிழை எது சரி எது, நன்மை எது தீமை எது எனப் பகுத்தறியும் உணர்வு ஊட்டப்படுகின்றது என்பதிலிருந்தே அதன் பிற்கால வாழ்க்கை நிர்ணயிக்கப்படுகின்றது என்ற கூற்று தவறாகாது. ஆயினும், பாலப் பருவம் பெற்றோர் பாதுகாப்பு இல்லாது, அன்பு இல்லாது வளர்வது மிகமிகத் துன்பமானதொன்று. பாலியப் பருவத்திலேயே சிறந்த குண நலன்களை உருவாக்கமுடியும். அதனுலேயே ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா'' என்ற முதுமொழி பாலப் பருவத்தின் நிலையைத் தெளிவுபடுத்தும்படியாகக் கூறப்பட்டது.

ஒருவன் தானகவே நற்குணங்களை நல்லறிவைத் தேடி அறிந்துகொண்டு அதன்படி ஒழுகி நடப்பது சிறப்பு வாய்ந்தது. அவ்விதமில்லாவிடில் பிறரால் போதிக்கப்படும்பொழுது அதைப் பேணிக் கையாள்வது முக்கியமானது. இன்றியமையாததும்கூட. ஒருவனது வாழ்க்கை எந்தளவு மேன்மையாயிருப்பினும் ஒழுக்கம் பண்பு என்ற சிறப்பியல்பு ஆங்கில்லாவிடின் அங்கு அந்த மேன்மை நிலை இல்லை. ஒழுக்கத்தின் மேன்மைச் சிறப்பை வள்ளுவர்,

> "ஒழுக்கம் விழுப்பந் தரலா லொழுக்க
> முயிரினு மோம்பப் படும்"

என்கிறார்,

ஒழுக்கத்தில் நிலைத்து நிற்கிறவர்களுக்கு மன உறுதி அதிகரிக்கின்றது. நாளடைவில் அது ஆத்மசக்தியாக வடிவெடுக்கின்றது, அதை நன்கு கட்டியாள வல்லவரே மேன்மையானவன். பாலப் பருவம் தாண்டி வாழ்க்கையின் வசந்தம் என வர்ணிக்கப்படும் வாலிபப் பருவத்தையடையும் ஒருவன் எவ்வளவு தூரம் அவ்வசந்தத்தை ருசித்து அனுபவிக்கிறன், அதை எவ்விதம் ஆள்கிறன். மானிடராய்ப் பிறந்த யாவரும் இந்த நிலையைத் தான்

*With the Best Compliments*
*of*

**Ganiexporters**

234, Dam Street

COLOMBO - 12

*With all Best Wishes*
*from*

**CEMAS SILK LTD.**

Producers of
SILKS and CYNTHATICS

ஸ்ரீ அம்பாள் ஹோட்டல்

சுத்தமான
நித்தம் உங்கள் சித்தம்
மகிழவைக்கும்
தரமான — சுவையான
உணவு வகைகளுக்கு
ஸ்ரீ
அம்பாள் ஹோட்டலுக்கு
விஜயம் செய்யுங்கள்
487, மருதானை,
கொழும்பு - 10.
தொலைபேசி: 92322

*With the Best Compliments*
*of*

**Bakshani**

49, Bankshall Street,

COLOMBO - 11

டியே முதுமையை அடைய வேண்டும். இந்த நிலைமையின் சிறப்பும் பெருமையும் அது எவ்விதம் ஆளப்படுகிறது என்பதி லேயே தங்கியுள்ளது. இங்குதான் மனிதன் தன் பிற்கால வாழ்க்கைக்கு அத்தி பாரத்தை அமைத்துக் கொள்ளுகிறுன்; இவ் வத்திபாரம் கல்வி கேள்விகளால் மாத்திரமன்றி அனுபவ ஞானமும் ஒன்று சக் கலந்து அமைக்கவேண்டியதொன்று. அனுபவம் என்பது அனுபவித்துத்தான் அறிய முடியும் என்பதல்ல. பிறரின் அனு பவத்தின் மூலமும் நாம் அறிந்துகொள்ளக் கூடியது அநேகம். எல்லா மனிதரும் எல்லா அனுபவத்துக்கூடாகவும் செல்ல முடியாது என்பது தெளிவு. வாலிபனே உன் வாலிபப் பிராயத்தில் இறைவனே உனது வழிகளில் எவ்விதம் காத்துக் கொள்ள முடியும்; இறைவனின் சித்தப்படி செய்வதின் மூலமே.

பகுத்தறிவுடன் கூடிய சமய அறிவு ஒரு மனிதனுக்கு வேண்டியதவசியம். பகுத் தறிவுக்கு ஒவ்வாத உண்மையானது பகுத் தறிவுக்கு ஒவ்வின பொய்யினும் தீமை பயக்கும் என்ற கூற்றை இங்கு வலி யுறுத்துவது சிறப்புள்ளது.

சிறந்த பண்புகள் எனக் கூறப்படும் பொறுமை, அன்பு, ஒழுக்கம் என்ற இந்தக் குண நலன்களை எவ்வளவு தூரத்திற்கு ஒருவன் தன் வாலிபப் பிராயத்தில் கைக் கொள்ளுகிறுனே அவ்வளவு தூரத்துக்கு அவன் தன் வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள்ள முடியும்; இது கீதை.

> கோபத்தினைப் போக்க ஒருவன் தன் வாழ்நாளிலே யோகியாகி இன்பத் தினைச் சுகிப்பான் (5.23)

எனத் தெளிவுபடுத்துகிறது. கர்மத்தை வலியுறுத்தும் கீதை. "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" எனத் தெளிவுறக் கூறும் கீதை அன்பு செலுத்துவது எவ்விதம் எப்படி என்பதை 'பலனை எதிர் பாராத அன்பு' என்ற உயர்நிலைக்கு எடுத்துச் செல் கிறது. அன்பே பிரதானம், அன்பில்லா விட்டால் நாம் ஒன்றுமில்லை.

> "அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு."

அன்பு செய்யப் பழகிக்கொள்ள வேண்டும்.

ஏமாற்றம் என்பது எது, ஒருவன் ஏமாறுமல் இருக்க முடியாதா? ஏமாற்றம் என்பதன் அடிப்படையே ஒருவன் ஒன்றில் ஆழ்ந்த பற்றுவைப்பது ஆகவேதான் "பற்றற்று பற்றற்று" என்கிருர் அருணகிரி நாதர். ஒருவன் ஒன்றின்மேல் எவ்வளவு தூரம் பற்று வைக்கிறுனே அவ்வளவுக் கவ்வளவு அவன் ஏமாற்றத்தை எதிர் பார்த்தேயாகவேண்டும். ஏமாற்றத்தின் மூலம் பிறப்பது துன்பம் ஆயினும் துன்பப் படுவதால் எதையும் நாம் நிலைநாட்டிக் கொள்ளவோ சாதிக்கவோ முடியாது. எமது சரீரத்தின் ஒரு அங்குலத்தையாவது கூட்டவோ அல்லது குறைக்கவோ முடி யாது. ஆகவே துன்பநிலை அடையாமல் இருக்க ஏமாற்றத்தை அதாவது ஒன்றின் மேல் ஆழ்ந்த பற்றை விலக்க வேண்டும். துன்பப்படுவது நேர விணக்கேடு முக்கியமா கக் கடந்துபோன பிழைகளையும் பிரச்சினை களையும் எதிர்காலத்தில் நிகழும் என எதிர் பார்க்கும் துரதிஷ்டங்களையும் அல்லது இடுக்கண் முதலியவற்றையும் பற்றிக் கவலைப்படுவது மடமைத்தனம்.

நம்பிக்கை, பற்று என்ற இரு சொற் களும் வெவ்வேறு நோக்குடையன. நம் பிக்கை மூலம் எதையும் சாதிக்க முடியும். தோல்வி அல்லது ஏமாற்றம் வருங்கால் தலைநிமிர்ந்து அவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடியவனும் வெற்றி தோல்வி யென்ற அதை இரு போலியான வார்த்தைகளை ஒரே மாதிரி ஏற்றுக் கொள்ளக்கூடிய மனேபக்குவம் வாய்ந்தவனும் தன் இழப் பைக் கவலையைப்பற்றி ஒரு வார்த்தை யேனும் பிறரிடம் கூறுதிருப்பவனும் ஒரு கர்மவீரன் என நம்பிக்கையுடன் கூறலாம், ஆயினும் எம்மால் செய்யக்கூடியதை இயன்றவரை சிறப்பாகச் செய்யவேண்டும். மிகுதி கடவுள் விட்ட வழியின்படி நடக்கும். ஆகையால் சந்தோஷப்பட்டுக் களி கூருங் கள் எனக் கூறப்பட்டது. சந்தோஷப் படுவது ஒருவனின் பிறப்புரிமை. ஒருவனும் தனது பிறப்புரிமையை இழந்துபோக விடக் கூடாது. உலகம் நல்ல காரியங்களால் நிறைந்துள்ளது. ஆகையால் நாம் ஒவ் வொருவரும் அரசர்களைப்போல் சந்தோஷ மாய் இருக்க முடியும். உலகின் நல்ல காரியங்கள் அனைத்துமே இலவசமானவை.

அன்பு செலுத்துங்கள்! எவ்விதம்? நீ உன்னிடத்தில் அன்பு செலுத்துவதுபோல் பிறனிடமும் அன்பு செலுத்து; முதலில்

உன்னிடம் அன்பு செலுத்து நம்பிக்கை கொள். ஒருவன் தன்னைத்தான் முதலில் அன்பு செலுத்த வேண்டும். தன்னை அறிந்து கொண்டு பிறரில் அன்பு செலுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். உன்னையே நீ அறிவாய் என்ற சோக்கதரின் கூற்றிலிருந்து அறிவது என்ன? அநேகர் தம்மைத்தாமே அறிந்து கொள்ளாமல் பிறரையும் பற்றித் தெரிந்து கொள்ளாமலும் இருப்பதன் மூலமே பல பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள்,

அன்பு என்ற பதம் வாலிபப் பராயத்தில் ஆளப்படுமானால் அநேகர் அதற்குக் காதல் என்ற வடிவைக் கொடுக்கின்றனர். வாழ்க்கையின் அத்தியாயங்களில் இதுவும் ஒரு ஏடு. செம்மையாக ஒழுக்கத்துடன் ஒழுகப்படவேண்டிய தொன்று. காதல் என்பது கணவன் மனைவிக்கிடையில் உண்டாகும் அன்பைக் குறிப்பதுண்டு. ஆயினும் கணவன் மனைவி என்ற அந்த நிலைமையை நோக்கிப் பழகிக்கொள்ளும் எந்தவொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் தோனறுவது காதல் என வரைபுபடுத்துவது சிறப்புற்றிருக்கும். ஆகையால் ''ஒருவன் காதல் ஒன்றே'' என்ற நோக்குடன் பழகிக் கொள்ளுவதே மேன்மை வாய்ந்தது.

காதல், காமம், கற்பு என்ற சொற்றொடர் இன்றல்ல, நேற்றல்ல மனிதன் நாகரிக வாழ்க்கை வாழத் தொடங்கிய காலத்திலிருந்தே கூறப்பட்டு வந்த தொன்று.

பளிங்கு குளத்து நீரைப்
பாசிதான் மறைத்தாற் போலக்
களங்கமற்ற புத்தி தன்னைக்
காமந்தான் மூடிக் கொண்டு
விளங்கத்தான் செய்வ தில்லை
மெய்யறி விளக்கை யேற்றி
முழங்கத்தான் நாகை நாதர்
விளையாட்டென் றறிவாய் நெஞ்சே.

என ஒரு பாடல் காமத்தின் விளைவினைப் பற்றிச் செப்புகிறது. இதைக் கீதை, ''ஆசையின் ஓட்டத்தைத் தடுத்துக் கொண்டு'' என்ற சொற்றொடரில் அடக்குகிறது. ஆயினும் 'கண்ணிழக்காத காமமும் அறிவிழக்காத மோகமும் அளவுடனே கொண்டிருப்பவன் சிறந்த வாழ்க்கை வாழ முடியும்,'

கற்பு என்பது அதிகமாகப் பெண்கள் சார்பாகப் பேசப்பட்டு வருவது. நகைக்கக் கூடியதொன்று. இருகை சேரும் போதுதான் சத்தமெழுப்புகிறது. கற்பென்பது பெண்களுக்கு எவ்வளவு அலங்கரிப்பைக் கொடுககிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆணுக்கும் முக்கியமானதும், சிறப்பையும் பெருமையையும் கொடுப்பது. பெண்களின் இயற்கைப் பண்பான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களை வளர்ப்பதற்கு உறுதுணையாக இருக்கக்கூடியவர்கள் ஆண்களே, ஒருவன் எவ்வளவு தூரம் கற்பைப் பாதுகாத்து வருகிறானோ அவ்வளவுக்கவ்வளவு சிறந்த தூய்மையான ஒரு வாழ்வை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கமுடியும்; அடைந்தும் திருவான். சந்தேகம் என்பதை விலக்கி வாழ்க்கையைத் தொடங்கவேண்டும். ஒரு பெண் கெட்டுப்போவது அவள்மீது சந்தேகம் கொள்ளும்போதுதான். ஆகையால் இவ்வித நிலைமைகளை முன்பேயுணர்த்து வருங்காலத்தைத் தீர்க்க தரிசனத்துடன் நோக்கி இன்றே செயற்படுவது சிறப்புள்ளது.

இவ்வுலகை மூன்று பெரும் பிரிவுகளில் அடக்கமுடியும். அதாவது சடப்பொருள் வர்க்கம், விலங்கின வர்க்கம், மானிட வர்க்கம். மேற்கூறப்பட்ட மூன்று பிரிவுகளுக்கும் தனிப்பட்ட ஒவ்வொரு இயல்புகள் இருப்பது யாவரும் அறிந்ததே. இந்த வர்க்கப் பிரிவுகளில் சிறப்பும் மேன்மையும் வாய்ந்தது மானிட வர்க்கம். ஆயினும் இந்த மானிட வர்க்கத்தில் மட்டும் மற்ற வர்க்கங்களைப்போல தனது சொந்தப் பண்புகளைக் கொண்டுள்ளது மட்டுமல்லாமல் மற்ற இரு வர்க்கங்களிலான சடப்பொருள், விலங்கின வர்க்கங்களுக்குரிய குணநலன்களைக் காணக்கூடியதாய இருக்கிறது. ஏனெனில், மானிடவர்க்கததில் அவ்வித இயல்பை ஒத்த ஜீவன்கள் வசித்து வருவதே காரணம். ஆயினும் இந்த மூன்று நிலைமையையும் கடந்த உன்னத நிலை மானிடவர்க்கத்துக்கு மட்டும் உண்டு. அதுவே தெய்வநிலை. ''நானே கடவுள்'' என்ற ஒரு ஞானியின் கூற்று, தெய்வ நிந்தனையாகக் கருதப்பட்டது. ஆயினும் அந்த நிலைமையை இலகுவில் எல்லாராலும் அடைந்துவிட முடியாது.

'Man is the creator of his own thought.' என்ற கூற்றுப்படி மனிதன் எதையும் நிலைநாட்ட முடியும். நிலைநாட்டியும் வந்திருக்கிறான்.

நன்மைக்கு நன்மை செய்வது மனிதகுணம்
நன்மைக்குத் தீமை செய்வது மிருககுணம்
தீமைக்கு நன்மை செய்வது தெய்வகுணம்,

சந்திரன்

# ஆக்க இலக்கியத்தின் அவசியம்

வ. இராசையா, தமிழ் விரிவுரையாளர், புனித பெனடிக்ற் கல்லூரி
காவலர், தமிழ்க் கதைஞர் வட்டம், கொழும்பு

'ஆக்க இலக்கியத்தின் அவசியம்' பற்றி இன்று ஆராய்வது காலத்துக்குப் பொருந்தாத ஒரு முயற்சியாகத் தோன்றலாம். இரண்டு தசாப்தங்களின்முன் நமது நாட்டு எழுத்து மேடையிலே அடித்துச் சூடுமிதிக்கப்பட்ட இப்பொருள் பற்றி இன்று பேச என்ன தேவை வந்தது என்று கேட்கவும் படலாம். அன்று, ஆக்க இலக்கியத்தின் அவசியம் உணரவேண்டிய ஒரு சூழ்நிலையிலே இது ஆராயப்பட்டது; இன்று, இதன் அவசியம் உணரப்பட்டிருக்கிறது; நமது நாட்டைப் பொறுத்தவரையில் ஆக்க இலக்கியம் அவசியம் பற்றி மீண்டும் ஒருமுறை சிந்தனையைச் செலுத்துவதற்கு ஏற்றதேயாகும். நாம் நடக்கும் தடத்திலே ஒளியைப் பாய்ச்சி, நெறியை நிச்சயிக்க இந்த மீள்நோக்குப் பயன்படும்.

அதிகமாகப் படைக்கப்படுவது, அதிகமாகப் படிக்கப்படுவது என்னும் பெருமையை இப்பொழுது ஆக்க இலக்கியம் பெற்றிருக்கின்றது; இலக்கிய வளம் நிறைந்த தமிழ்மொழியில் இந்தப் புதிய துறை தோன்றி இத்துணை விரைவிலே வியாபகம் அடைவதற்கு, மொழியிலே வளர்ச்சியை நோக்கி ஏற்படுகின்ற இயல்பான மாற்றம் மாத்திரம் காரணியாக இருத்தல் முடியாது; இந்த இலக்கியத் துறையின் தேவையும் ஒரு காரணியாக—முக்கிய காரணியாக இருத்தல் வேண்டும். ஆம்; நமது வாழ்வியலினது உருவமைப்புக்கு ஆக்க இலக்கியம் ஓர் அவசியத் தேவையாக இன்று அமைந்திருக்கிறது.

'இலக்கியம் இலக்கியத்துக்காகவே' என்னும் மப்பிலே நாம் முன்னர் முழுகியிருந்தோம். கவிதையினது சொல்லழகிலே சொக்குவது, பொருளழகிலே மயங்குவது, கற்பனையிற் களிப்பது, அணிகளை நயப்பது, யாப்பினை வியப்பது, கண்ட கவிநயங்களை எடுத்தெடுத்து விரிப்பது, அவற்றைச் செவி மடுத்து மடுத்துக் கிறுகிறுப்பது—இவ்வளவுதான் இலக்கியம் என்ற நிலை. அது உண்மையில் இலக்கியத்தினது தேக்கநிலையன்றி வேறல்ல. சமுதாயத்தின் ஒரு பிரிவினருடைய தனியுடைமையாக இலக்கியம் இருந்த நிலையில் இந்த மயக்கநிலை இலக்கியத்தின் முக்கிய கோட்பாடாகக் கொள்ளப்பட்டமை பொருத்தமாயிருக்கலாம். ஆனால், இன்றைய நிதர்சன நிலைக்கு இது ஒத்ததாக இல்லை. இந்த விளக்கம் ஏற்பட்டபோது, ஆக்க இலக்கியம் எதிர்பார்க்கப்பட்ட மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இலக்கியம் வெறும் கலையனுபவத்துக்காக மாத்திரமல்ல; அதற்கு வேறு குறிக்கோள்களும் உண்டு என்பதனை அது நிலைநாட்டியிருக்கிறது. இந்நிலையில் ஆக்க இலக்கியத்ினது அவசியம் முனை கொண்டுவிட்டதைக் காண்கின்றோம்.

பண்டைய சமுதாய அமைப்பிலே இலக்கியம் மேட்டுக்குடிகளின் ஏகபோக உடைமையாக இருந்தது; அன்றைய புலவர்கள் அந்த மேட்டுக்குடியினருக்காக, அந்த மக்களைப் பற்றியே இலக்கியம் படைத்தனர். அதனால், சாதாரண மனிதன் அன்று இலக்கியத்திலே மறக்கப்பட்டு, மறைக்கப்பட்டிருந்தான். ஆனால், கடந்த நூற்றாண்டிலிருந்து நம்மகத்திலே படிப்படியாக வளர்ந்துவரும் அறிவு விளக்கமும், அதனால் ஏற்படும் விழிப்புணர்ச்சியும் சாதாரண மனிதனை மெல்ல மெல்ல இந்த யுகத்தின் கதாநாயகனாக உயர்த்திவருகின்றன. அதன் பேறாக, இன்றைய அரசியலும், பொருளாதாரமும் கலையும் ஆகிய எல்லாம் அந்தச் சாதாரண மனிதனை நடுவனாகக் கொண்டே இயங்குகிற நிலை உருவாகியிருக்கிறது. இவ்வாறே, சாதாரண மனிதனைப் பற்றிச் சாதாரண மனிதனுக்காகப் புனையப்படும் ஆக்க இலக்கியம் இப்போது

பிறந்திருக்கிறது. இது காலத்தின் தேவை; மாற்றத்தின் அறிகுறி; வளர்ச்சியின் அடையாளம். ஆகவே, ஆக்க இலக்கியம் அவசியமானது மாத்திரமல்ல; வரவேற்கப்பட வேண்டிய புதுமையாகும்.

இலக்கியத்தினது கருப்பொருள் மனிதன்தான்; அவன் மிகவும் சிக்கல் நிறைந்த — மாபெரும் கருப்பொருள்; பண்டைய இலக்கியங்கள் இந்தக் கருப்பொருளிலேயே முளைகொண்டன: இன்றைய ஆக்க இலக்கியமும் இதிலேயே வேரூன்றுகிறது. இது மனிதனது உள்ளத்தின் ஆழத்தை, அங்கு எழும் உணர்ச்சி அலைகளை — கொந்தளிப்புகளை, அவனது வாழ்க்கைப் போராட்டங்களை, வெற்றி தோல்விகளை எல்லாம் தேடி, இனங்கண்டு, அவற்றுக்கு அழகார்ந்த வடிவம் தர முயல்கிறது. மனிதனைப் பற்றி வடிக்கப்பட்ட இந்த வண்ணக் கோலங்களை மனிதன் முன் படைக்கும்போது, அவனுக்கு அவற்றிலே தன்னைக் காணும் வாய்ப்பு ஏற்படுகிறது. அந்தத் தரிசனம் அவனைப்பற்றி அவனே சீர்தூக்கும் வாய்ப்பை அளித்து அவனுடைய வாழ்வுக்கு உரமாகிறது. இலக்கிய கர்த்தாவினது சிந்தை, சீரிய நோக்கு ஆகிய சிந்தைமிகு சக்திகளைத் தன்னுட் கொண்டுள்ள ஆக்க இலக்கியமானது இவ்வாறு மனிதனது வாழ்வியலுக்கு வலுவூட்டுகிறது; வழிகாட்டுகிறது.

ஆக்க இலக்கியம் மனித உணர்ச்சிகளை நெறிப்படுத்தி, ஒழுக்கத்துக்கு விளைநிலம் அமைத்து, உள்ளத்தின் கோணங்களைக் கோளமாக்கி, சிந்தனையை விரித்து, தன்னம்பிக்கையை உயர்த்தி — இலட்சிய உலகு படைக்கும் ஓர் அற்புதச் சாதனம். படைப்பிலக்கியத்தினது கோட்பாட்டினைப் புரிந்துகொண்ட இலக்கியகர்த்தா, அதனை வெகு லாவகமாக— நுணுக்கமாகக் கையாளுவான். மனித உள்ளத்தின் மூலை முடுக்குகளிலே உறங்கிக் கிடக்கின்ற — ஒளிந்து உறைகின்ற கீழ்மைகளை வெளியே இழுத்துக் கொணர்ந்து பிறந்த மேனியில் நிறுத்திவிட்டால், அது யதார்த்தம் ஆகிவிடும் என்ற எண்ணம் தவறானது. மனிதன் இயல்பாகவே பற்பல சிறுமைகளுக்கும், பலவீனங்களுக்கும் இருப்பிடமானவன். ஆக்க இலக்கியம் அவற்றிற்கு உருவேற்றி ஆடவைப்பதாக இருத்தல் கூடாது. சிறுமைகளைச் சித்திரிக்க வேண்டும், அவற்றில் அருவருப்பு உண்டாக்குவதற்காக வாழ்க்கையின் அவலங்களை எடுத்துக் காட்ட வேண்டும். அவற்றை அகற்றுவதற்காக ஆக்க இலக்கியம் வாழ்க்கையின் ரணங்களுக்கு அறுவை வைத்தியம் செய்யலாமே தவிர, நோயாளியையே கொன்றுவிடக் கூடாது. இலக்கிய கர்த்தா இலக்கிய பிரக்ஞையுடன் படைக்கின்ற ஆக்க இலக்கியம், வாழ்க்கைக்கு ஒரு மாமருந்தாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க்கையின் பின்னல் அதிகரிக்க அதிகரிக்க, சமூகத்திலே முறைகேடுகளும், ஊழல்களும் பெருகிவருகின்றன: தன்னலம் முன்னோங்கி நிற்கிறது. இது அறநெறிச் சரிவினைத் தடுத்து, சமுதாயத்தினது சீர்கெட்ட பகுதிகளை ஓரளவாவது செப்பனிடும் தகைமையும், திறமையும் ஆக்க இலக்கியத்துக்கே உண்டு. இலக்கிய கருத்தாவினது உள்ளம் அறத்தினது வீழ்ச்சி கண்டு அடர்ந்து எழுந்தால், அந்நிலையில் அவன் படைக்கிற ஆக்க இலக்கியமும் வீறுடையதாக இருக்கும். அது, அரசியல், சமுதாயம், பொருளாதாரம், கலை, பண்பாடு ஆகிய துறைகள் அனைத்திலும் செறிந்து போலிகளையும், புல்லுருவிகளையும் நசித்துவிடும். தமிழினத்தினது வரலாற்றிலே ஒழுக்க வீழ்ச்சி ஏற்பட்டபோதெல்லாம், அறநூல்கள் தோன்றி ஒழுக்கத்தை உயர்த்தியதை நாம் காண்கிறோம். இப்பொழுது தமிழ்ச் சமுதாயத்திலே நமக்கு அந்நியமான நாகரிகங்களை எல்லாம் குருட்டுப்போக்கில் கைக்கொள்ளும் ஆட்டுமந்தை மனப்போக்குச் செறிந்து வருவதைக் காண்கின்றோம். இதனைத் தடுத்து நிறுத்தி, நம் சமுதாயத்தை நாகரிகத்தின் சீரானபாட்டையில் இட்டுச் செல்லும் பணியை ஆக்க இலக்கியம் புரியலாமல்லவா?

ஆக்க இலக்கியம் நமது மொழிக்குப் பெரும்பாலும் ஒரு புதிய துறை: அதனால், நமது வளமார்த்த இலக்கியப் பின்னணியிலே இது மலர்ச்சியும் கவர்ச்சியும்

கொண்டதாக விளங்குகின்றது. ஆக்க இலக்கியத்திலே புதிய சொற்கள், புதிய தொடர்புகள், புதிய கருத்துக்கள், புதிய இலக்கிய உருவங்கள், புதிய உத்திகள் ஆகியவை நுணுக்கமாகவும், விரிவாகவும் கையாளப்படுஞ் சிறப்பினை இன்று நாம் காண்கிறோம். நமது கிராமிய மொழி நடையிலே இதுவரை மறக்கப்பட்டுக் கிடந்த சில சொற்கள் சொற்றொடர்கள் முதலியவற்றின் செழுமை ஆக்க இலக்கியத்திலே பரிமளிக்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, மக்களது பிரச்சினைகளை மக்களது மொழியிலே எடுத்துப் பேசும் மாண்பினை ஆக்க இலக்கியமே தமிழுக்கு வழங்கியிருக்கிறது. சிற்றிலக்கியங்களாய பள்ளு, குறம் முதலியவை திறந்துவைத்த வழி, இது. எனினும், அந்த வழியிலே முழு வேகத்துடன் முன்னேறி வருவது, ஆக்க இலக்கியமே. இந்த மாற்றங்கள் எல்லாம் உயிர்த்துடிப்புள்ள ஒரு மொழியினது வளர்ச்சியின் அடையாளங்களாகும். காலந்தோறும், மாற்றங்களுக்கு அவசியமான அளவு நெகிழ்ந்து கொடுத்து, வற்றாது பாய்ந்து கொண்டிருக்கும் தமிழ் என்னும் ஜீவநதியிலே இப்பொழுது பாயத் தொடங்கியிருக்கும் புதுவெள்ளம் ஆக்க இலக்கியம். இந்தப் பூம்புனற்பெருக்கு முழுமனதுடன் வரவேற்கத்தக்கதொன்று.

சரித்திரத்தினது அடித்தளத்திலே வேர்விட்டு, நேற்றுவரை வளர்ந்து வாழ்ந்துகொண்டிருந்த ஒருவகைச் சமுதாய அமைப்பிலிருந்து, நமது நாட்டிலே மற்றொரு சமுதாயம் பிறந்துகொண்டிருக்கிறது. இந்த மாற்றத்தினைக் காட்டுவதோடல்லாமல், இதனை நெறிப்படுத்துவதும் ஆக்க இலக்கியத்தின் ஒரு பணியாகும். ஏற்படும் மாற்றம் இந்த மண்ணுக்கு ஏற்றதாய், இங்குள்ள தத்துவங்களுக்கு இணங்குவதாய் அமையவேண்டும்; விரிவான சிந்தனை கொண்ட படைப்பாளி, இதனை உளங்கொண்டே இலக்கியம் படைப்பான்; ஆதலால், ஆக்க இலக்கியம் சௌக்கியமான சமுதாயமொன்றிற்கு அனுசரணையாக அமையும் என்பது தெளிவு.

பண்டைய இலக்கியக் கோட்பாடுகள் காலத்தின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் தடுமாறியபோது, ஆக்க இலக்கியம் தோன்றி இலக்கியத்துறைக்கு ஒரு புதிய நெறியைக் காட்டியிருக்கிறது. சாதாரண மனிதனைக் கதாநாயகனாக உயர்த்திய ஆக்க இலக்கியமானது, இன்றைய காலகட்டத்தின் இன்றியமையாத ஒரு தேவை; வாழ்க்கைப் போராட்டத்திலே நலிந்து, தளர்ந்து, நசிந்து திணறுமல், நாம் நம்பிக்கை பெறுவதற்கு—நமது வாழ்வியற் சிந்தனைகளை நெறிப்படுத்திக் கொள்வதற்கு— நமக்கு ஆக்க இலக்கியம் வேண்டும்; சத்துள்ள — கலைமெருகுடைய ஆக்க இலக்கியம் அவசியம் வேண்டும்.

## கௌரவம்

பூம்பாடை கோவியம்
பறைமேளம் நாலு கூட்டு
வழிநெடுகத் தோரணம்
சீனவெடி—இத்தியாதி
'வலு கலாதி'
அனாதையாய்
வயோதிபர் மடத்திற்
செத்த அன்னைக்கு.

— மீசாலைச் சந்திரன்

*With the Best Compliments*
*of*

# New Colombo Stores

241, 243, GALLE ROAD,
WELLAWATTE.

Telephone: 84788

*With the Best Compliments*
*of*

# JACOB & CO.

## PRODUCE BROKERS

23 1/1, CANAL ROW,
COLOMBO - 1.
SRI LANKA

Telephone: 31957, 33844

# நாம் நாடகம்பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு இருவர் அளித்த பதில்கள்

பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்
தமிழ்த்துறைத் தலைவர், பேராதனை வளாகம், இலங்கைப் பல்கலைக்கழகம்

கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி
விரிவுரையாளர், வித்தியோதய வளாகம், இலங்கைப் பல்கலைக்கழகம்

1. வினா: நாட்டின் அகம் நாடகம் என்பர். இக்கூற்றை எமது இக்கால நாடகங்கள் எவ்வளவு தூரம் பிரதிபலிக்கின்றன?

விடை:

வித்தி: பொதுவாக ஒரு நாடகம் எங்கு தோன்றுகிறதோ அவ்விடத்து வாழ்வியல் முறைகளையும் பண்பாட்டு நிலைமைகளையும் ஓரளவுக்கேனும் பிரதிபலிக்குமென்ற காரணத்தால் அவ்வாறு கூறுவர். ஆனாலும் சகல நாடகங்களுக்கும் இது ஓர் இன்றியமையாப் பண்பாக இருக்க வேண்டியதுமில்லை. அண்மைக்காலத்தில் ஈழத்தில் மேடையேற்றப்பட்ட பல நாடகங்கள் எங்களது மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் உணர்வுகளையும் பிரதிபலிக்க முனைந்துள்ளன. அதே வேளையில் நாடகாசிரியர் தமது நாடகங்களின் மூலம் முன்வைக்கும் கருத்துக்களைப் பார்வையாளர் உள்வாங்கிக் கொள்வதிலுள்ள பிரச்சினைகளும் நோக்கப்படத்தக்கவை. பார்வையாளர் சில விஷயங்களை விளங்கிக்கொள்ள மறுப்பதும், அதே வேளையில் நாடகாசிரியர் பலர் மக்கள் நிலையினைச் செவ்வனே உணர்ந்து அதற்கேற்ப நாடகங்களை அமைக்கத் தவறுகின்றமையும் மனங்கொள்ளத் தக்கன. இப் பிரச்சினைகளின் விளைவாகப் பல நாடகங்கள் நாட்டின் அகத்தினைக் காட்டுவனவாக அமையத் தவறிவிடுகின்றன;

தம்பி: நாடு+அகம் என்பதே நாடகம் ஆயிற்று எனத் தமிழறிஞர் போன்றோர் சிலர் கூறுவது தவறான ஒரு கருத்தாகும். நாடகம் என்னும் சொல் "நாட்டிய" என்னும் வடசொல் வழியாக வந்தது. எனினும் தங்கள் வினா இன்றுள்ள (ஈழத்துத்) தமிழ் நாடகம் எந்த அளவுக்கு நாட்டில் நிலவும் எண்ணக் கருத்துக்களை உணர்ச்சிப் போராட்டங்களைப் பிரதிபலிக்கின்றது என்பதுபற்றி அறிவதற்கான ஒரு எத்தனம் என்றே கருதுகின்றேன்.

எமது சமூக சிந்தனையில் நாடகம் வகிக்கும் இடம் பற்றி முதலில் அறிந்து கொள்வது நலம்;

நாடகத்தை ஒரு கலை வடிவமாக அன்றேல் கலைநிலைத் தொழிற்பாடாகக் கொண்டு அதில் ஈடுபாடு காட்டுவோரே இன்று அதிகமாகக் காணப்படுகின்றனர். நாடகம் சனரஞ்சகமான கலைவடிவமானமையால் எம்மட்டத்தினரும் இத்துறையில் ஈடுபடுவது சுலபமானதாகும்.

நாடகம் என்பது தன்னுள் முடிந்த முடிபான கலை வடிவம் அன்று. இது வன்மைமிக்க வெகுசனத் தொடர்புச் சாதனமாகும். கருத்துக்கள், மனப்பாங்குகள், நோக்குகள் ஆகியன வெளிப்படுத்தப்படுவதற்கும் விளங்கிக்கொள்ளப்படுவதற்கும் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் உதவுகின்றன.

சாதனம் என்றவகையில் அதற்குச் சில இயல்புகள், வரையறைகள் உள்ளன. ஆனால் சாதனமே கருத்தாகிவிடாது.

கலை வடிவத்தையும், கலைப் பொருளையும் இணைத்துப் பார்க்கும் நிலைமை ஏற்படாததாலேதான் இன்றும் நாம் நாடகங்களை நவீன நாடகங்கள், மரபுவழி நாடகங்கள் என்று பிரித்துப் பார்க்கின்றோம். சிங்களத்தில் இன்று இத்தகைய பிரிவு எடுத்துக் கூறப்படுவதில்லை. பாரம்பரியத்தையும் தற்காலத் தேவைகளையும் கூறு

படுத்தி ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவையாக நோக்கும் பண்பு ஈழத்தமிழ் மக்களிடையே காணப்படும் முக்கிய சமுதாயவியற் பண்பாகும்.

மேற்கூறிய காரணங்களில் [அதாவது (அ) நாடகத்தை வெகுசனத் தொடர்புச் சாதனம் என்ற பிரக்ஞையோடு பயன்படுத்தாது விடுவது (ஆ) மரபையும், நவீன தேவைகளையும் இணைந்து நோக்கி முழுமையான ஒரு சமுதாய நோக்கை வளர்க்காது விடுவது] ஈழத்துத் தமிழ் நாடகம், ஈழத்துத் தமிழ் மக்களின் உணர்ச்சிப் போராட்டங்களைக் கட்புல செவிப்புல வடிவமாக எடுத்துக்காட்டும் பூரண கலைவடிவமாக இன்னும் முகிழ்க்கத் தொடங்கவில்லை.

ஈழத்துத் தமிழ் இலக்கியம் போன்று ஈழத்தமிழ் நாடகம் பிரதிநிதித்துவமுடைய ஒரு கலைவடிவமன்று.

இத்துறையில் முன்னோடியான சில முயற்சிகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது உண்மையே. ஆனால் அவை நகர் நிலைப்பட்டனவாகவும், அறிவு நிலைப்பட்டனவாகவும் காணப்படுகின்றன. இவ்வியக்கம் வளர்ந்து வியாப்தியடையும் பொழுது நாடகம் சமூக உள்ளுணர்வைப் பிரதிபலிப்பதாக அமையும்.

நாடகத்தைச் சமூக ஒதுக்கு நிலைப்பட்டோரது கலையாகக் கொள்ளும் மனப்பான்மை முற்றிலும் அழியவேண்டுவதும் அத்தியாவசியமாகும். ''கூத்தாடுவதும்... ......... ஆத்தாதவன் செயல்'' என்ற பழமொழியின் அடிப்படையாக விளங்கும் மரபுவழிப்பட்ட சமூக சிந்தனை அற்றுப் போவது அவசியம்.

நாடகத்தைப் பாடசாலை நிலையில் பாடமாகப் பயிற்றும் புதிய கல்வித்திட்டம் இச்சிந்தையை அகற்றும்.

நாடக ஆர்வம், கல்வி நோக்கு மாற்றம் ஆகியன நல்ல எதிர்காலத்தினைச் சுட்டி நிற்கின்றன.

2. வினா: எமது மரபுவழிக் கூத்துக்களைப் பேணிக் காப்பது அவசியம் என்று கருதுகின்றீர்களா? அவை இக்கால நாடக வளர்ச்சிக்கு ஆக்கம் தரமுடியுமா? அப்படியாயின் எவ்வழியில் அவைகளைப் பயன்படுத்தலாம் என்பதை விளக்குவீர்களா?

விடை:

வித்தி: எமது தனித்துவத்தையும் கலை மரபுகளையும் பேணிக்காப்பது அவசியமானதே. எமது மரபுவழிக் கூத்துக்கள் எமது மக்களின் கிராம வாழ்வோடியைந்தவை; அம்மக்களால் உணர்ச்சிபூர்வமாக விரும்பிச் சுவைக்கப்படத்தக்கவை. அத்தகைய வாய்ப்புக்களையுடைய ஒரு வடிவத்தை மக்கள் மத்தியில் நல்லுணர்வுகளை வளர்க்கவும் உயர்ந்த சிந்தனைகளை உருவாக்கவும் பயன்படுத்தாமற் புறக்கணிப்போமானால் அது மடைமையேயாகும். இக்கால நாடக வளர்ச்சிக்கு அவை ஆக்கமும் ஊக்கமும் தரும் என்பதை நடைமுறையில் நிருபித்துக் காட்டியிருக்கிறோம்.

பொதுமக்கள் மத்தியில் கலையுணர்வினையும் பாரம்பரிய உணர்வினையும் ஊட்ட அவற்றைப் பயன்படுத்தலாம். புதிய வாழ்நிலைப் பிறழ்வுகளால் அலைக்களிக்கப்படும் மக்கள் உள்ளங்களில் அமைதியையும், ஒருமைப்பாட்டையும் புத்துணர்ச்சியினையும் உறுதியான நம்பிக்கையினையும் வளர்க்கப் பயன்படுத்தலாம். அதே வேளையில் காலத்துக் கவசியமான புதிய சிந்தனைகளை வெளியிடத் தக்கவிடத்தும் அவற்றைப் பயன்படுத்தலாம்.

தம்பி: அவற்றைப் பேணிக்காப்பது அத்தியாவசியம் என்றே கருதுகின்றேன்.

எமது பண்பாட்டின் அம்சங்களில் ஒன்று என்பதற்காக மாத்திரமன்று. மரபுவழியாக வரும் கலைவடிவமானமையால், அதில் போற்றப்படும் உத்திகள், குறியீடுகள் ஆகியன எல்லோராலும் விளங்கிக் கொள்ளப்படத்தக்கன என்பதனாலும் அவை போற்றப்படவேண்டும். மரபுவழி வரும் அம்சங்களை நூதனசாலையிலுள்ள காட்சிப் பொருட்களாக நோக்கும் பண்பு மாறவேண்டும்.

மரபு என்பதற்குத் தொல்காப்பிய உரையாசிரியர்களிலொருவரான பேராசிரியர் கூறும் வரைவிலக்கணத்தை இவ்விடத்தில் மனங்கொளல் நன்று. ''மரபு என்பது காலமும் இடமும் பற்றி வழக்குத் திரிந்தக் காலும் திரிந்தவற்றுக்கேற்ப வழுப்படாமைச் செல்வதோர் முறைமை''.

எனவே உண்மையில் மரபு என்பது பண்டையதான ஒன்றினைப் புதிய சூழ்நிலைகளிலும் தேவைக்கேற்பப் பேணிக்கொள்வதான ஒரு முயற்சியேயாகும்.

எனவே, நாம் விரும்பாவிட்டாலும் மரபு தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும்.

மரபையும் நவீனத்தையும் பிரித்துப் பார்க்கும் நோக்கு எமது வரலாற்றினுல் தோன்றியதாகும். அந்நிய ஆட்சி போன்றவையே இந்நோக்கினை ஏற்படுத்தின.

மரபுவழி வரும் கூத்துக்கள்தான் உண்மையான, தமிழ் நாடகத்துக்கு உயிரூட்டுவன.

சங்க காலத்தில் ஆடப்பெற்ற கூத்து வகைகளுக்கும் இன்றுள்ள நாட்டுக் கூத்துகளுக்கும் தொடர்பு உண்டு என்பதைப் பிறிதோரிடத்தில் நிறுவியுள்ளேன். இத்தொடர்ச்சியில் நாடகக் கதைகளின் தொடர்ச்சியைக் காணமுடியாது: எனவே நாமும் கதைகளை மாற்றியமைத்துக் கொள்ளல் அவசியம் என்று கருதுகின்றேன்.

கூத்தின் கதையை மாற்றிவிட்டால், கூத்தில் பயன்படும் உடைகள் தாமாகவே மாறும்.

சங்க காலம் முதல் நின்று நிலவும் அகவல், வெண்பா, கலி, வஞ்சி ஆகியன இன்றும் கவிஞர்களுக்குக் கைகொடுப்பது தவிர்க்கமுடியாதது போன்று, கூத்தும் (தயாரிப்பாளனது யாப்பு என்ற வகையில்) இன்றைய நாடகாசிரியனுக்கும் பயன்படும்.

மரபுவழி உத்தி என்பது யாவருக்கும் விளங்கக்கூடிய உத்தி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது,

நடிப்பு, காட்சி மாற்றம், பாத்திரங்களின் உணர்ச்சி வெளிப்பாடு ஆகியவற்றைச் செவ்வையாகக் கையாள்வதற்குக் கூத்துமரபு பெரிதும் உதவும். தாசீசியஸ், மௌனகுரு ஆகியோரின் தயாரிப்புகளில் இவ்வுண்மை புலப்படுகின்றது.

3\. வினு: ஒரு நாடகம் சிறப்படைவதற்கு நவீன ஒலி, ஒளியமைப்பு உத்திகள், சிறந்த மேடையமைப்புப் போன்றவை நிச்சயம் தேவைதானு?

விடை:

வித்தி: ஒலி, ஒளி அமைப்பு உத்திகளும் ஏற்ற மேடையமைப்பும் ஒரு நாடகம் சிறப்பாக மேடையேற உதவுமேயன்றிச் சிறப்படைய உதவா. இன்றைய பார்வையாளர் தடங்கலின்றி நாடகத்தை இரசிப்பதற்கும் அந்நாடகங்கள் அவர்களுடைய கவனத்தைக் கவர்வதற்கும் நவீன ஒலி ஒளி அமைப்பு உத்திகளும் சிறந்த மேடையமைப்பும் உதவும். ஆனுல், நாடகப் பிரதியிலும் நடிப்பிலும் கவனம் செலுத்தாமல், ஒலி ஒளி அமைப்பு உத்தி முதலியவற்றில் மட்டும் கவனம் செலுத்தப்படுவதால் நாடகங்கள் தோல்வியையே தழுவும். நவீன ஒலி ஒளி அமைப்பு உத்திகளும் சிறந்த மேடையமைப்பும் இல்லாமலே பல நாடகங்கள் வெற்றியடைந்திருக்கின்றன. ஆயினும், ஒரு நாடகத்துக்குப் பொருத்தமான ஒலி ஒளி மேடையமைப்புக்கும் அந்நாடகம் வெற்றிபெற உறுதுணையாகும் எனலாம்.

தம்பி: நாடகம் என்பது பலகலைகளின் தொகுதி. ஆங்கிலத்தில் நாடகத்தை Drama என்றுல், நாடகத்தில் வந்து கலக்கும் சகல கலைகளையும் இணைத்து Theatre Arts என்பர். Theatre Artsக்குச் சரியான தமிழ்ப்பத மில்லாததனுலேயே நாடகத்தை ஒலி, ஒளி, மேடையமைப்பிலிருந்து பிரித்து நோக்குகின்றேம்.

இன்றைய சூழ்நிலையில் Theatre Arts (நாடக அரங்கக் கலைகள்) பற்றிய போதிய விளக்கம் எம்மிடையே காணப்படவில்லை.

நாடகத்தின் உத்திகளில் தொடர்ச்சி காணப்பட்டாலும், நாடகம் பார்க்கப்படுகின்ற சூழ்நிலைகள் இன்று மாறியுள்ளன. நாடகம் இன்று பயிலப்படுகின்ற, பார்க்கப்படுகின்ற சூழ்நிலையில் நவீன ஒலி, ஒளி, மேடையமைப்புக்கள் முக்கியமானவையாகின்றன.

ஒலி, ஒளி, மேடையமைப்புக்கள் நன்கு பயன்படுத்தப்படுவதற்கு மண்டப அரங்குகள்தான் தேவை என்று இல்லை. திறந்த வெளி அரங்குகளிலும் பயன்படுத்தப்படலாம்.

எவ்வாறுயினும் நாடகத்தினை ஜனரஞ்சகமாக்குவதற்கும் கவர்ச்சியுடையதாகப் பயன்படுத்துவதற்கும் இவை அத்தியாவசியமானவையே.

# INDUSTRIALISTS

Please contact us for your requirements in all type of P. V. C. Compounds, Low and High Density Polyethylene, Pheonolic and Ureaformaldehyde Moulding Compounds, ABS Resins, Polystyrenes, styrene-Acrylonitrile Copolymers. Thermosetting Resins, Rubber Chemicals, Carbon black, Paper, Boards and all type of Industrial Raw Materials.

## Liberty Trading Agency

**AVRA BUILDING, 19 E, SEA STREET,**

**P. O. BOX 1603, COLOMBO - 11.**

Cables: **LITRAGEN COLOMBO**

Phone: **34650**

4. **வினா:** காலஞ்சென்ற பேராசிரியர் கணபதிப்பிள்ளை யாழ்ப்பாண வாழ்க்கையோடு இரண்டறக்கலந்துவிட்ட வழக்குக்களைக் கொண்டு தான் படைத்த நாடக பாத்திரங்களுக்கு உயிரூட்டினார். ஆனால் இன்று அந்த வழக்குக்கள் பார்வையாளரிடம் சிரிப்பொலி பெறுவதற்கு மாத்திரம் பயன்படுகின்றன. இப்போக்குப் பற்றி உங்கள் கருத்து என்ன?

**விடை:**

வித்தி: அது மிகவும் மனவருத்தத்துக்கிடமானது. மொழி மக்களுடைய உள்ளக்கிடக்கைகளை வெளியிடும் கருவி; ஒரு பிரதேச மக்கள் பேசும் மொழி அம்மக்களுடைய வாழ்வையும் பிரதிபலிப்பதாகும். யாழ்ப்பாணத்து மக்களுடைய வாழ்வைப் பிரதிபலிக்க அவர்களுடைய அன்றாடப் பேச்சுவழக்கு அதற்கு இன்றியமையாததாகும். நாடகப் பிரதியில் தக்க கவனம் செலுத்திய பேராசிரியர் கணபதிப்பிள்ளை பாத்திரங்களை உயிருடன் உலவவிட்டுத் தாம் வெளியிடப் புகுந்த உணர்வானுபவங்களைச் செவ்வனே வெளியிடவும் பேச்சுவழக்குக்களைக் கையாண்டார். ஆனால் வேறு சிலர் கேலிச் சுவைக்காக அல்லது இலேசான கனமற்ற பகிடிகளாற் பொது மக்களைச் சிரிக்கவைத்துத் தமது நாடகங்களை ஒருவாறு ஆடிமுடிக்க அதனைக் கையாண்டனர்; அவர்கள், பேசும் வழக்கின் வல்ல பயன்பாட்டையும் அறியார்; கருத்துச் செறிந்த நகைச்சுவையைத் தோற்றுவிக்கவும் அறியார்; நாடகப் பிரதியொன்றினை ஆக்கவும் அறியார். அங்க அசைவுகளால் மட்டுமன்றி மொழியோடு சேட்டைவிட்டும் கோமாளித்தனம் பண்ணலாம் என்பதையே அவர்கள் காட்டினர். பேச்சுவழக்கு மொழியை நாடகத்திற் சிறப்பாக எல்லோராலும் கையாளமுடியாது என்பதற்கு இவர்கள் தக்க எடுத்துக்காட்டு. ஆனால், சரியானமுறையிற் பேச்சுவழக்குப் பயன்படுத்தப்படுமிடத்து அது சிரிப்பொலியை எழுப்புவதற்குப் பதிலாக, நாடகத்தின் இயல்பும் காத்திரமும் பொருந்திய வளர்ச்சிக்கே உதவும் என்பதை முதன்முதலில் நிரூபித்தார் எங்கள் பேராசிரியர். சமீபத்தில் சில நாடகங்களில் யாழ்ப்பாண, மலைநாட்டு வழக்குக்கள் தக்கமுறையில் ஆளப்படுவதையும், அவை தரமான பார்வையாளரால் மிக வரவேற்கப்படுவதையும் காணும்போது, மகிழ்ச்சியாக இருக்கிறது. சி. தில்லைநாதன் மேடையேற்றிய 'தகுதி', 'மானிடமென்பது புல்லோ' போன்ற நாடகங்களை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

தம்பி: பேராசிரியர் கணபதிப்பிள்ளை மொழியியல் அறிஞர் என்ற முறையில் தமது நாடகங்களில் யாழ்ப்பாணப் பேச்சு வழக்குக்களைப் பொறித்துள்ளார் ஏனும், அப்பேச்சு வழக்கு அவர் தோற்றுவித்த பாத்திரங்களின் இயல்பான பேச்சு நெறியாகும். அப் பாத்திரங்களின் இயல்புகள் அவற்றின் உணர்ச்சி மோதல்கள் முரண்பாடுகள் ஆகியன யாவும் அம்மொழிவழக்குடன் தொடர்புற்று நிற்கின்றன. நாடகத்து மொழிநடை நாடகத்தின் கதை, பாத்திரங்கள் ஆகியனவற்றுக்கு அப்பாலான ஒன்று அன்று. பேராசிரியர் சித்திரித்த பாத்திரங்கள் வேறு எவ்வகையிலும் பேசமாட்டா.

இந்த அடிப்படை இயல்பினை மறந்து, பேச்சுத் தமிழைக் கையாளும் பொழுது தான் அத்தமிழ்நடை சிரிப்புக்கு இடமாகின்றது.

பேச்சுத்தமிழை சிரிப்பொலி பெறுவதற்கான மார்க்கம் ஆகக் கொண்டுள்ளோர் இன்று அப்பேச்சு மொழியில் எத்தனையோ விகற்பங்களை ஏற்படுத்தியுள்ளார்.

இப்பண்பினை நான் முற்று முழுதாகக் கண்டிக்கிறேன். கூத்துக்கும் கழைக் கூத்துக்கும் வேறுபாடு உண்டு. கழைக்கூத்து கூத்தேயன்று. பேச்சுத் தமிழை சிரிப்பொலி பெறுவதற்குக் கையாள்பவர்கள் நாடகத்தின் தன்மை தெரியாதவர்கள் கழைக் கூத்தாடிகள்.

ஜனரஞ்சக நிலையில் இத்தகைய கோணல் மாணல்கள் ஏற்படுவது வழக்கமே. இன்றைய சின்னமேளத்துக்கும் பரதநாட்டியத்துக்கும் உள்ள தொடர்பு தான் இத்தகையோர்க்கும் நாடகத்துக்கும் உள்ள தொடர்பு.

அதிர்ஷ்டவசமாக இப்பண்பினைக் களைவதற்குப் பிரக்ஞை பூர்வமான நடவடிக்கைகள் பல இப்பொழுது எடுக்கப்படுகின்றன.

5. வினு: எங்கள் நாடக நடிகரில் பலர் சினிமாப் பாணி நடிப்பைக் கைக்கொள் வது நாடகத்தைச் சிறப்படையச் செய்யுமா?

விடை:

வித்தி: நாடகம் வேறு; சினிமா வேறு. தமிழ்ச் சினிமா உலகின இன்று நடிகர் சிலர் ஆட்டிப் படைத்தாலும், நடிகனுக்கு நாடகத்தில் உள்ள முக்கியத் துவம் சினிமாவில் இல்லே. நாடகம் ஒரு நாளும் சினிமாவாக முடியாது. நாங்கள் பார்க்கும் சினிமாவை எமக்கு எடுத்துக் கொடுப்பது 'காமெரா'. அது எங்கெல்லாமோ ஏறி இறங்கி எத்தனையோ கோணத்திற் சினிமாவைப் பிடிக்கும். நாடகத்திற் பார்வையாளர் அமர்ந்திருக்க அவர்கள் முன் நாடகம் நடைபெறுகிறது. நடிகர்கள் தாம் 'காமெரா' முன் நடிப்பதாக நினைத்துக்கொண்டு, அல்லது 'காமெரா'வால் காணப்பட்டமாதிரித் தம் அங்க அசைவுகளைப் பார்வையாளர்களாற் பார்க்க முடியுமென்று நினைத்துக்கொண்டு நடிப்பது பார்வையாளருக்கு எரிச்சலையே தரலாம். சினிமாவைப் பார்க்கும்போது, அதனைத் தூர நிகழ்வதுபோலவும் இயந்திர கதியின தாகவும் கருதும் நாம் நாடகத்தைக் கண்ணெதிரே காண்கிறேமாகையால், செயற்கையான அல்லது தெளிவற்ற நடிப்பு விரும்பப் படுவதில்லே; எங்கள் நாடகங்களிற் பலர் சினிமாப் பாணியில் நடிப்பது நாடகச் சிறப்பினைக் குலைப்பதாகவே காணப்படுகிறது. நாடகத்தில் நடிகனுக்கும் பார்வையாளனுக்கும் நேரடித் தொடர்புண்டு என்பதை மனத்திற் கொண்டாற் சினிமாப்பாணி நடிப்பு நாடகத்தில் எடுபடாது என்பதை நடிகர் உணர்வர்.

தம்பி: செய்யாது.

ஆனல் இவர்கள் ஏன் இப்பிழை செய்கிருர்கள் என்பது அறிந்து கொள்ளல் வேண்டும். தமிழ் நாட்டையும் ஈழத்தையும் பொறுத்த வரையில் சினிமா நாடகத்தை விட சனரஞ்சகமான கலைவடிவம். கூத்துக்காரனுக்கும் நாடகக்காரனுக்கும் இல்லாத வாய்ப்பு வசதிகள் சினிமாக் காரனுக்கு உள்ளன.

சினிமாப்பாணி நடிப்பை மேற்கொள்ளும் சமூகப் பின்னணியை அறிவு மட்டத்தை நோக்கும் பொழுது, இந்த ''இமிற்றேசன்'' பாணிக்கான உட் காரணம் தெரிய வரும்.

சினிமா முற்றிலும் கட்புலனுக்கான ஒரு சாதனம். நாடகம் கட்புலனுக்கும் செவிப்புலனுக்குமானது. இரண்டும் இணைந்து நிற்கும் பொழுதுதான் மேடை நாடகம் சிறக்கும்.

தமிழ்க் கூத்து மக்களின் எழுத்தறிவுக் குறைவு காரணமாக தமிழ் சினிமா கதை வசனக் களஞ்சியமாக மாறிவிட்டது. மேடை நாடகம் ஒரு வழியில் கதை வசனக் களஞ்சியம் தானே. இந்தத் தடு மாற்றத்தின் காரணமாகவும் பலர் சினிமாப் பாணியைப் பின்பற்றுகின்றனர்.

தமிழகத்தின் சினிமா உண்மையான இலக்கண பூர்வமான சினிமாவாகும் வரையில், அதாவது தமிழ் கூத்து சினிமாவில் நெறியாளரும், 'காமெராவும்' முக்கிய அம்சங்களாக முகிழ்க்காத வரையில் இத் தொல்லே இருக்கவே செய்யும்.

இன்னுமொரு விடயம் ''தமிழ் சினிமாவில் சினிமாப்பாணி நடிப்பில்லே. மேடை நடிப்புத்தான் காணப்படுகின்றது'' எனச் சிலர் சொல்கிருர்களே!

6. வினு: நடிக்கும்போது ஒரு நடிகன் தன்னை மறந்து "பாத்திரமாகவே மாறி விடவேண்டும்" என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?

விடை:

வித்தி: ஒரு பாத்திரத்தில் நடிக்கும் நடிகன் அப்பாத்திரத்தைத் தத்ரூபமாகச் சித்திரிக்க வேண்டுமென்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகும். ஒரு பாத்திரத்தைச் சிருஷ்டிப்பவன் கதாசிரியன். அவன் விரும்பியவாறு நடிகன் நடிக்கவேண்டும். ஒரு நடிகன் தன்னை மறப்பது நாடகத்தில் ஆபத்தாகும். அதே வேளையில் பாத்திரத்தை மறந்து தம் சுய திறமைகளை அம்பலப்படுத்த விழைவது அதைவிட ஆபத்தாகும்.

தம்பி: நடிகன் பாத்திரமல்ல. அதனைச் சித்திரித்துக் காட்டுபவன் இச் சித்திரிப்பு மொழியில், உடையில் மாத்திரம் அல்லாது அங்க அசைவிலும், முகபாவத்திலும் தெரியவேண்டும். எனவே தான் அவன் தன்னைப் பாத்திரமாகவே மாற்றிக் கொள்ளவேண்டும்என்றுகூறப்படுகின்றது. பாத்திரமாகத் தன்னை மாற்றிக்கொள்ளும் பொழுது, தனக்குரிய சில பல சுபாவங்களை அவன் பிரக்ஞை பூர்வமாக ஒதுக்கி

விடுகிருன். அந்த அளவுக்கு தன்னை மறக்கவும்தான் வேண்டும். தன்னை மறந்து பாத்திரமாக மாறுகின்ருன் எனும் பொழுது, பாத்திரம் இறக்கும் பொழுது அவனும் இறக்கின்ருன் என்பதல்ல.

நடிப்புக் கலையை இயல்பூக்கமாகக் கொண்டு வரன் முறையாக வளர்ந்து கொண்ட ஒரு நடிகன் தலைக்கும் பாத்திரத்துக்கும் உள்ள சமநிலையை நன்கு பேணிக் கொள்வான்.

இந்தப் பிரச்சினையைப் பார்வையாளர்கள் என்ற முறையில் நோக்காமல், நடிகர் என்ற நிலையில் நின்று நோக்கும் பொழுதுதான் உண்மை புலப்படும்.

பார்வையாளரைப் பொறுத்தவரையில் அவர்கள் மேடையில் காணவேண்டுவது நடிகனையல்ல பாத்திரத்தையே. குறிப்பிட்ட நடிகன் குறிப்பிட்ட பாத்திரத்துக்கான வாகனம் என்பதை நடிகனின் பட்டியலிலும், நாடகத்தின் இறுதியிலும் கண்டுகொண்டுள்ளனர். பாத்திரம் என்பதை மறந்து. நடிகன் என்பதை மாத்திரமே நினைக்கவேண்டி ஏற்பட்டால், அந்த நடிகனின் நடிப்புத் தோல்வியடைந்து விட்டதே என்பது கருத்து.

இதனைக் கூறுவதினுல் எல்லா நடிகர்களும் ஒரே பாத்திரத்தை ஒரே முறையில் நடித்துக் காட்ட வேண்டும் என்னும் கருத்து ஏற்பட்டுவிடக் கூடாது. நடிகன் அப்பாத்திரத்தின பண்புக்களை எடுத்து விளக்குபவனுக (இன்டர்பிறிற் பண்ணுபவனுக) இருக்கலாம். அத்தகைய நடிப்பே தலைசிறந்த நடிப்பாகும்.

7. வினு: இன்றைய நாடக விமர்சனங்கள் எல்லாம் 'அரைத்த மாவை அரைக்கும்' ஒரே பாணியில்தான அமைகின்றன என்று ஒரு பரவலான கருத்து நிலவுகின்றது. இக்கூற்றில் உண்மை இருக்கின்றதா? அப்படியாயின் எவ்வகையான விமர்சனம் நாடக வளர்ச்சிக்கு ஆக்கம் தர முடியும்?

விடை:

வித்தி: நானும் ஒரு நாடகத் தயாரிப்பாளர் என்ற முறையில் இந்த விஷயத்தில் கருத்துத் தெரிவிக்கையிற் சற்றுக் கவனமாகவே இருக்கவேண்டும். பொதுவாக மேலோட்டமாகச் சொல்லுவதானுல், இன்று நல்ல நாடக விமர்சகர்களைக் காண்பது அரிதாகவுள்ளது. விமர்சனம் செய்யவேண்டி நேருமிடத்துச் சிலர் தாம் நாடகத் துறையிலும் விமர்சனத் துறையிலும் புலிகள் என்பதைக் காட்டவேண்டுமென்ற நோக்கத்தை முதலாவதாகவும், சம்பந்தப்பட்ட நாடகத்தை விமர்சிப்பதை இரண்டாவதாகவும் கொண்டு விமர்சனம் எழுதுகின்றனர். இன்றைய நிலையில் ஒரு விமர்சகன் தமிழ் நாடக வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, அதேவேளையில் நாடகாசிரியரும், நடிகரும், நாடகத்துறையின் பிற கலைஞரும் இன்றி நாடகம் வளர முடியாதென்பதை உணர்ந்துகொண்டு, நாடக விமர்சனம் எழுதுவது விரும்பப்படத்தக்கது. எத்தனையோ நாடக ஆசிரியர்களை, எத்தனையோ நடிகர்களைக் கொலைசெய்தேன் என்று பெருமை கொள்ளாது, பல நாடக ஆசிரியர்களையும் கலைஞர்களையும் அவர்களின் குறைகளைப் பண்பான முறையிற் சுட்டிக்காட்டி, நாடகத்துறை வளர்ச்சிக்குத் தொண்டாற்றினேனென்ற மனத் திருப்தி விமர்சகனுக்கு இருக்க வேண்டும்.

தம்பி: ஈழத்துத் தமிழ் நாடகத்தைப் பொறுத்தவரையில் விமர்சனங்கள் எதுவும் இல்லையென்பதே எனது அபிப்பிராயம்.

இலக்கிய விமர்சனம் போன்று நாடக விமர்சனமும் தனிப்பட்ட ஒரு துறை. நாடக விமர்சனத்தை நாடக விமர்சகன் மாத்திரமே நன்ருக எழுதலாம்.

யாரோ நடாத்திய நாடகம்பற்றி, பத்துப் பதினைந்து நாட்களுக்குப்பின் வேறு யாரோ எழுதும் 'கல்வெட்டு' வாசகம் நாடக விமர்சனம் ஆகாது.

நாடகத்தின் (நாடக இலக்கியத்தின்) அமைப்பு, பண்புக்கள் ஆகியனவற்றையும், நடிகர்களின் இயல்பு, நடிப்புக்கலையின் ஆற்றல்ஆகியனவற்றையும், வேடப்புனைவு, ஒலி, ஒளி, இசை, மேடையமைப்புக்களின் அடிப்படை, அவற்றின் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தும் திறன்பற்றிய அறிவு ஆகியனவற்றையும், நெறியாளனின் கடமை, திறமை ஆகியனவற்றையும் நன்கு அறிந்துள்ளவனே நாடக விமர்சகன் ஆவதற்குத் தகுதியுள்ளவன்.

எனவே 'மொத்தத்தில் கூறுவதானுல்' நாடக விமர்சனம் இன்னும் எம்மிடையே வளராத கலையாகும்.

நல்ல நாடகங்கள் வளர, நாடக விமர்சகர்கள் அத்தியாவசிய தேவையாகும்.

*With the Best Compliments*

*of*

# V. T. V. Deivanayagam Pillai & Co.

IMPORTERS & EXPORTERS

*Distributors for products of*

**B. C. C. LTD., O. C. C. LTD. & B. C. M. LTD.**

37, 5th Cross Street,

COLOMBO - 11

Telephone No.: 23105, 31741 Telegrams: 'DEIVOO'



*With the Best Compliments*

*of*

# GLOBE COMMERCIAL COMPANY

INDUSTRIAL DIVISION

*Manufacturers of*

# ATLAS METAL FILLER

98, 4th Cross Street,

COLOMBO - 11

*Cable:* "LYSWAL"
*Phone:* 26739

# பேட்டி

## "இலங்கை அறிவு இயக்கத்தைச் சந்திக்கின்றோம்"

இடம் - கிறான்பாஸ், கொழும்பு ஐரோப்பிய கொம்பனியொன்றின் அழகிய மாடிக் கட்டிடம். இதுவேதான் இலங்கை அறிவு இயக்கப் பொதுச் செயலாளர் திரு. வேல் அமுதலிங்கத்தின் வசிப்பிடம். ஆதவன் மெல்ல மெல்லக் கீழ்வானம் நோக்கித் தாழ்ந்து கொள்கின்றான். மாலை வெய்யில் என்னும் வண்ணப் பூந் துகில் நிலமங்கையின் நீலமேனியை மூடி அழகுசெய்கின்றது. இதமான இவ்வேளையில் மருதானை தொழில் நுட்பக் கல்லூரித் தமிழ் மன்றத்தைச் சேர்ந்த மூவர் திரு. வேல் அமுதலிங்கத்தைச் சந்திக்கின்றோம்.

மூவரும்: வணக்கம் அண்ணா!

அமுத: வணக்கம் தம்பிமாரே! 'என்ன இந்த நேரம், சொல்லாமற் கொள்ளாமல் வந்திருக்கின்றீர்கள்? மும்மூர்த்திகளாகச் சேர்ந்து வந்திருக்கின்றீர்கள்! உட்காருங்கள்.

உறுப். 1: முன்னரே சொல்லாமல் வந்ததையிட்டு மன்னிக்கவேணும் அண்ணா. நாம் இலங்கை அறிவு இயக்கத்தைப் பற்றிப் பேசவே வந்துள்ளோம்.

அமுத: அப்படியா! மகிழ்ச்சி. இயக்க அலுவலாகவென்றால் எப்பொழுதும் வரலாம். சொல்லிவைத்து வரவேண்டிய தேவையுமில்லை ..... சரி! எதை அறிய விரும்புகின்றீர்கள்?

உறுப். 1: 'அறிவகம்' என்பதுதானே உங்கள் இயக்கத்தினது பெயர்? அந்தப் பெயரை மாற்றியது உண்மையா? இன்றைய பெயர் என்ன? ஏன் மாற்றினீர்கள் என்பதைத் தெரிவிப்பீர்களா?

அமுத: எமது இன்றைய பெயர் 'இலங்கை அறிவு இயக்கம்' அறிவகம் என்பது பலராலும் உபயோகிக்கப்படுமொன்றாகி விட்டதாலும்; எமது நோக்கம், குறிக்கோள்களுக்கு இலங்கை அறிவு இயக்கம் என்ற பெயர் பெரிதும் பொருத்தமாகவிருப்பதாலும் இம் மாற்றத்தைச் செய்தோம்.

உறுப் 2: உங்களது நோக்கம், குறிக்கோள்கள் எவை எனக் குறிப்பிடுவீர்களா?

அமுத: அறிவொளி ஏற்றலே எமது முக்கிய நோக்கம். அறியாமைக் கெதிராகப் போரும் தொடுப்போம். அறிஞர்களைக் கௌரவிக்கத் தவறமாட்டோம்; முடிந்தளவு ஆதரவும் அளிப்போம். அறிவு ஆக்கப் பணிகள் மலர ஆவன செய்வோம். அதாவது, எமது முயற்சிகள் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துமேயானால், நாம் மிகவும் திருப்திப்படுவோம்.

உறுப். 3: இயக்கம் இதுவரை எத்தனை ஆண்டுகளாக இயங்கிவருகின்றது?-

அமுத: இது எமது ஆறாவதாண்டு.

உறுப். 2: இயக்கம் ஆறாண்டாகியும், இப்போது சில மாதங்களாகவே மக்கள் மத்தியில் அறிமுகமான தொன்றாகவிருப்பது எப்படி?

"உங்கள் உரையாடலைச் சில நிமிடம் பிற்போட வைப்பதை மன்னிக்கவேண்டும்" என்றவாறு திருமதி வேல் அமுதலிங்கம் தேநீருடன் வந்தார்.

"தேநீர் உரையாடல் ஓட்டத்திற்குப் 'பெற்றோல்' போன்றது. வரவேற்கின்றோம்."

அனைவரும் சிரிக்கின்றோம். உரையாடல் மீண்டும் தொடர்கின்றது.

அமுத: தேநீர் அருந்திவிட்டீர்கள்தானே கேள்விக்கு மறுமொழி தருகின்றேன்.

எமது இயக்கம் இவ்வாண்டு ஆறு வயதை அடைந்திருக்கின்றது; இருந்தும், நாம் இதுவரை பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கும் பணிகளில் ஈடுபடவில்லை என்பது உண்மைதான்;

ஆரவாரத்தையும், சலசலப்பையும் விரும்பாதவர்கள் நாம். அடக்கமாக ஆக்கபூர்வமான அறிவுப் பணிகள் ஆற்ற விரும்புகின்றோம். எமது இயக்கம் பொதுமக்கள் மத்தியில் மெதுவாக அறிமுகமாவதற்கு இது காரணமாகவிருக்கலாம்;

நாம் மாதாமாதம் கருத்தரங்குகள்—கலந்துரையாடல்கள் — ஆய்வரங்கங்கள்—பட்டிமன்றங்கள் நடத்தியுள்ளோம்; இவற்றில் உறுப்பினர்களும், நண்பர்களும், அறிஞர்களும் கலந்து பயனடைந்துள்ளனர்.

உறுப். 2: உங்கள் உறுப்பினர்களைப் பற்றி ......

அமுத: சொல்லுகின்றேன்... நாம் ''கன எலி சேர்ந்தாற் புத்தெடுக்காது''; இந்தப் பழமொழி புகட்டும் உண்மையை மனதிற்கொண்டு அளவான உறுப்பினர் தொகையையே வைத்திருக்க விரும்புகின்றோம். தகைமைகளை நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்து—போக்கினையும் இயன்றளவு புரிந்துகொண்டு ஏற்றவர்களுக்கு மாத்திரமே அங்கத்துவம் வழங்குகின்றோம்;

வேறு விதமாகச் சொல்ல வேண்டுமானல், எமது உறுப்பினர்கள் இலட்சியப்பிடிப்பு—அறிவுப் பணி ஆற்றும் துடிப்பு மிக்கவர்கள் எனலாம். மூளைக்கும் நாவுக்கும்—நாவுக்கும் நடத்தைக்கும் இணைப்புடையோரே நாட்டை வழி நடத்த ஏற்றவர் என நாம் நம்புகின்றோம். ''உனக்கில்லையடி ஊருக்குபதேசம்'' எனும் 'ஆண்டிப் பண்டாரங்கள்' சமுதாயத்துக்கு ஏற்றவரல்ல. தாமே வாழ்ந்து காட்டி, வாழும் வழி இதுவே எனக் காட்டியவரே காந்தி மகாத்மா, வாழவழி வகுத்த வான்புகழ் வள்ளுவனும் அப்படித்தானே செய்தார்! அதையே நாம் நம்புகின்றோம். சுருக்கமாகச் சொன்னல் நல்லவரும் வல்லவருமானவரே எமது உறுப்பினர்;

இவர்கள் 'உள்ளூர்' 'வெளியூர்' என இரு வகையினராகவுளர். உள்ளூரினரே இயக்கத்தில் நேரடியாகப் பங்குபற்றிக் கொண்டு நடத்துவோர்;

எமது அலுவலர்கள் ஈராண்டுக்கு ஒரு தடவை தெரிவு செய்யப்படுகின்றனர். காவலரும், ஆலோசகரும், பெருந் தலைவரும் ஐந்தாண்டுக் கொருமுறை தெரிவு செய்யப்படுகின்றனர்;

காவலர் மறுப்பாணை அதிகாரி. அனைவராலும் இரகசிய வாக்கெடுப்பாற் தெரிவு செய்யப்படுவர்.

கேட்காத விடயங்கள் பற்றியும் சொல்லி விட்டேன், இல்லையா?.

உறுப். 3: அப்படியல்ல, அண்ணு! இவை பற்றி கேட்க வேண்டுமெனவே இருந்தோம். நீங்களாகவே சொல்லியதையிட்டுச் சந்தோஷம். வள்ளுவனுரைப் பற்றிக் குறிப்பிட்டபோது ஒரு ஞாபகம் உதித்தது. நீங்கள் வள்ளுவர் விழாக்கள் எடுக்கும் காரணம்?

அமுத: வள்ளுவத்தைப் பரப்பும் நோக்கமே. இவற்றைத் தொடர்ந்து விஞ்ஞான விழாக்கள் — இலக்கிய விழாக்கள் என்பனவும் எடுப்போம். சமூகச் சீர்கேட்டைத் தீர்ப்போம். இலவசப் பாடசாலைகள் அமைப்போம். ஏழை மாணவர்களை ஆதரிப்போம்.

உறுப். 2: உங்கள் இயக்கம் அரசியலில் ஈடுபடாதததுதானே? அது எப்படி?

அமுத: அரசியலில் மட்டுமல்ல, மதவிடயங்களிலும் தலையிடாது. அரசியல், மத ஸ்தாபனங்கள் அரசியல், மத வேலைகளைச் செய்துகொண்டே இருக்கட்டும்! அரசியல், மதம் தவிர்ந்த பிரதேசத்தில் ஆற்ற முடிந்த அறிவுச் சேவையை ஆற்றுதலே எமது இலட்சியம்.

உறுப். 1: எங்கள் மன்ற ஏடான 'தமிழருவி' மூலம் சிறப்பாக எதனைச் சொல்ல விரும்புகின் றீர்கள்?

அமுத: தமிழ் மன்றத்திற்கும், அறிவியக் கத்திற்கும் நிறைவான நட்புண்டு. எமது நட்பைக் காக்கவும் - வளர்க்கவும் வேண் டும் என இரு தரப்பினரையும் இறைஞ் சிக் கேட்கின்றேன்.

இயக்கம் புத்தக வட்டம், அறிவு வட் டம், கலை வட்டம், சேவை வட்டம் என நாலு வட்டங்களை உள்ளடக்கியுள்ளது. புத்தக வட்டம் புத்தகங்களை வாசகர் களுக்கு இரவலாகக் கொடுப்பது. அறிவு வட்டம் அறிவு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வது. கலை வட்டம் கலைகள் மூலம் அறிவைப் பரப்புவது. சேவை வட்டம் அறிவுச் சேவை செய்வது. இவ்வட்ட வேலைகளில் ஆர்வமுள்ளவரைப் பங்கு பற்ற வைத்துப் பயனடையச் செய் யுங்கள்.

இயக்க செயற் திட்டங்களுக்குப் பொது மக்களின் ஆதரவைத் தேடித்தந்து உதவி யளியுங்கள். வேறு எமது அறிவு ஆக்கப் பணிகள் வெற்றியளிக்க அறிஞர்கள்—கலைஞர்கள் கவிஞர்கள் அனைவரும் கைகொடுக்க வேண்டும். சிந்தனையாளர் — அறிவாளர் எமக்குச் சீரிய சிந்தனைகள் தந்து வழி நடத்தல் வேண்டும். இவை எமது சந் திப்பின் விளைவுகளாகுமென நம்புகின் றேன்.

உறுப். 1: சொல்லாமற் பறையாமல் வந்து உங்கள் பொன்னான நேரத்தை எடுத் தமையைப் பொருட்படுத்தாமல், எமது கேள்விக்குப் பதிலளித்தமைக்கு மன மார்ந்த நன்றியை மன்றச் சார்பில் தெரிவிக்கின்றேன். மன்றம் உங்கள் முயற்சிகளுக்கு முடிந்தளவு உதவிகள் அளிக்கும் என்பதையும் மகிழ்வோடு தெரிவிக்கின்றேன்.

நன்றி அண்ணா!

⁂

## நவீன பக்தகோடி

சடை வளர்த்து
கழுத்து மாலை
கைக் காப்பு
தவசிபோலத் தரித்து
ஆண்டவன் சந்நிதானத்தில்
நெரிசலில் பாவைகளின்
மார்பகங்கள் வருட
வீதிவீதியாக ஓடியலையும்
ஜெந்து.

—கரவைக் கதிர்

எமது வாழ்த்துக்கள்
உரித்தாகுக.

கோமதி விலாஸ்
சைவ ஹோட்டல்

142, செட்டியார் தெரு.
கொழும்பு

Prop :
S. NAMASIVAYAM
*Justice of Peace*
Jaffna District

*With Best Compliments*

*of*

New Lalitha Stores

204, WARD PLACE,
COLOMBO—8

Visit for the

TIP-TOP

Tailoring

Fittext

18, GRAND BAZAAR,
JAFFNA

*Work Shop:*
4. JUMMAH MOSQUE LANE
JAFFNA.

தமிழருவிக்கு எமது வாழ்த்துக்கள்.
அழகான அச்சு வேலைகள்
வண்ணம் மிகு பெட்டிகள்
இவைகளுக்குச் சிறந்த இடம்

விஜயா அழுத்தகம்

209, பழைய சோனகத் தெரு,

கொழும்பு—12

தொலைபேசி இல. 32816

# VALUATION – ITS IMPORTANCE IN SOCIETY

M. Nadarajah, B. Sc. (*Ceylon*),
B. Sc. Estate Management Part I (*London*)
F. R. I. C. S. (*Eng.*), Chartered Surveyor, Retired Senior Assistant Govt. Valuer.

The profession of valuation is to ascertain value of any subject whether tangible or intangible. This method of assessment has always existed in any civilised society. Without a valuation it is not possible to form a correct judgement on any matter. But the subject of valuation in its narrowest sense is confined to ascertaining the value—normally market value.

This exercise in the primitive form of society consisted of gathering a knowledge of values and applying the knowledge to ascertain the value of an object whose value is not known.

As society progressed and the modes of life became complicated the profession of valuation also expanded with multifarious assets being created and man had to obtain a specialised knowledge in order to ascertain the value.

Value always resulted from an interaction of many forces which can be classified as economic forces, social forces and the impact of legislation on these forces. Therefore the subject of valuation would demand a comprehensive knowledge of a spectrum of subjects such as economics, social sciences, law relating to land and other related legislation. Together with this the valuer must also have a knowledge of building construction, engineering, drainage and sanitation, town planning, estate development, etc.

Over the years therefore what was originally a mere matter of acquainting one with a knowledge of value developed into a science and art. It is a science because of the necessity to have a comprehensive knowledge of various branches of knowledge; it is an art because valuation does not end with a collection of necessary data or the knowledge of the asset which one is valuing but primarily depends on the ability of the valuer to draw correct inference and conclusions from the knowledge he has collected for a particular job. This is the crux of the valuation problem. It depends very largely on the judgement, power and intuitive ability of the valuer. It can therefore be readily seen that valuation is not a mere arithmetical calculation but rather the formulation of a studied opinion based on knowledge and inferential ability. It is not always that a valuer will have evidence which he can prove but even when there is lack of evidence his inferences can be quite correct. That would be the acme of achievement in the profession.

Why has valuation become an important subject in current society? The main asset which the valuer has to contend with this land and as society advanced the use of land also increased. The value of a land is not for its physical characteristics but for the use it can be put to or its being put to. Immediately therefore

it can be seen that a particular piece of land will have value for a particular use and this can be different for different uses. Value is also an ephemeral thing as it changes with time. Value also depends on the circumstance and time.

The multifarious use of land as a basis for everything that man does on this planet makes it an important asset, the income which flows from which is the subject matter of Government taxation. The importance of valuation lies here. Various countries have collected taxes in various forms using land as the object of taxation. At a Local Government level it is used to raise revenue, to provide services for the city dweller. In an advancing society lands are used for public purposes which are a million and it has become necessary to purchase land compulsorily from private citizen and devote it to such purposes. As a principle of distribution of wealth, taxes such as Wealth Tax, Estate Duty etc., are levied by Government. These again depend on the value of land. It can truly be said that there is no sphere of Governmental activity in which land is not taxed in one form or the other.

In a socialistic society where the demand is to satisfy the needs of the common man, the concentration of land in a few hands has always been held to be against democratisation and therefore in such a society the proper method of redistribution, the proper method of eliminating over-concentration is always done through various fiscal policies. One of the basic needs of such exercise is to evaluate the sources of gain in terms of money.

These are a few random thoughts as to the importance of valuation in contemporary society.

*

## துரைத்தனம்

செல்வாக்கு மிக்கோர்
தங்காமல் தரியாமல்
புறக்கதவால் 'காரியம்'பெற
'செல்லாக்காசு' நாம் காலையில் கியூவில்
தவங்கிடந்து மாலைவரை காத்து
ஏமாற்றம் அடைந்த ஒருவர் குறைசொல்ல
அதிகாரியிடம் அணுக
'குழப்பம்' எனச் சாடி
போலிசைக் கூட்டி
அச்சுறுத்தி விரட்டிவிட்ட
'நிர்வாகம்' தெரிந்த அதிகாரி.

—கரவைக் கதிர்

# உலகம் உய்ய உயிர்த்தெழுந்தார்

அருள் திரு. டி. ஆர். அம்பலவாணர்

He was born in an obscure village. He worked in a carpenter shop until he was thirty.. ... He then became an itinerant preacher. Nineteen centuries have come and gone and today he is the central figure of the human race......... All the armies that ever marched all the navies that ever sailed all the Parliaments that ever sat and all the Kings that ever reigned have not affected the life of man on this earth as much as that......

உலகம் உய்யக் கிறிஸ்து பெருமான் உயிர்த்தெழுந்தார் என்பதை நினைவு கூர்ந்து, உயிர்த்தெழுந்த திருநாளைக் கொண்டாடுகிறோம். உயிர்த்தெழுதலும், உயிர்த்தெழுந்த நம்பெருமானும் நமக்களிக்கும் நற்செய்தி யென்ன?

கிறிஸ்தவ திருச்சபை கொண்டாடி வரும் திருவிழாக்கள் யாவற்றிலும், பூர்விகமானதும், அதன் ஆதிப் பற்றுறுதிக்கு நெடுங்காலமாய் நடுநாயகமாயிருந்து வருவதும் உயிர்த்தெழுந்த திருவிழாவே. மேலும் ஞாயிற்றுக்கிழமையைக் கிறிஸ்தவர்கள் தம் வழிபாட்டுக்குரிய முக்கிய நாளாகக் கொண்டாடி வருவதின் காரணம் அந்நாளில் இயேசுபெருமான் மெய்யாகவே உயிரோடெழுந்தாரென்று ஆதிக் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் விளைவே. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவில் உள்ள பற்றுறுதியே கிறிஸ்தவ சமயத்தின் ஆக்கபூர்வமான பிறப்பிடம்.

இத்தகைய சிறப்பியல்புகள் கொண்ட இப் பண்டிகை ஏற்ற முறையில் கொண்டாடப்படுவதில்லை. "கிறிஸ்மஸ்" விழாவையே முக்கிய விழாவாகக் கொண்டாடப் படுகிறது. மக்களில் இறைவன் அன்பு கொண்டு, அவர்களை மீட்க இறங்கி வந்தார் என்பதே "கிறிஸ்மஸ்" தரும் செய்தி. ஆனால், உயிர்த்தெழுந்த திருநாள் தரும் செய்தி, நமது பாவமீட்புக்கென்று கிறிஸ்து பெருமான் செயற்படுத்திய திருச்செயல்; அவர் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்ததின் மூலம் பூரணமடைந்தது என்பதே;

கிறிஸ்தவ திருமறையின் புதிய ஏற்பாட்டை நாம் ஆயுங்கால், உயிர்த்தெழுந்த சம்பவம், ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு உண்மையான நிகழ்ச்சியும், ஆழ்ந்த கருத்து நிறைந்ததாயு மிருந்ததெனக் காணலாம், கிறிஸ்து நமது மீறுதல்கள் நிமித்தம் ஒப்புக் கொடுக்கப்பட்டார்; பின்னர், நாம் நீதிமான்களாகத் தீர்க்கப்படுவதற்கென்று எழுப்பப்பட்டிருக்கிறார். "கிறிஸ்து எழுப்பப்படாவிட்டால், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருக்கிறவர்களாவீர்கள் (1 கொ. 15:17)" எனப் புனிதர் பவுல் அடியார் கூறுவதும் இதனையே வலியுறுத்துகிறது. இதுவே, உயிர்த்தெழுதலைப்பற்றி ஆதித் திருச்சபை கூறிவந்த செய்தி.

இச்செய்தியினால் கவரப்பட்ட தமிழ்ப் புலவர் திரு. வீ. க;

"அன்பினால் யாக்கை ஏற்ற
ஐயனே! போற்றி போற்றி
மன்பதை பாவந் தீர்க்க
மரித்தவா! போற்றி போற்றி
இன்புற உயிர்த்தெ ழுந்த
ஈசனே! போற்றி போற்றி
என்பிழை பொறுக்கும் ஏசு
எந்தையே! போற்றி போற்றி"

என நெஞ்சுருகிப் பாடுவதைக் காண்க.

கிறிஸ்து பெருமான் கடவுளின் பிரதிநிதியாக மாத்திரமல்ல, கடவுளின் சமுகத்தில் நமது பிரதிநிதியாகவும் கிரியைசெய்து வருகிறார். இந்த உண்மையை நாம் நம்முள்ளத்தில் பதியவைக்கும் போதுதான், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் ஆழ்ந்த கருத்துப் பொதிந்துள்ள தென்பதை நாம் உணர முடியும்.

கிறிஸ்து பெருமான் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்து உலகிற்குள் திரும்பி வந்தபோதுதான், மனித இனத்துடன் அவருக்குள்ள நெருங்கிய உறவு, திரும்பவும் நிலைநாட்டப்பட்டது. தாம், நமது பதிலாளியாயிருப்பதாகக் கிறிஸ்து சாதித்ததைக் கடவுள் அவரை மரணத்திலிருந்து எழுப்பினதினாலே, பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால், அவர் தமது உடலில் இவ்வுலகத்தோடு கொண்டிருந்த இடையறாத உறவு, இம்மைக்குரிய நமது முழுவாழ்வையும் மறுரூபப்படுத்துகின்றது என்பதை அறிக.

'உலகெலாம் உய்ய வேண்டி உருக்கொடு மண்ணில் வந்து, நலமிகு உவமையாலே ஞான சீலங்கள் உரைத்து, கலகமுங் கரவுக் கொண்ட கண்ணிலாப் பேயைச் சாய்த்த அலகிலா ஒளியாகிய இயேசு பெருமானின் உயிர்த்தெழுதல்' சிலுவையின்மேல் அவர் கிருபையால் பட்ட பாடுகளின் வழியாய், நாம் இறைவனின் பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உறுதி அளிக்கும் முத்திரையாகும்.

உயிர்த்தெழுந்தபின் கிறிஸ்து பெருமான் தமது சீடரை நோக்கி மொழிந்த அருள்மொழி ''அஞ்சாதீர்'' என்பதே. அடியார் தம் வாழ்வின் ஒவ்வொரு நெருக்கடியான கட்டத்திலும் இவ்வருள்மொழி கூறப்பட்டுள்ளதென்பதைத் திருமறையில் நாம் காண்கிறோம். உயிருள்ள இறைவனிடம் உறவுகொள்ள மனிதன் அஞ்சும்போது, தூய்மையும் மகத்துவமுமுள்ள கடவுளின் திருமுன் அவன் நிற்கும்போது, நேற்றும் இன்றும் என்றும் மாறாத உயிருள்ள எம் பெருமான், அன்று மட்டுமல்ல இன்றும், பற்பல நெருக்கடிகளின் நடுவில், மனவேதனையுடன் வாடிவதங்கி - நம்மை நோக்கி ''அஞ்சாதீர்'' என்று தேற்றினார்.

அன்று அச்சம் மிகுதியால், அடங்கியிருந்த அடியார்க்கு ஆதரவளித்த எம் பெருமான், இன்னும் நம்மருகில் உயிருள்ளவராய் நின்று 'முடிவுவரை உங்களுடன் கூட இருப்பேன், நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை' என உறுதியளித்து வழிநடத்த ஆயத்தமாய் நிற்கிறார். இதனை உணர்ந்து,

''உயிர்த்தெழுந்த தனியரசே,
கிறிஸ்துவே ஆத்தும நாயகரே,
மரணத்தின் மீது வெற்றி கண்ட வேந்தரே,
என் இதயாசனத்தை உமக்களிக்கின்றேன்
அதை நீர் உமது
சிம்மாசனமாகக் கொண்டருள மாட்டீரா?
இங்கு உம்முடைய ஆட்சியே நடைபெறட்டும்;
இடைவிடாமல் என்னைக்
கழுவித் தூய்மை செய்துகொண்டே இருக்கிற
உமது சிலுவைச் செழுங்கோலம்,
என் தெய்வமே,
என்சிந்தை விட்டகலாதிருக்க அருள் செய்வீராக.
கன் மலையின் வெடிப்புகளைத்
தனக்கு அடைக்கலமாகக் கொள்ளுகின்ற
காட்டுப்புறாவைப் போல,
என் நேசரே,
உம்மை நோக்கிப் பறந்து வருகின்றேன்,
உமது காயங்களில்
எனக்கு அடைக்கலம் உண்டு.
அங்கிருந்து பாய்கின்ற செந்நீரில்தான்
எனக்கு உயிருண்டு. என் மீட்பரே,
உம்மை வணங்குகின்றேன், போற்றுகின்றேன்,
மனதாரத் துதிக்கின்றேன்.

என உயிர்த்தெழுந்த உத்தமரை நாடி வருவோம் வாரீர்.

❀

## காதல்

தெய்வீகம் பாய்ச்சி
புனிதம் சூட்டி
தியாகம் காட்டி
தித்திக்கும் மொழி குழைந்து
'அமர காவியங்கள்' பல புனைந்து
சதைக் காம இச்சைக்கு
முலாம் பூசிடும் வார்த்தை.

—கரவைக் கதிர்

# நிறைந்த நாகரிகம்

நகரம் என்ற பெயரடியாகப் பிறந்த தத்திதாந்தம் நாகரிகம் என்பர் வடமொழி இலக்கணகாரர். சங்க காலத்தே கண்ணோட்டம் என்ற பொருள் குறித்து வழங்கப்பட்டது. இலக்கியமெனும் தமிழருவியில் நீந்திச் செல்பவன் அங்கு மனம் சிந்தும் மலர்களாகத் திகழும் நாகரிகத்தையெல்லாம் நுகர்ந்து செல்லலாம்.

## ஆட்சியில் நாகரிகம்:

ஒருமைந்தன் தன்குலத்துக்
குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிசெல்கை
கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி
உறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி
அரிதோமற் றெளிதோதான்”.

தனக்கொரு நீதி மற்றோர் இனத்திற்கொரு நீதியென்று உணர்ந்தானில்லை, பசுவின் கன்றுக்காகத் தன் மகனையே தேர்ச்சில்லினால் கொன்ற மனுநீதிகண்ட சோழன். ‘வேல் அன்று வென்றி தருவது மன்னவன் கோல் அதூஉம் கோடாது எனின்’ என்கிறார் செந்நாப் போதார், ‘நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகப்’ என்று வழிகாட்டுகின்றது புறநானூறு: தன்னாட்சியில் தாவரத்திற்குக் கூடத் தன் உதவி கிட்டவேண்டுமன்றோ: முல்லைக்குத் தேர்கொடுத்தான் பாரி: தானுண்டு என்றிராமல் ஆட்சியில் நீதி தவறும் போதெல்லாம் நீதியை நிலைநாட்டினர் தமிழர். தன் கணவன் கள்வனல்லன் என்று அரச சபையினில் அறிய வைத்தனள் கண்ணகி; புலவர்களாலும் புரவலர்களாலும் மன்னராட்சி காலங்களில் புகழப்பட்ட ஆட்சி நாகரிகம் இன்றைய உலகில் திசைமாறிச் செல்வதை உணரலாம்;

## கற்பு:

தமிழர் நாகரிகத்தில் கற்பு மிகவும் பிரதான இடத்தைக் கொண்டிருந்தது. உடன்கட்டை ஏறும் வழக்கம் அன்றிருந்தது. சமுதாய மாற்றங்களுக்கேற்ப மூடப்பழக்க வழக்கங்களெனக் கருதினாலும் இல்லறத்தில் மனைவியின் நிலையை இவை எடுத்துக் காட்டுகின்றன. இன்றைய விட்டுக்கொடுக்கும் சமுகத்தில் (Permissive Society) கற்பிழந்தவளும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டுமென்ற நாகரிகம் புதிய அலையாக வருகிறது. சூழ்நிலைக்கு அமைய ஓரளவு ஏற்றுக் கொண்டாலும் முற்றாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நாகரிகமானால் ஆடை மாற்றுவதுபோல் ஆடவர்கள் மாற்றப்படவும் இடமுண்டு. ‘சீதை மேனியைப் புல்லலாம்’ என்று கருதிய இராவணர்கள் உருவாகி விடவும் கூடும். சீதையின் கற்புநெறிக்கு அக்கினியே பயந்தது: கண்ணகியின் கற்பு மதுரையை எரித்ததன்றோ! திரௌபதைக்குத் துகில் துகிலாகக் கொடுத்து மானங்காத்தனன் மாதவன். சினங்கொண்ட வீமன் துச்சாதனனின் குருதியைக் களத்திலே குடித்தான். ‘பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்புஎனும் திண்மை உண்டு ஆகப் பெறின்!’ என்ற கூற்றும் வள்ளுவனின் நாகரிகமன்றோ. நாம் விரும்பும் நாகரிகம்: ஆணா பெண்ணா என்றறியாத உடைகளோ அல்லது மினிஸ்கேட் என்ற கவர்ச்சி உடைகளோ ஏற்றுக் கொள்ளக்கூடிய நாகரிகமாகுமானால் இறைவன் பெண்ணைப் படைத்தனன் கவர்ச்சிப் பாவையெனக் கருதியே என்ற நாகரிகம் ஏற்றுக் கொள்ளப்படும் ஒன்றாகிவிடும். சந்திரமதியின் தாலி அரிச்சந்திரனுக்கு மாத்திரம் தெரிந்தது: என்னே! கற்புநெறி பரிந்து ஓம்பிக்காக்கும் ஒழுக்கம், மாண்புடைய கொழுநன் தொழுது எழும் பெண்ணிடமே உண்டு.

## பொது:

மேல் நாட்டினர் அறம் வளர்க்கும் ஆன்மீக இன்பம் பயக்கும் எமது நாகரிகத்தை விரும்பும் வேளையிலே, நாம்

# NEW VICTORS

**For all kinds of Electrical Works**

அவுட்போட்
தண்ணீர் இயந்திர மக்னெற்றோ,
கொயில் றீ வைன்டிங்

மற்றும்

றேடியோ மின்சார வேலைகளும்
நிபுணர்களால் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

## நியூ விக்ரேஸ்

(குளிரூட்டப்பட்டது)

**23, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# RAJU STORES

*Dealers in :*

**All Kinds of Essences**
**Liquid and Powder Colours**

**Scent, Labels, Corks, Gas, Acid, Water Pump, Electric Motors, Rice-Hullers. Grinders, Cycle, Spair Parts, Fancy Goods, Sports Goods, Toys, Sundries Etc, Etc.**

**67, 69, Kasturiar Road,**

**JAFFNA**

*Phone :* **372** *Grams:* **"RAJU"**

*Govt. Approved Manufacturers*

*of*

*

- OIL FILTER
- AIR FILTER
- FUEL FILTER

*

# Steelex Industries Ltd.

**131, New Chetty Street.**

**COLOMBO - 13**

# மற்றா பேணிச்சர்

நவீன வீட்டுத் தளபாட
விற்பனையாளர்

**நயம்! நாணயம்! நம்பிக்கை!**

**தரமான கதிரைகள், அலுமாரிகள்**
**கண்ணாடி மேசைகள்**
**கட்டில்களுக்குச்**
**சிறந்த ஸ்தாபனம்.**

## மற்றா யாழ்நகர்

**87, 137, கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்**

அறனில்லா வழிகளில் மனத்தை இழுக்கும் நாகரிகத்தை நாடுவது நகைப்பதற்கு இடமான ஒன்று. இறைவனையே மயக்கும் தமிழ் இசைத்தென்றல் எங்கே! பொல்லா உணர்ச்சியை உருவாக்கும் பொப் இசைப் புயல் எங்கே! தலை நிமிர்ந்து சிறப்பாக வாழுகின்றேன் என்று காட்டப் பண விரயம் செய்து சீதோஷ்ண நிலைக்கு ஒவ்வாத உடை உடுத்து கிளப்பென்றும், நடனமென்றும் திரிந்து டாம்பீகமாக வாழ்ந்து காட்டுவதுதான் நாகரிகமா?

ஆழ்ந்த சிந்தனை (reflection) என்பது அரிஸ்டாட்டில் கூறும் பகுத்தறிவு நாகரிகம். அறிவு, தீரம், தன்னடக்கம், நேர்மை ஆகியவை பிளேட்டோ கூறும் நல்லொழுக்க நாகரிகம் (Cardinal Virtues). பழம் புறம்பாட்டிலே யாண்டு பலவாகியும் நரைதோன்ருது கவலையற்று வாழக் காரணம் கூறினர் பிசிராந்தையார். மனம் ஒருநிலைப்படாமையே நவீன நாகரிக மோகத்திற்குக் காரணம். கதையிலே பஞ்சப் புலன்கள் குதிரைகளாகவும் உடல் இரதமாகவும் ஒப்பிடப்பட்டுள்ளது. மனமாகிய பாகன் குதிரைகளைக் கடிவாளமிட்டுத் தன் வசமாக்கி இரதத்தைச் செலுத்தினல் வழி நேராகும். அன்பும், ஆனந்தமும், இரக்கமும், சத்தியமும், சமாதானமும் தரும் வழியே நாகரிகம்.

''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்'' என்பதுபோல் வாழ்பவனே நற்பண்புகள் நிறைந்தவனே நாகரிகம் தானே சென்றடைகிறது.

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரன்
அமிர்தம் இயைவதாயினும்......
தமக்கென முயலர் நோன்தாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யாரே"

என்பதைப் பின்பற்றி ஆயன் தன் கழியால் பசுக்களைப் புல்வெளிக்கு ஓட்டிச் செல்வது போல் மூப்பும் சாக்காடும் எம்மைத் துரத்துவதை உணர்ந்து நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை உடைய நிலையற்ற உலகில் அறத்தால், அறிவால், பண்பால், உள்ளத்தால், உயர்ந்த இலட்சியமும் எளிய வாழ்வும் (A simple living and high thinking) நிறைந்த நலன்தரும் நாகரிகத்தைப் பேணுவோமாக.

கந்தையா சிவசுப்பிரமணியம்

※

## திருப்தி

பசியால் துடித்துக் கதறியழும்
பச்சிளம் பாலகனுக்கு
உண்ண உணவின்றி
வற்றிவிட்ட முலையூட்டிக்
குழவியின் பசியைத் தீர்க்கா
நிலைகண்டு வெம்பியழும்
தாயுள்ளம், 'நீ பிறந்த பலன்'
எனக் கூறித் திருப்திகொண்டது.

—கரவைக் கதிர்

※

## முடிவு

சொந்தம் பந்தம் நாடு துறந்து
அக்கரைச் சீமைக்கு ஓடுகிறேன
இங்கே —
என் கெட்டித்தனங்கள்
பெட்டிப்பாம்பாய் மூடப்படுவதினல்.

— மீசாலைச் சந்திரன்

*Space Donated*

*by*

*A Well Wisher*



சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில், குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு, இலங்கைத் தொழில்நுட்பத் கல்லூரித் தமிழ் மன்றத்திற்காக, இதழாசிரியர் கரவெட்டி, திரு. வீரகத்தி கதிரமலை அவர்களால் வெளியிடப்பெற்றது.

—39/4-75

## எமது நன்றிக்குரியவர்கள்

★ நாம் நாடியபோது எமது கோரிக்கைகளை நிறைவேற்றிடும் கல்லூரி அதிபர், பதிவாளர் அவர்களும்

★ எம்மை வழிகாட்டும் உபகாப்பாளர்கள்

திரு. சி. மாணிக்கவாசகர் (விரிவுரையாளர்) அவர்களும்
திரு. பொ. சங்கரப்பிள்ளை (விரிவுரையாளர்) அவர்களும்

★ தம்மரிய ஆக்கங்களை ஈந்து அருவிக்கு அணியூட்டிய பல்துறை அறிஞர்கள், நம்மவர்களும்

★ விளம்பரம் நல்கிய அன்பர்கள், விளம்பரம் சேகரிக்கத் தோன்றாத் துணையாக விளங்கிய

செல்வன் நியூட்டன் ஞானச்சந்திரன்
செல்வன் எஸ். ஜி. நிர்மலானந்தன்
செல்வன் ந. பாஸ்கரன்
செல்வி சந்திரா முத்துக்குமாரசாமி
செல்வன் க. சிறீதரன்
செல்வன் எஸ். சி. சிவாகரன்
சென்வன் க. பேரானந்தம்
செல்வன் எம். எஸ். எம். மஃரூப்
ஆகிய மன்றத் தோழர்களும்

செல்வன் ம. சிவகடாட்சம்
திரு. எஸ். சி. அம்பிகாபதி
திரு. தி. சிவநாதன்
ஆகிய வெளி நண்பர்களும்

★ நிதியுதவிக் காட்சியைச் சிறப்பாக நடாத்த உதவிய சினிமா ஸ்தாபனத்தார், சபையர் படமாளிகை மனேஜர், ஊழியர்களும்

★ நிதியுதவிக் காட்சி ரிக்கெற் விற்பதில் முன்னின்றுழைத்த

செல்வி பிரமிளா யோன்பிள்ளை
செல்வன் பா. பாலகுமாரன்
செல்வன் வி. அவிநாசிநாதன்
செல்வன் சண்முகலிங்கம்
ஆகியவர்களும்

★ மலரைக் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுதவிய திருமகள் அழுத்தக அதிபரும் ஊழியர்களும்

★ பல வழியில் எமக்குத் தோள்கொடுத்த அன்பர் அனைவரும்.

இதழாசிரியர்

## அருவியில் சங்கமித்த தரளங்கள்.....


| | | பக்கம் |
|---|---|---|
| | மன்ற கீதம் ... ... ... .. | iii |
| | சமர்ப்பணம் ... ... ... ... | v |
| | Our Principal Congratulates ...... ... ... | vii |
| | எமது தமிழ்த்தந்தையின் ஆசி ...... ... ... ... | ix |
| | Our Registrar Speaks ... ... ... ... | xi |
| | ஆசிரியர் நெஞ்சம் ... ... ... | xiii |
| | தலைவர் தகவுரை ... ... ... | xv |
| 1. | அடித்தளத்தின் ஆழம் — நாம் அடைய முயலும் இலட்சியம் — செயலாளர் | 1 |
| 2. | ஆளத்தான் போகின்றோம் — வாழத்தான் போகின்றோம் — சரஸ்வதி சிவஞானம் | 6 |
| 3. | கடைச்சங்க காலமுந் தமிழரின் சமூக பொருளாதார வாழ்க்கையும் ... <br> பொ. சங்கரப்பிள்ளை *B. A. (Lond.), B. Com. (Lond.), M. Sc. (Econ.) (Lond.) A. M. Inst. T.* | 7 |
| 4. | சோஷலிசமும் சட்டமும் — N. சத்தியேந்திரா, சட்டத்தரணி | 15 |
| 5. | விஞ்ஞான கை கணி — தா. சோமசேகரம், உதவி நில அளவை நாயகம் | 19 |
| 6. | நீ ஓர் அசல் கோமாளி — வீரகத்தி கதிரமலை ... ... | 23 |
| 7. | மறைந்தும் மறையாதவர் — ஈழவேந்தன் ... ... | 27 |
| 8. | இலங்கைத் தமிழரின் கட்டிடக் கலை <br> வி. எஸ். துரைராஜா, *F. R. I. B. A., A. A. Dipt., F. I. I. A., A. R. A. I. A., F. C. I. A., Diploma in Tropical Architecture, Fellow of the Inst. of Arbitrators* | 35 |
| 9. | பிரதேச அபிவிருத்தி மன்றத்தின் தோற்றமும் அதன் நோக்கங்களும் <br> செ. ஆறுமுகராஜா, அபிவிருத்தி உதவியாளர், மாந்தைப் பிரிவு ... | 39 |
| 10. | தம்பியே தட்டிக்கேளுன்னை — கதிர் பொன்னுத்துரை ... | 42 |
| 11. | தனக்கென்றொரு பாதை — ஜி. என். எஸ். 8 ... | 43 |
| 12. | கோழியும் ஆமையும் — எம். எச். ஏ. ஸமது ... | 51 |
| 13. | நன்மைக்கு நன்மை செய்வது — சந்திரன் ... | 53 |
| 14. | ஆக்க இலக்கியத்தின் அவசியம் <br> வ. இராசையா, தமிழ் விரிவுரையாளர், புனித பெனடிக்ற் கல்லூரி | 57 |
| 15. | நாம், நாடகம் பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு இருவர் அளித்த பதில்கள் <br> பேராசிரியர், கலாநிதி சு. வித்தியானந்தன்; கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி | 61 |
| 16. | பேட்டி : "இலங்கை அறிவு இயக்கத்தைச் சந்திக்கின்றோம்" ... | 69 |
| 17. | **Valuation** <br> M. Nadarajah, *B. Sc. (Cey.), B. Sc. Estate Management Part I (Lond.), F. R. I. C. S. (Eng.), Chartered Surveyor, Retd. Senior Asst. Govt. Valuer.* | 73 |
| 18. | உலகம் உய்ய உயிர் ஈந்தார் — அருள் திரு. டி. ஆர். அம்பலவாணர் | 75 |
| 19. | நிறைந்த நாகரிகம் — உதயா சிவசுப்பிரமணியம் ... | 77 |


திருமகள் அழுத்தகம், சுன்னுகம்